# தவ்ஹீதும் அதன் பிரிவுகளும்

தொகுப்பு:
யூ.கே. ஜமால் முஹம்மத்

மீளாய்வு:
முஹம்மத் அஸ்ஹர்

முதல் பதிப்பு: 1430 - ஹி

# التفصيل في أنواع التوحيد

باللغة التاميلية

إعداد:

جمال محمد بن عمر خطاب

مراجعة:

محمد أزهر

الطبعة الأولى: 1430هـ

# இந்நூல்...

'தவ்ஹீத்' எனும் ஏகத்துவக் கொள்கையிலும், மார்க் கத்தின் அடிப்படையான விடயங்களிலும், கண்டிப்பாக இருந்து, இறுதிவரை அக்கொள்கையில் அறுதியாகவும் உறுதியாகவும் இருந்து, அவ்வுண்மையான கொள்கை யிலேயே எம்மையும், சிறு வயது முதல் வளர்த்தெ டுத்த, எம் அன்புத் தந்தையும், ஓய்வுபெற்ற அதிபரு மான, மறைந்த எம். ரி. உமர் கத்தாப் (றஹி) அவர் களுக்கு இந்நூலை நான் சமர்ப்பணம் செய்கிறேன்.

அல்லாஹ் அவர்களின் குற்றங்களை மன்னித்து, அவர்களின் கப்று வாழ்வை சுவர்க்கத்தின் பூஞ்சோ லையாக மாற்றி, மறுமையில் 'பிர்தவ்ஸ்' எனும், உயர்ந்த சுவர்க்கத்தில் அவர்களை நுழையச்செய்வா னாக. ஆமீன்!.

# முன்னுரை

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

எல்லாப் புகழும் வல்ல அல்லாஹ்வுக்கே!, ஸலவாத் தும் ஸலாமும் அவனுடைய தூதர் மீதும், அவருடைய குடும்பத்தினர், தோழர்கள், மற்றும் ஏனைய நல்லடி யார்கள் மீதும் உண்டாவதாக.

ஒருவன், முஸ்லிம் என்று தன்னை சொல்லிக் கொள் கிறான் என்றால், அவனிடம் குறிப்பிட்ட கொள்கைகள், கிரியைகள் அமைந்திருப்பது அவசியமாகும். அவனிடம் அமைந்திருக்க வேண்டிய கொள்கைகளும், கிரியைகளும், அல்குர்ஆன், ஹதீஸ்கள் குறிப்பிடும் அடிப்படையில் அமையவேண்டும். இல்லையேல் அவன், பெயரளவில் முஸ்லிமாகவும், எதார்த்தத்தில் இஸ்லாத் துடன் தொடர்பில்லாதவனாகவும் கணிக்கப்படுவான். குறிப்பாக அவன் கொண்டிருக்கும், 'அகீதா' என்று சொல்லப்படும் 'கொள்கை', இவ்வழியில் அமைய வில்லையென்றால், அவன் செய்யும் கிரியைகள் கூட, அங்கீகரிக்கப்படாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும்.

எனவே 'கொள்கை' மிகவும் பிரதானமானதும், அடிப் படையானதுமாகும். அதிலும் குறிப்பாக, அல்லாஹ் வைப் பற்றிய நம்பிக்கை விஷேடமானதாகும். ஏனெனில், நம்பிக்கை கொள்ளவேண்டிய அம்சங்க ளில் இது, முதன்மையானது.

எனவே அல்லாஹ்வை உரிய முறையில் அறிந்து, அவனை ஏற்றுக்கொண்டு, தனிமைப்படுத்துவதுதான் தவ்ஹீதின் எதார்த்தமாகும். இந்த வகையில், தவ்ஹீத் என்று சொல்லப்படும், ஏகத்துவம் என்றால் என்ன?, அதன் முக்கியத்துவம் எத்தகையது?, அதனுடைய வகைகள் எத்தனை?, அவற்றுக்கெதிரான கொள்கையின் உண்மை நிலை என்ன? என்பன போன்ற விடயங்களையெல்லாம், தெளிவாக அறிந்து கொள்ள, இந்நூல் ஓரளவு வகைசெய்யும் என்ற நம்பிக்கையில்தான், இதனைத் தொகுத்திருக்கிறேன்.

இந்நூல், 'அல்இர்ஷாத் இலா ஸஹீஹில் இஃதிகாத்' என்ற, அறிஞர் ஸாலிஹ் அல்பவ்ஸான் அவர்களுடைய நூலை, முழுமையாகத் தழுவியதாகவே ஆக்கப்பட்டி ருக்கிறது. எனவே இதைப் படித்து, இதிலுள்ள நல்ல விடயங்களைப் பின்பற்ற, அல்லாஹ் நம்மனை வருக்கும் துணைசெய்யவேண்டும் என, வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன்.

**இந்நூல் மிகமிக அவசரமாகத் தொகுக்கப்பட்டது, எனவே வாக்கியப் பிழைகள், எழுத் துப் பிழைகள் காணும் பட்சத்தில். கருத்து ரீதியான பிழைகளைக் காண்பவர்களும் கூட தக்க ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினால், அடுத்த பதிப்பில் அவற்றைத் திருத்திக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதை நன்றியுடன் தெரிவித்து முடிக்கிறேன்.**

**எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவரின் நற்பணிக ளையும், அவனுக்காகச் செய்த மக்களாக ஏற்று, மறுமையில் உயர்ந்த சுவர்க்கத்தை எமக்குத் தருவா னாக. ஆமீன்.**

இது
யூ.கே. ஜமால் முஹம்மத்

## அல்அகீதா அல் இஸ்லாமிய்யா
## (இஸ்லாத்தின் கொள்கை)

இஸ்லாமிய அகீதாவுக்காகத்தான் அல்லாஹ் அவனு டைய தூதர்களை அனுப்பினான். அதற்காகத்தான் அவனுடைய வேதங்களை இறக்கினான். அதனையே அவனுடைய மனித, ஜின் இனத்தினருக்கும் அவசியமாக்கினான். அல்லாஹ் கூறுகின்றான்:

**'மேலும் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை. அவர்களிடத்தில் (என் படைப்புகளுக்காக) நான் யா தொரு உணவையும் நாடவில்லை, அன்றியும் எனக்கு அவர்கள் உணவளிப்பதையும் நான் நாடவில்லை'.**

(அத்தாரியாத்: 56).

மேலும் ஓரிடத்தில்:

**'(நபியே!) உமதிரட்சகன் - அவனைத்தவிர யாரையும் நீங்கள் வணங்கக்கூடாதென்று கட்டளையிட்டிருக் கிறான்'.** (அல்இஸ்றாஃ: 23).

அல்லாஹ் மேலும் கூறுகிறான்:

**'ஒவ்வொரு சமூகத்துக்கும், நிச்சயமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம், (அத்தூதர்கள் அச் சமூகத்திடம்), அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங் கள், (அவனல்லாது வணங்கப்படும் ஷைத்தான்களா கிய அனைத்து) தாகூத்துகளிலிருந்தும் நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்'.** (அந்நஹ்ல்:36).

இவற்றிலிருந்து விளங்குவது: அனைத்து நபிமார்க ளும் இந்தக் கொள்கையின் பக்கம் அழைப்பதற்கா கவே அனுப்பப்பட்டனர். அவ்வாறே அனைத்து வேத நூற்களும் இதனைத் தெளிவுபடுத்தி, எந்த விடயங்கள் இக்கொள்கையைச் செயலிழக்கச் செய்யக்கூடியவைகளாக, அல்லது எதிரானவைகளாக அல்லது

இதன் உறுதியைக் குறைக்கக் கூடியவை களாக இருக்கின்றனவோ அவற்றைத் தெளிவு படுத்தவே அருளப்பட்டன. அவ்வாறே, புத்தி கொடுக்கப்பட்ட எல்லாப் படைப்பினங்களும் இதைப் பின்பற்றுமாறே கட்டளையிடப்பட்டுள்ளன.

எனவே இப்படிப்பட்ட முக்கியத்துவம் மிக்க ஒரு விடயத்தை ஆராய்ந்து, அறிந்து, அதற்கு முக்கி யத்துவம் கொடுப்பது, அனைத்து விடயங்களை விடவும் முதன்மையானது. அதிலும் குறிப்பாக, மனித இனத்தின் இம்மை, மறுமையின் ஈடேற்றம், இந்தக் கொள்கையில்தான் தங்கியிருக்கிறது எனும் போது, இன்னும் அதிகமாகவே இதன் முக்கியத்து வம் புலப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்:
**'ஆகவே எவர் தாகூத்தை (ஷைத்தானை) நிராக ரித்துவிட்டு, அல்லாஹ்வை நம்புகிறாரோ அவர், திட்ட மாக அறுந்துபோகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டார்'.**
(அல்பகறா:256).

இதன் விளக்கம்: யார் இந்தக் கொள்கையை விட்டும், தன்னை விடுவித்துக்கொள்கிறாரோ அவர், பிழையான (செல்லுபடியற்ற) கொள்கைகளையும், பேதபுத்திகளையும் பின்பற்றியவராவார், உண்மைக்கு முரணானது பொய்யைத்தவிர வேறேதும் உண்டோ?, அல்லாஹ் கூறுகிறான்:
**'(இரவைப் பகலிலும், பகலை இரவிலும் நுழைவிக்கும் மாபெரிய ஆற்றலாகிய) அது, நிச்சயமாக அல்லாஹ் அவன்தான் உண்மையானவன், மேலும் உறுதியாக அவனையன்றி வேறு எதனை அவர்கள் பிரார்த்திக் கின்றார்களோ, அதுவே பொய்யானதாகும்'.**

(அல்ஹஜ்:62).

அதன் பின்னர் அவரின் தங்குமிடம் நரகமாகும், அது தங்குமிடங்களிலேயே மிகவும் கெட்டதாகும்.

அகீதா(கொள்கை) என்பதன் கருத்து யாதெனில்: ஒரு மனிதன் அதனை உண்மைப்படுத்தி, அதனைத் தனது கொள்கையாக ஏற்றுக்கொள்வதாகும். இந்தக் கொள்கை, அல்லாஹ்வால்

அனுப்பப்பட்ட தூதர்க ளின் போதனைகளுக்கும், அவன் அருளிய வேதங் களுக்கும் முறணில்லாமல் இருந்தால், அதுவே ஈருலக வெற்றிக்குக் காரணமானதும், அல்லாஹ்வின் வேதனையிலிருந்து பாதுகாக்கக்கூடிய, சரியான ஈடேற்றத்தைக் கொடுக்கக்கூடிய கொள்கையுமாகும்.

எந்தக் கொள்கை, அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதர்களின் போதனைகளுக்கும், அவன் அருளிய வேதங்களுக்கும் முறணாக இருக்கிறதோ, அது ஈருலகின் தோல்விக்குக் காரணமாகவும், அதனை ஏற்றுக் கொண்டோரை தண்டனைக்கு உரியவர்களா கவும் மாற்றிவிடும்.

- சரியான, உண்மையான கொள்கைதான், அதனை ஏற்றுக்கொண்டவர்களின் உயிர் களையும் பொருள்களையும் பாதுகாத்து, இவையிரண்டுக்கும் எதிரான அத்துமீறல்க ளையும் தடைசெய்யும். நபியவர்கள் சொன் னார்கள்:

**‘அல்லாஹ்வைத்தவிர வணங்கப்படக்கூடியவன் யாரும் இல்லை என்று கூறும்வரை, மனிதர்களோடு போரிட நான் பணிக்கப்பட்டுள்ளேன், யார் இதனை ஏற்றார் களோ அவர்கள், என்னிடமிருந்து அவர்களின் இரத் தத்தையும் பொருட்களையும் பாதுகாத்துக் கொண் டனர், (அதனைஎடுக்கும்) உரிமைகளுக்காகவே அன்றி, அவற்றில் அத்துமீறல்கள் நடைபெறாது’.**

(புகாரி, முஸ்லிம்).

மேலும் கூறினார்கள்:

**‘யார் அல்லாஹ்வைத்தவிர வணங்கப்படக்கூடிய நாயன் எவருமில்லை எனக்கூறி, அல்லாஹ் அல்லாது வணங்கப்படக்கூடியவைகளை நிராகரிக்கிறாரோ, அவரது இரத்தமும் பொருளும் (அதில் அத்து மீறுவதற்கு) தடைசெய்யப்பட்டதாகும். அவன் தொடர் பான விசாரணை அல்லாஹ்வுக்குரியதாகும்’.**

(முஸ்லிம்).

- மேலும், இந்தக் கொள்கை, மறுமையில் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து பாதுகாக் கிறது. நபியவர்கள் சொன்னார்கள்:

**‘யார் ஷிர்க் வைக்காத நிலையில் அல்லாஹ்வை சந்திக்கிறாரோ அவர், சுவர்க்கம் நுளைவார், ஷிர்க் வைத்த நிலையில் யார்**

**அல்லாஹ்வை சந்திக்கிறாரோ அவர் நரகம் நுழைவார்’.** (முஸ்லிம்).

மேலும் ஒரு ஹதீஸில்:

**‘யார் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி, லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகிறாரோ, அவருக்கு நரகத்தை அல்லாஹ் ஹறாமாக்கி விடுகிறான்’** என்றனர். (புகாரி, முஸ்லிம்).

ஆரோக்கியமான இந்தக் கொள்கையின் மூலம்தான் அதற்குரியவரின் பாவங்களை அல்லாஹ் மன்னிக் கிறான்.

நபியவர்கள் சொன்னார்கள்:

**‘அல்லாஹ் கூறுகிறான், மனிதனே! நீ பூமியின் அளவு பிழைகளைச் செய்து, எனக்கு இணை வைக்காமல் நீ என்னைச் சந்தித்தாலும், நான் உனக்குப் பூமியின் அளவு மன்னிப்புத்தந்து உன்னை மன்னிப்பேன்’.** (திர்மிதி).

இந்தப் பாவமன்னிப்பைப் பெறுவதற்கு நிபந்தனை, ஷிர்க்கை விட்டும் ஈடேற்றமான கொள்கையுடைய வராக அவர் இருக்கவேண்டும். அந்தச் ஷிர்க்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ, சிறிதா கவோ அல்லது பெரிதாகவோ இருந்தாலும் சரியே!, யார் இப்படியானவராக இருக்கிறாரோ அவரே அல்லாஹ் கூறுவதுபோன்ற பரிசுத்த உள்ளமுடைய வராகும், அல்லாஹ் கூறுகிறான்:

**‘அந்நாளில் செல்வமும், பிள்ளைகளும் (யாதொரு) பயனுமளிக்க மாட்டாது, எவரொருவர் பரிசுத்த உள்ளத்துடன் அல்லாஹ்விடம் வருகிறாரோ அவரைத் தவிர (அவர் கண்ணியம் அடைவார்)’.**

(அஷ்ஷுஅறா:88-89).

அறிஞர் இப்னுல் கையும்(றஹி) அவர்கள், உத்பான் அவர்களின் இந்த ஹதீதுக்கு விளக்கம் சொல்லும் போது: ‘மற்றவர்களின் பாவங்களை மன்னிப்பதை விட, உண்மையான, ஷிர்க் வைக்காத ஏகத்துவ வாதிகளின் பாவங்களை அதிகமாகவே அல்லாஹ் மன்னிக்கிறான், ஒரு ஏகத்துவவாதி, பூமி நிறைந்த ளவு பாவங்கள் செய்த நிலையில், அவனுடைய இரட்சகனை சந்தித்தாலும், (வல்ல அல்லாஹ்) பூமியினளவு அவனுக்கு

மன்னிப்பு வழங்குகிறான். இது ஏகத்துவம் குறைந்தவர்களுக்கு நடைபெறாது, ஏனெனில், ஷிர்க் கலந்திராத, தூய்மையான ஏகத்து வத்தோடு எந்தப் பாவமும் எஞ்சியிராது. காரணம், பாவங்கள் பூமியினளவு இருந்தாலும் அவற்றைக் கழுவக்கூடிய, இபாதத்துகளான அல்லாஹ்வை மட்டும் நேசித்தல், அவனைக் கண்ணியப்படுத்தல், அவனை உயர்வுபடுத்தல், அவனுக்கே பயப்படுதல், அவனிடத்தில் மட்டுமே ஆதரவு வைத்தல் போன்ற வைகளை அந்த ஏகத்துவம் பொதிந்துள்ளது. அசிங்கங்கள் இடையில் வந்தவை, அவற்றின் தடைகள் பலமானவை...எனக் கூறுகிறார்கள்.

- உறுதியான இந்தக் கொள்கையோடுதான் அமல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றைச் செய்தவருக்கு அவை பயனளிக்கும். அல்லாஹ் கூறுகிறான்:

**'ஆணாயினும் பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (மார்க்கத்துக்கு இணக்கமான) நற் செயல்க ளைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க, தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம். இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்'.**

(அந்நஹ்ல்:97).

இதற்கு மாற்றமாக, பிழையான கொள்கை அனைத்து அமல்களையும் அழித்துவிடும், அல்லாஹ் கூறுகி றான்:

**'உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், 'நீர் (இறைவனுக்கு) இணைவைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர் களாகி விடுவீர்கள் (என்பதுவேயாகும்)'.**

(அஸ்ஸுமர்:65).

மேலும் கூறுகிறான்:

**'அவர்கள் இணைவைப்பார்களானால், அவர்கள் செய்து வந்ததெல்லாம், அவர்களை விட்டு அழிந்து விடும்'.** (அல்அன்ஆம்:88).

ஷிர்க்கோடுள்ள பிழையான கொள்கை, சுவர்க்கத் தையும், பாவமன்னிப்பையும் தடைசெய்வதோடு, தண்டனையை

அவசியமாக்கி, நரகத்தில் நிரந்தர மாகத் தங்கவைத்துவிடும், அல்லாஹ் கூறுகிறான்:

**‘நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான், இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்’.** (அந்நிஸா:48).

மேலும் கூறுகிறான்:

**‘எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணைவைப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், (இத்தகைய) அக்கிரமக்காறர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை’.** (அல்மாஇதா:72).

பிழையான கொள்கை, அந்தக் கொள்கையைக் கொண்டிருப்பவரின் இரத்தத்தை ஓட்டி, அவருடைய பொருட்களையும் (பறிமுதல் செய்வதற்கு) ஆகுமா னதாக ஆக்கிவிடும், அல்லாஹ் கூறுகிறான்:

**‘(முஃமின்களே! இவர்களுடைய) விஷமங்கள் முற்றி லும் நீங்கி, (அல்லாஹ்வின்) மார்க்கம் முற்றிலும் அல்லாஹ்வுக்கே ஆகும்வரையில் அவர்களுடன் போர் புரியுங்கள்’.** (அல்அன்பால்:39). மேலும் கூறுகிறான்:

**‘(போர் விலக்கப்பட்ட துல்கஃதா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம், றஜப் ஆகிய நான்கு) சங்கைமிக்க மாதங்கள் கழிந்துவிட்டால், முஷ்ரிக்குகளைக் கண்ட இடங்களில் வெட்டுங்கள், அவர்களைப் பிடியுங்கள், அவர்களை முற்றுகையிடுங்கள், ஒவ்வொரு பதுங்கு மிடத்திலும் அவர்களைக் குறிவைத்து உட்கார்ந்தி ருங்கள்’.** (அத்தவ்பா:05).

- இவ்வாறே சரியான கொள்கைக்கு, உள ரீதியாகவும், சமூக ஒழுக்க ரீதியாகவும் மட்டு மல்ல, நிர்வாக ஒழுங்கு ரீதியாகவும் கூட நல்ல பிரதிபலிப்பிருக்கிறது.

நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் இரண்டு கூட்டத்தினர் இருந்தனர், ஒரு கூட்டம் நல்ல எண்ணத்தோடும், தூய்மையான கொள்கையோடும் ஒரு பள்ளியைக் கட்டியது, மற்றக் கூட்டமோ கெட்ட நோக்கத்தோடும், பிழையான கொள்கை யோடும் ஒரு பள்ளியைக் கட்டினர், தக்வாவுடன் (நல்ல நோக்கத்தில்)

கட்டப்பட்ட பள்ளியில் தொழுமாறும், நிராகரிப்போடு (கெட்ட நோக்கத் துடன்) கட்டப்பட்ட பள்ளியில் தொழ வேண்டா மெனவும் அல்லாஹ் தனது நபிக்குக் கட்டளை யிட்டான், அல்லாஹ் கூறுகிறான்:

**'இன்னும் (இஸ்லாம் மார்க்கத்திற்குத்) தீங்கிழைக் கவும், குஃப்ருக்கு (நிராகரிப்புக்கு) உதவி செய்யவும், முஃமின்களிடையே பிளவு உண்டுபண்ணவும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் விரோத மாய்ப் போர்புரிந்தவர்களுக்கு புகலிடமாகவும் ஆக்க ஒரு மஸ்ஜிதை நிறுவியவர்கள் 'நாங்கள் நல்லதையே அன்றி (வேறொன்றும்) விரும்பவில்லை' என்று நிச்சயமாகச் சத்தியம் செய்வார்கள் - ஆனால் அவர்கள் நிச்சயமாகப் பொய்யர்கள் என்பதற்கு அல்லாஹ்வே சாட்சியம் கூறுகிறான்.**

**ஆகவே, (நபியே!) அங்கு நீர் தொழுகைக்காக ஒருக் காலும் நிற்கவேண்டாம் - நிச்சயமாக ஆரம்ப தினத்திலேயே பயபக்தியின் மீது அடிகோலப்பட்ட மஸ்ஜிது உள்ளது, அதில் நீர் நின்று (தொழவும், தொழவைக்கவும்) மிகவும் தகுதியானது, அங்கிருக் கும் மனிதர்கள் தூய்மையுடையோராக இருப்பதையே விரும்புகிறார்கள். அல்லாஹ் தூய்மையுடையோரையே விரும்புகிறான்.**

**யார் மேலானவர்?, பயபக்தியுடன் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி ஒரு கட்டிடத்தின் அடிப்படையை அமைத்தவரா?, அல்லது (தானாகவே சரிந்துவிடக் கூடிய) பூமியை ஒட்டி அடிப்படையிட்டு (அந்த அடிப் படையில்) கட்டிடத்தை - அதுவும் சரிந்து பொடிப் பொடியாக நொறுங்கி அவருடன் நரக நெருப்பில் விழுந்துவிடும் (கட்டிடத்தை அமைத்தவரா?), அல்லாஹ் அநியாயக்காற மக்களை நேர் வழியில் நடத்தமாட்டான்'.**
(அத்தவ்பா:107-109).

## இஸ்லாமியக் கொள்கையை அறிவதன் அவசியம்.

இஸ்லாமியக் கொள்கையின் கருத்தை அறிவதற்கா கவும், அது எதன்மீது அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவதற்காகவும், இஸ்லாமியக் கொள் கையைக் கற்றுக்கொள்வது ஒவ்வொரு முஸ்லிமுக் கும் கட்டாயக் கடமையாகும். பின்பு அதற்கெதிரான தையும், அதனை செயலிழக்கச் செய்யக்கூடியதை, அல்லது சிறிய, பெரிய ஷிர்க்குகளினால் அக் கொள்கையைக் குறைக்கக்கூடியதையும் அறிந்து கொள்ளவேண்டும், அல்லாஹ் கூறுகிறான்:

**'ஆகவே, நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர (வேறு) நாயன் இல்லை என்று நீர் அறிந்து கொள்வீராக! இன்னும் உம்முடைய பாவத்திற்காகவும், மு:மின்க ளான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் (பாவ) மன்னிப்புத் தேடுவீராக!'** (முஹம்மத்:19).

இமாம் புகாரி(றஹி) அவர்கள், **'சொல்லுக்கும் செய லுக்கும் முன்னர் அறிதல்'** எனும் தலைப்பிட்டு, மேற் குறிப்பிட்ட வசனத்தை அதற்கு ஆதாரம் காட்டு கின்றனர்.

இப்னு ஹஜர்(றஹி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:
'இப்னுல் முனீர் என்பவர் கூறுகிறார்: இந்த வார்த் தையைக் கொண்டு இமாம் புகாரி(றஹி) அவர்கள் எதை நாடினார்கள் எனில், சொல்லும் செயலும் சரியாக அமைவதற்குரிய நிபந்தனை கல்வியறிவா கும் என்பதையே!. அறிவில்லாமல், சொல்லும், செயலும் கணக்கில் எடுக்கப்படாது, அறிவுதான் அவையிரண்டுக்கும் முதன்மையானது. ஏனெனில் அதுதான் வணக்கத்துக்குரிய எண்ணத்தை சீர் செய்யக் கூடியதாகும்'.

இதனால்தான் புத்திஜீவிகள், கொள்கை சார்ந்த சட்டங்களைப் படிப்பதையும், அவற்றைப் படித்துக் கொடுப்பதையும் முக்கியமானதாகக் கருதியதோடு, கல்விகளிலேயே முதன்மையானதாகவும் அதனைக் கணித்தனர். மேலும்

அதனுடைய சட்டதிட்டங்கள் மற்றும் அதற்கு அவசியமாவைகளையும் வேறு படுத்தி, அதிலே பல தொகுப்புகளையும் வெளியிட் டனர். அத்தோடு ஷிர்க்குகள், பித்அத்துகள், மூடக் கொள்கைகளிலிருந்தும், சரியான கொள்கையைப் பாழாக்கும் அல்லது அதனைக் குறைக்கக் கூடிய வைகளையும் தெளிவுபடுத்தினர்.

இதுதான் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனும் கலிமா வின் கருத்தாகும், வாயினால் மொழிவதோடு மட்டும் அது முடிந்து விடுவதில்லை, எனினும் அதன் கருத்து, அது வேண்டிநிற்கும் விடயங்கள், அது உள்ளடக்கியிருக்கும் கருத்துக்கள் போன்ற வற்றை அறிந்து, உள்ரங்கமாகவும் வெளிப்படையா கவும் செயல்படுவது கடமையாகும். அத்தோடு, அதனை அழித்துவிடக்கூடியவைகளும், அதனைக் குறைத்து விடக்கூடியவைகளும், அறிவின் மூலமே யன்றி தெளிவுபடாது. அதனால்தான் பாடசாலைக் கல்வித் திட்டங்களில், பல தரப்பட்ட தரங்களிலும் அகீதாவின் அறிவுக்கு முதலிடம் கொடுக்கப்படுவது கட்டாயமாகிறது, நாளாந்தப் பாடங்களிலும் அதனைப் போதுமான அளவுக்குப் போதிக்கவேண்டும், பொருத்தமான ஆசிரியர்களை அதற்காகத் தெரிவுசெய்யவேண்டும்.

ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைதலும், சித்தியடையாமல் விடுதலும் இப்பாடத்தைக் கொண்டோ உறுதிப்படுத்தப்படவேண்டும். இன்றை யப் பாடத் திட்டங்கள் பெரும்பாலும் இதற்கு மாற்ற மாகவே அமைந்துள்ளன. இன்றையப் பாடத் திட்டங்களில் அகீதாவின் அறிவுக்கு பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை, இது, எதிர் காலத்தில் சரியான கொள்கையைத் தெரியாத ஒரு தலைமுறையை உருவாக்கிவிடும் என அச்சப்படக் கூடிய ஒரு விடயமாகும். ஷிர்க்குகளும், பித்அத்து களும், மௌட்டீகங்களும் மலிந்து, அவைகளும் இஸ்லாமியக் கொள்கைதான் என்றாகிவிடும், ஏனெனில் முதியவர்கள் அவற்றைச் செய்து கொண்டிருப்பதை, இளையவர்கள் காண்பார்கள், அப்போது அவற்றின் மோசமான, பாழ்பட்ட தன்மை பின்தியவர்களுக்கு விளங்காது.

இதைத்தான் அமீறுல் முஃமினீன் உமர் இப்னு கத்தாப்(றழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

**‘ஜாஹிலிய்யாக் காலத்தை அறியாதவர் இஸ்லாத்தில் வளர்வதனால், இஸ்லாத்தின் காரியங்களை ஒவ் வொன்றாக உடைத்துவிடுவாரோ என்ற அச்சமேற் படுகிறது’.**

இதற்காக, குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் செயல்படும் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ, (ஸலபுஸ்ஸாலிஹீன்களின் கொள்கையான) சரியான கொள்கையில் தொகுக்கப்பட்ட புத்தகங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு, மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். அஷ்அரிய்யாக்கள், முஃதஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள் மற்றும் ஸலபுகளின் கொள்கையை விட்டும் வழிதவறிய பிரிவுகளின் புத்தகங்கள் போன்ற, ஸலபுகளின் போக்குக்கு மாறுபட்ட புத்த கங்களை, பாடத்திட்டத்தை விட்டும் தூரமாக்க வேண்டும்.
ஒழுங்கு படுத்தப்படும் பாடங்களைப் பொறுத்தவரை, பள்ளிவாசல்களில் பாடங்கள் போடப்பட்டு, ஸலபுக ளின் கொள்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் போதிக்கப்படவேண்டும், அத்தோடு இப்பள்ளிகளில் மாணவர்களும் ஏனையோரும் பிரயோசனம் பெறும் பொருட்டு, சுருக்கமான, விரிவான பாடங்கள் வாசிக் கப்படவேண்டும். பொதுமக்களுக்கென்று குறிப்பாக இலகுவானதும், சுருக்கமானதுமான பாடங்கள் ஒழுங்கு செய்யப்படவேண்டும். இவ்வாறு இந்த இஸ்லாமியக் கொள்கை பரப்பப்படவேண்டும்.

வானொலிப் பகுதியில் ஒலிபரப்பப்படும் மார்க்க நிகழ்ச்சிகளைப்பொறுத்தவரை, அகீதாவோடு தொடர் புடைய விடயங்கள், தொடராக ஒலிபரப்பப்பட வேண்டும்.

தனி மனிதனைப்பொறுத்தவரை அகீதாவுக்கென்று விஷேட முக்கியத்துவம் கொடுப்பதும், அகீதாப் புத்தகங்களை வாசிப்பதும், ஸலபுகளின் அணுகு முறையோடு, அத்துறையில் தொகுக்கப்பட்ட நூல்க ளை அறிவதும், அவர்களுக்கு எதிரானவர்களின் போக்கில் தொகுக்கப்பட்ட நூல்களை அறிவதும் அவசியமாகும்.

ஏனெனில் ஒரு முஸ்லிம் அவனுடைய விடயத்தில் தெளிவாக இருப்பதோடு, அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் கொள்கைக்கு எதிராக வரும் சந்தேகங்களுக்கு பதில் சொல்லக்கூடியவனாகவும் இருக்கவேண்டும்.

இஸ்லாமிய சகோதரர்களே! சங்கைமிக்க குர்ஆனை நீங்கள் ஆராய்ந்துபார்த்தால், அதிகமான அத்தியா யங்களும், வசனங்களும் அகீதா(கொள்ளை) விடயத் துக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நீங்கள் பார்க்கலாம், அதை விட, மக்கிய்யா சூறாக்கள் இஸ்லாமிய அகீதாவைத் தெளிவுபடுத்தவும், அதில் ஏற்படும் சந்தேகங்ளை நீக்கவும்தான் குறிப்பானவை போல் காணப்படுகின்றன.
உதாரணமாக: சூறதுல் பாத்திஹாவை எடுத்துக் கொள்ளலாம்.
அறிஞர் இப்னுல் கையும்(றஹி) அவர்கள் கூறுகி றார்கள்: ‘இந்த அத்தியாயம் மிக உயர்ந்த, தலையாய அம்சங்களைப் பூரணமாகவே பொதிந்துள் ளது. (அல்லாஹ்வின்) அழகிய திருநாமங்களுக்கும் அவனுடைய பண்புகளுக்கும் பிரதானமாயிருக்கும் மூன்று விடயங்களை ஒருங்கே அமையப்பெற்று, வணக்கத்துக்குத் தகுதியான, உயர்ந்த, அல்லாஹ் வின் அறிமுகத்தை இது பொதிந்துள்ளது, அல்லாஹ், றப்பு, றஹ்மான் என்பனவாகும் அவை கள். இந்தச் சூறா தவ்ஹீதின் மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.
**‘உன்னையே வணங்குகிறோம்’.** (அல்பாத்திஹா:04). என்ற வசனம், தவ்ஹீதுல் உலூஹிய்யாவை உள்ள டக்கியுள்ளது.
**‘உன்னிடமே உதவியும்தேடுகிறோம்’.**
(அல்பாத்திஹா:04).
எனும் வசனம், தவ்ஹீதுர் றுபூபிய்யாவை உள்ளடக் கியுள்ளது.

**‘அல்ஹம்து’** மூன்று விடயங்களை உள்ளடக்கியதா கும். அவைகளாவன: அவனுடைய உலூஹிய்யத்தி லும், றுபூபிய்யத்திலும், றஹ்மத்திலும் அவன் புகழப்பட்டவன் என்பதாகும். புகழும், புகழ்ச்சியும் அவனுடைய தகுதிக்குப் பொருத்தமானதாக இருக் கும்

**‘மாலிகி யவ்மித்தீன்’** எனும் வசனம், மீண்டும் எழுப் பப்படுவதை உறுதிப்படுத்துவதோடு, மனிதர்களின் நன்மை, தீமையான செயல்களுக்குக் கூலி கொடுத் தல், படைப்பினங்களுக்கிடையில் சட்டம் செலுத்து வதில் அல்லாஹ்வின் தனித்துவம், அவன் வழங் கும் தீர்ப்பிலிருக்கும் நீதம் போன்றவைகளைப் பொதிந்துள்ளது. அவ்வாறே நபித்துவத்தின் உண்மையையும் பல வகைகளில் உறுதிப்படுத்துகின் றது.

பின்பு மிக நீண்ட, பிரயோசனமான ஒரு விளக் கத்தை அல்லாஹ் தருகிறார்:
அல்குர்ஆன் முழுக்க தௌஹீதையும் அதன் கடமைகளையும் அதற்குரிய கூலியையும் சொல்வ தோடு, ஷிர்க்கைப் பற்றியும், அதற்குரியவர்களைப் பற்றியும் அவர்களுக்குரிய தண்டனைகள் பற்றியும் கூறுகின்றது:
**‘அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்’** என்பது, தௌஹீதாகும்.
**‘அர்றஹ்மானிர்றஹீம்’** என்பதும் தௌஹீதாகும்.
**‘இஹ்திநாஸ்ஸிறாதல் முஸ்தகீம், ஸிறாதல்லதீன அன்அம்தஅலைஹிம்’** என்பது, ஏகத்துவ வாதிகளின் வழியிலமைந்த, ஹிதாயத்தை வேண்டுவதற்குரிய தௌஹீதைப் பொதிந்துள்ளது.
**‘கைரில் மக்ளூபி அலைஹிம் வலல்லால்லீன்’** என்பது, தௌஹீதை இழந்தவர்களைக் குறிப்ப தாகும்.

அல்குர்ஆனின் அதிகமான அத்தியாயங்கள் இரண்டு விதமான ஏகத்துவங்களையும் பொதிந்துள் ளன, ஏனெனில் அல்குர்ஆன், ஒன்றில் அல்லாஹ் வைப் பற்றியும் அவனுடைய திருநாமங்கள், பண்பு கள் பற்றியும் அறிவிக்கக்கூடியதாக இருக்கும். இது ‘தௌஹீதுல் அஸ்மாஉவஸ்ஸிபாத்’ எனப்படும். அல்லது அவனை ஒருமைப்படுத்தி, அவனை மட்டுமே வணங்கவேண்டுமெனவும், அவனல்லாது வணங்கப்படக் கூடியவைகளை தவிர்த்திருக்க வேண்டுமெனவும் கூறுகிறது, இது ‘தௌஹீதுல் உலூஹிய்யாஹ்’ எனப்படும்.

அதேபோல் அல்குர்ஆனில், கட்டளைகள், தடை கள், மேலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதன் அவசியம் போன்ற விடயங்கள் இருக்கும், இது தவ்ஹீதின் கடமைகளிலும், அதனை முழுமைப் படுத்துவதிலும் அடங்கும்.

அல்லது தவ்ஹீத்வாதிகளுக்கு அல்லாஹ் கொடுக் கும் கண்ணியத்தைப்பற்றிய செய்தியாகவும், உலகில் அவர்கள் செய்தவைகளுக்காக, மறுமையில் அவர்க ளைக் கண்ணியப்படுத்தும் செய்தியாகவும் இருக் கும், இது அந்தத் தவ்ஹீதின் கூலியாகும்.

அல்லது இணைவைத்தவர்களின், செய்தியாகவும், அவர்களின் செயலுக்காக உலகில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் சம்மந்தமான செய்தி யாகவும் இருக்கும், இது தௌஹீதை விட்டு வெளி யேறியோருக்கான தண்டணையாகும்'.

இப்படி அல்குர்ஆன், இஸ்லாமியக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தும், அதனைப் படிக்கின்ற அதிகமானவர்கள், இந்தக் கொள்கையை சரியாக விளங்குவதாக இல்லை. இதில் பிழை விடுபவர்களா வும், முறைகேடாக விளங்குபவர்களாகவுமே இருக் கின்றனர். ஏனெனில் அவர்களின் தாய், தந்தையர் கள் எந்தக் கொள்கையில் இருந்தார்களோ, அதனை யே இவர்களும் பின்பற்றுகின்றனர், ஆராய்ச்சியுட னும் ஆழமாகவும் இவர்கள் அல்குர்ஆனைப் படிப் பதில்லை.

எல்லாவற்றுக்கும் அல்லாஹ் போதுமானவன்!.

## இஸ்லாமியக் கொள்கையின் பக்கம் மக்களை அழைத்தல்

அல்லாஹ் ஒரு மஸ்லிமுக்கு இந்தக் கொள்கையை விளங்குவதற்கும், அதனைப் பின்பற்றுவதற்கும் அருள்புரிந்த பின்பு, மற்ற மக்களை இருளிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டுவருவதற்காக இந்தக் கொள்கையின் பக்கம் அழைப்பது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

**‘எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர், அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனா கவும் நன்கு அறிவோனாகவும் இருக்கின்றான். அல்லாஹ்வே நம்பிக்கை கொண்டவர்களின் பாதுகாவ லன், அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளிச் சத்தின் பக்கம் கொண்டு வருகின்றான். ஆனால் நிராகரிப்பவர்களுக்கோ - (வழி கெடுக்கும்) ஷைத் தான்கள் தாம் அவர்களின் பாதுகாவலர்கள். அவை அவர்களை வெளிச்சத்திலிருந்து இருள்களின் பக்கம் கொண்டு வருகின்றன. அவர்களே நரகவாசிகள், அவர்கள் அதில் என்றென்றும் தங்கிஇருப்பர்’.**

(அல்பகறா:256-257).

இஸ்லாமியக் கொள்கையின் பக்கம் அழைப்பதுதான் அனைத்துத் தூதர்களும் ஆரம்பித்த அழைப்புப் பணியாகும், இதன் பக்கம் அழைப்பதற்கு முன்பு எதன்பக்கமும் அவர்கள் அழைக்கவில்லை. அல்லாஹ் கூறுகிறான்:

**‘மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், ‘அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், சைத்தான் களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்’ என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத் தோம்.**
(அந்நஹ்ல்:36).

ஒவ்வொரு தூதர்களும் அவர்களுடைய சமூகத்தி னருக்கு முதன் முதலில் அழைப்பு விடுக்கும்போது:

**‘என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், அவனன்றி (வேறு) இறைவன் உங்க ளுக்கு இல்லை’.** (அல்ஹூத்:50).

என்றே அவர்கள் கூறினார்கள். நபிமார்களான நூஹ், ஹூத், ஸாலிஹ், சுஐப், இப்றாஹீம், மூஸா, ஈஸா, முஹம்மது(ஸல்) அவர்களும், மற்றும் ஏனைய தூதர்களும் இதனையே செய்தனர்.

இந்தக் கொள்கையை அறிந்த, அதனை எடுத்துச் செயல்படுகின்றவர்கள் அவர்களோடு மட்டும் அதனைச் சுருக்கிக்கொள்ளாமல், ஏனைய மக்களை யும் விவேகமான முறையிலும், நல்லுபதேசத்தின் மூலமும் அழைப்பது கடமையாகும். றஸூல்மார்க ளும் அவர்களைப் பின்பற்றியவர்களும் கையாண்ட வழிமுறையைப் போல், இந்தக் கொள்கையின் பக்கம் அழைப்பதுதான் அடிப்படையானதாகும். இந்தக் கொள்கை உறுதிப்படுத்தப்பட்டுப் பின்பற்றப் படும்வரை, அதற்கு முன்பாக, கடமைகளைச் செய்ய வோ, தடைசெய்யப்பட்டவற்றை விடவோ உபதே சிக்கப்படமாட்டாது, ஏனெனில் கொள்கைதான் அனைத்து அமல்களையும் சீர்செய்கின்ற அடிப்ப டையாகும். அது இன்றி அமல்கள் சீரானவையாக வோ, ஏற்றுக்கொள்ளப்படவோ, கூலி கொடுக்கப்பட வோ மாட்டாது.
நம்மனைவருக்கும் தெளிவான ஒரு விடயம்தான், அத்திவாரமின்றி எந்த ஒரு கட்டிடமும் நிலையாக வோ ஒழுங்காகவோ நிற்காது என்பது. அதேபோல் தான் இந்தக் கொள்கையும், இது இன்றி எந்த வணக்கமும் செல்லாது.
அதனால்தான் தூதர்கள், அனைத்து விடயங்களை யும்விட இதற்கு முதலிடம் கொடுத்திருக்கின்றனர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், அழைப்பாளர்களை பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்புகின்றபோது, கொள்கையைச் சீர் செய்வதைத்தான் ஆரம்பமாகக் மேற்கொள்ளும் படி செல்லியனுப்பினார்கள்.
நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், முஆத் இப்னு ஜபல்(றழி) அவர்களை எமனுக்கு அனுப்பியபோது:
**‘நீ வேதக்காறர்களிடம் செல்கிறாய்!, முதன் முதலாக அவர்களை நீ அழைப்பது, ‘லாஇலாஹ இல்லல் லாஹ்’ எனும் ஷஹாதாவின் பக்கமாகத்தான் இருக்கவேண்டும்.**
**(வேறொரு அறிவிப்பில் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதின் பக்கம்தான் இருக்கட்டும்) இதற்கு அவர்கள் உனக்குக் கட்டுப்**

**பட்டால்தான், அல்லாஹ் அவர்கள் மீது ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைத் தொழுகைகளைக் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு அறிவிக்கவும், அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால், அல்லாஹ் அவர்கள் மீது ஸகாத் தைக் கடமையாக்கியிருக்கிறான், அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு, அவர்களிலுள்ள ஏழைகளுக்கு வினியோகிக்கப்படும் என்று அறிவிக்க வும், அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால், அவர்களின் பெறுமதிமிக்க பொருட்களை (எடுப்பதை) விட்டும் உன்னை நான் எச்சரிக்கிறேன், அநியாயம் செய்யப் பட்டவனின் பிரார்த்தனையை நீ பயந்துகொள், ஏனெனில் அவனுடைய பிரார்த்தனைக்கும் அல்லாஹ் வுக்குமிடையில் எவ்விதத் திரையுமில்லை'.** (புகாரி).

இந்த ஹதீஸிலிருந்தும், இறைத் தூதர்களின் அழைப்புப் பணியை, அல்குர்ஆனில் படிக்கின்ற போதும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வரலாறைப் படிக்கின்றபோதும், அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதன் வழிமுறைகள் தெளிவாகிறன.

'லாஇலாஹ இல்லல்லாஹ்'வின் கருத்தைப்போல், அல்லாஹ்வைத்தவிர வேறெதனையும் வணங்கக் கூடாதெனவும், அவனுக்கு எதனையுமே இணை வைக்கக்கூடாதெனவும் சொல்லுகின்ற கொள்கையின் பக்கம்தான் முதலில் மனிதர்களை அழைக்க வேண்டும்.
நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்த பதின்மூன்று வருடங்களும், தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், ஜிஹாத், போன்ற விடயங்களை மக்களுக்கு கட்டளையிடுவதற்கு முன்பும், ஹறாமான விடயங்களான வட்டி, விபச்சாரம், மது அருந்தல், சூதடித்தல் போன்றவைகளைத் தடைசெய்வதற்கு முன்பும், அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண் டும், சிலை வணக்கங்களை விட்டு விடவேண்டும் எனக்கூறி, கொள்கையை சீர் செய்கின்ற விடயத் தில்தான் ஈடுபட்டார்கள்.

இது, தஃவாவில் ஈடுபடுவதாகக் கூறிக்கொள்ளுகின்ற தற்காலத்தய இயக்கங்களின் பிழையான வழிமுறை யைத் தெளிவாகவே சொல்கிறது, அவ்வியக்கங்கள் அகீதாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பது கிடையாது, மாறாக நன்னடத்தை, ஒழுக்கம் போன்ற

பகுதி விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவ்வியக்கங்கள், சில இஸ்லாமிய நாடுகளில் கப்று களின் மீது கட்டடப்பட்டிருக்கும் கட்டிடங்களில் அதிகமான மக்கள் மிகப்பெரிய இணைவைத்தலைச் செய்வதைப் பார்த்தும்கூட, அதனை வெறுக்கவோ தடுக்கவோ முயற்சிக்காமல் இருக்கின்றன. மிக மிக குறைவாகவே தவிர அதனைப் பற்றிய வெளியீடோ, தெளிவுரையோ, அல்லது குறைந்த பட்சம் ஒரு வார்த்தையேனும் கூட அது சம்மந்தமாகப் பேச மாட்டார்கள், மாறாக இவ்வியக்கங்களிலுள்ள சிலர் கூட, சிலவேளை ஷிர்க், நெறி தவறிய சூபித்துவங் களில் ஈடுபடுவர். இவர்கள் கூட இதனை விட்டுத் தடுக்கப்படவோ, சுட்டிக்காட்டப்படவோ மாட்டார் கள். இதனைப் பார்க்கும்போது, தங்களின் குப்ரை தெளிவாகச் சொல்லுகின்ற காபிர்கள், நாஸ்திகர் களை அழைப்பதற்கு முன்னர், இவர்கள்தான், முதலில் அழைக்கப்படுவதற்கும் அவர்களின் அகீதாவை சீர் செய்யப்படுவதற்கும் தகுதியானவர் களாகும். ஏனெனில் காபிர்களும் நாஸ்திகர்களும் தங்களின் நிராகரிப்பையும், நாஸ்திகத்தையும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் ஏற்றுக்கொண்டு, தாமிருப்பது, தூதர்கள் கொண்டுவந்த கொள்கைக்கு முறணானதே! என ஏற்றுக்கொண்டுள்ளர். ஆனால் இந்த கப்று வணங்கிகளும் வழிகெட்ட சூபிகளும், தாங்கள் முஸ்லிம்களே என்றும், தாமிருப்பது இஸ்லாம் சொல்லித்தந்ததே எனவும் நினைத்து அவர்களும் ஏமாந்து, பிறரையும் ஏமாற்றுகின்றனர்.

அல்லாஹு தஆலா, தஃவாவை அருகிலிருக்கின்ற காபிர்களிலிருந்து ஆரம்பிக்குமாறு கட்டளையிடு கின்றான்:

**‘நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை அடுத்திருக் கும் (தொல்லை விளைவிக்கும்) காபிர்களுடன் நீங்கள் போர் புரியுங்கள், உங்களிடம் கடுமையை அவர்கள் காணட்டும் - நிச்சயமாக அல்லாஹ் பயபக்தி யுடையவர்களுடன் இருக்கிறான். என்பதை அறிந்து கொள்ளுங்கள்’.** (அத்தவ்பா:123).

முஸ்லிம்களின் உள்விவகாரங்களையே சீர்செய்ய முடியாதவர்களால், காபிர்களை எதிர்கொள்ளவே முடியாது.

ஒரு கதையொன்று சொல்லப்படும்:

‘கப்றை வணங்கக்கூடிய ஒருவன், சிலையை வணங் கக்கூடிய ஒருத்தனைக் கண்டு, அதனை நிராகரித் தான், அப்போது சிலையை வணங்கியவன்: ‘நீ உன்னைவிட்டும் மறைவான ஒரு படைப்பை வணங் குகிறாய், ஆனால் நானோ எனக்கு முன்னால் இருக்கின்ற ஒரு படைப்பை வணங்குகிறேன், எனவே நம்மில் யார் சிறந்தவர்’ எனக் கேட்ட போது, அந்தக் கப்று வணங்கி வாயடைத்துப் பேனா ராம்’.

இவர்கள் இரண்டு பேருமே வழிகெட்ட இணை வைப்பாளர்களே!, ஏனெனில் நன்மையோ தீமையோ செய்ய சக்தியற்றதை இவர்கள் வணங்குகின்றனர், ஆனாலும் கப்றுவணக்கம் செய்பவன் வழிகேட்டில் கூடியவனாகவும், நடைபெற முடியாத ஒரு விடயத் தில் மூழ்கியிருப்பவனாகவும் இருக்கிறான். எனவே அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றவர்கள், மற்ற விடயங்களை விட அகீதாவுக்கே முதலிடம் கொடுப் பதோடு, அதனைப் படித்து, விளங்கிய பின்பு, அதில் பிழைவிடுவோரை அல்லது அதற்குப் பங்கம் விழைவிப்போரை அதன் பக்கமாக அழைக்க வேண்டும்.

அல்லாஹ் தனது தூதருக்குக் கூறும்போது:
**‘(நபியே!) நீர் சொல்வீராக! இதுவே என்னுடைய (நேரான) வழியாகும், நான் அல்லாஹ்வின் பக்கம் (உங்களை) அழைக்கின்றேன், நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின்மீதே இருக்கின்றோம், அல்லாஹ் மிகத் தூய்மையானவன் ஆகவே, அவனுக்கு இணைவைப்போரில் நானும் ஒருவனல்லன்’.** (யூசுப்:108).
இமாம் இப்னு ஜரீர்(றஹி) அவர்கள் இந்த வசனத் துக்கு விளக்கம் சொல்லும்போது:
‘அல்லாஹ் தனது நபியான முஹம்மத்(ஸல்) அவர்க ளைப் பார்த்து, முஹ்மமதே! நீர் கூறும், நான் அழைக்கின்ற அழைப்பும், நான் இருக்கின்ற பாதை யும் எதுவெனில், அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவ தும், சிலைகளுக்கோ ஏனைய கடவுள்களுக்கோ இன்றி, அமல்களை அல்லாஹ்வுக்காக மட்டுமே செய்யவேண்டுமெனவும், அவனுக்கே கட்டுப்பட்டு, அவனுக்காகவே பாவங்களை விடவேண்டுமென்ப தாகும்’.

**‘எனது பாதை’** என்பது, எனது வழிமுறையும் எனது அழைப்பும் என்பதாகும்.

**‘அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்’** என்பது, அவன் மட்டுமே உயர்ந்தவன், அவனுக்கு எவ்வித இணையுமில்லை என்பதாகும்.

**‘தெளிவின் மீது’** என்பது, எனது அறிவோடும், தெளிவோடும் என்பதாகும்.

**‘நானும் என்னைச் சேர்ந்தவர்களும்’** என்பது, அதாவது நான் தெளிவோடு அழைப்பதைப் போன்று, என்னைப் பின்பற்றுவோரும், உண்மைப் படுத்துவோரும், என்னை நம்பியோரும் அழைக் கின்றனர் என்பதாகும்.

**‘அல்லாஹ் மிகவும் தூயவன்’** என்பதைக்கொண்டு, அல்லாஹ் அவனைப் பற்றி ஞாபகமூட்டுகிறான், அவனுடைய ஆட்சியில் அவனுக்கு எவ்விதக் கூட்டுமில்லை யெனவும், அவனது அதிகாரத்தில் அவனைத்தவிர வணங்கப்படுவதற்கு எவருமில்லை எனவும், அவனைக் கண்ணியப்படுத்தி, தூய்மைப் படுத்துகிறேன் என்று (நபியே)நீர் கூறுவீராக!., என்ப தாகும்.

**‘நான் இணைவைப்போரிலிருந்தும் இல்லாதவன்’** என்பது, நபியே! நீங்கள் சொல்லுங்கள், நான் இணைவைக்கக்கூடியவர்களை விட்டும் தூய்மையா னவன் என்றும், நான் அவர்களிலுள்ளவனுமில்லை, அவர்கள் என்னோடுள்ளவர்களுமல்ல என்பதாகும்.

இஸ்லாமிய அகீதாவின் முக்கியத்துவம், அதன் பக்கம் அழைப்பதன் அவசியம் பற்றி இந்த வசனம் தெளிவாகவே குறிப்பிடுகின்றது. நபி(ஸல்) அவர்க ளைப் பின்பற்றுபவர்கள், இந்த விடயத்தில் நபிய வர்களை அடியொட்டி நடப்பவர்கள்தான், இவர்கள் இரண்டு பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருப்பர்.

1- **கொள்கை பற்றிய அறிவு.**
2- **அதன் பக்கமான அழைப்பு.**

யார் கொள்கை சம்மந்தமான சட்டதிட்டங்களைப் படிக்காமலும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்காம லும், அதன் பக்கம் அழைக்காமலும் இருக்கிறார் களோ அவர்கள், தாங்கள் நபி வழியைப் பின்பற்று பவர்கள் என்று வாதிட்டாலும், உண்மையில்

அவர்கள் றஸூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர் கள் கிடையாது, அல்லாஹ் கூறுகிறான்:

**‘(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக!, இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!’.** (அந்நஹ்ல்:125). எனும் வசனத்துக்கு, இப்னுல் கைய்யும்(றஹி) அவர்கள் விளக்கம் சொல்லும் போது:

‘அல்லாஹ் தஃவாவின் படித்தரங்களை இவ்வசனத் தில் கூறிக்காட்டுகிறான், அழைப்பு விடுக்கப்படுபவ ரின் நிலையைப் பொறுத்து, அவற்றை மூன்று வகை களாகப் பிரிக்கின்றான்.

1 - ஒன்றில் உண்மையை அவன் தேடக்கூடியவனா கவும், அதனை அறிந்தால் பிறருக்கு அதனை எத்திவைக்கக் கூடியவனாகவும் இருப்பான்.

இவனை நுட்பமான முறையில் அழைத்தால் போதுமானது, இவனுக்கு உபதேசமோ விவாதமோ தேவைப்படாது.

2 - அல்லது உண்மைக்கு எதிராகச் செயற்படுபவ னாக இருப்பான், ஆனாலும் உண்மையை அவன் அறியும்போது அதனைப் பின்பற்றுபவனாகவும், அவனில் அது மாற்றத்தையும் கொண்டுவரும்.

இவனைப் பொறுத்தவரை இவனுக்கு, நன்மை, தீமைகள் சம்மந்தமான அச்சமூட்டலுடன்கூடிய உப தேசம் போதுமானதாகும்.

3 - அல்லது உண்மைக்கு (கொள்கைக்கு) எதிரான வனாகவும், முரணானவனாகவும் இவன் இருப்பான்.

இவனுடன் அழகிய முறையில் விவாதிக்கப்படும், அதனை இவன் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், முடியுமானால் வேறு விடயங்களைக் கொண்டு அவனை அழைக்க வேண்டும்’.

இவைகள் தஃவாவின் அணுகு முறைகளையும், அதற்குத் தேவையான ஒழுங்கு முறைகளையும் தெளிவுபடுத்துவதோடு, தஃவாவில் ஈடுபடுவதாகச் சொல்லிக்கொள்ளும் சில இயக்கங்களின் பிழைக ளையும் தெழிவுபடுத்துகின்றது, இந்த

இயக்கங்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தெளிவுபடுத்திய சீரிய வழி முறைக்கு மாற்றம் செய்கின்றன.

எல்லாவற்றுக்கும் அல்லாஹ் போதுமானவன்.

## தொடக்கவுரை

வெற்றிபெற்ற கூட்டமான அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவின் கொள்கையான இஸ்லாமிய அடிப்ப டைக் கொள்கை எதுவெனில், அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களை யும், அவனது தூதர்களையும், மறுமை நாளையும், நன்மையும் தீமையும் அல்லாஹ் நிர்ணயித்த பிரகா ரமே நடைபெறும் எனவும் நம்புவதாகும்.

இந்த அடிப்படைகளை, அதிகமான அல்குர்ஆன் வசனங்களும், ஹதீதுகளும், சமூகத்தின் ஏகோபித்த முடிவும் அறிவிக்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான்:
**‘புண்ணியம் என்பது உங்கள் முகங்களைக் கிழக்குப் பக்கமோ, மேற்குப் பக்கமோ திருப்பிக்கொள்வதில் இல்லை. ஆனால் புண்ணியம் என்பது, அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு)நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதலில்தான் இருக்கிறது’** (அல்பகரா:177).
மேலும் ஓரிடத்தில் அல்லாஹ் கூறும்போது: **‘நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம்’.** (அல்கமர்:49).
என்றும், வேறொரு வசனத்தில்:
**‘(இறைத்)தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார், (அவ்வாறே) முஃமின்க ளும் (நம்புகின்றனர் இவர்கள்)யாவரும் அல்லாஹ் வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பு கிறார்கள். நாம் இறைத் தூதர்களில் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை’.**
(அல்பகரா:285).
மேலும் அல்லாஹ் சொல்லுகிறான்:

**‘முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனு டைய தூதர்மீதும், அவனுடைய தூதர் மீது அவன் இறக்கிய (இவ்)வேதத்தின் மீதும், இதற்கு முன்னர் இறங்கிய வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளை யும், அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர் களையும் இறுதி நாளையும் (நம்பாமல்) நிராகரிக்கிறா ரோ, அவர் வழிகேட்டில் வெகுதூரம் சென்றுவிட்டார்’.**

(அந்நிஸா:136).

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**‘நம்பிக்கை என்பது, அல்லாஹ்வையும் அவனது தேவர்களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் மறுமை நாளையும் நன்மையும், தீமை யும் அவன்(அல்லாஹ்) நிர்ணயித்த பிரகாரமே நடை பெறும் என்பதையும் நம்புவதாகும் என்றனர்’.** (புகாரி).

இந்த முக்கிமான அடிப்படைகள்தான் ‘ஈமானின் தூண்கள்’ என அழைக்கப்படும் - அனைத்துத் தூதர்களும், மார்க்கங்களும் இதில் ஒன்றுபட்டிருந் தன. வானத்திலிருந்து இறக்கப்பட்ட அனைத்து வேதங்களும் இதனடிப்படையிலேயே அமைந்திருந் தன. யார் இந்த விடயங்களையோ அல்லது இவற் றில் சிலதையோ நிராகரிக்கிறாரோ, அவர் ஈமானை விட்டு வெளியேறி, நிராகரிப்பாளர்களில் ஒருவராக மாறிவிடுவார்.

அல்லாஹ் கூறுகிறான்: **‘நிச்சயமாக அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் நிராகரிப்பவர்கள், அல்லாஹ் வுக்கும் அவன் தூதர்களுக்குமிடையே பாகுபாடு செய்யவிரும்பி, ‘நாம் அவர்களில் சிலரை ஈமான் கொள்வோம் சிலரை நிராகரிப்போம்’ என்று கூறுகின்ற னர், (குப்ருக்கும், ஈமானுக்கும்) இடையே ஒரு வழி யை உண்டாக்கிக்கொள்ள நினைக்கிறார்கள்.**

**இவர்கள் யாவரும் உண்மையாகவே காஃபிர்கள் ஆவார்கள். காஃபிர்களுக்கு இழிவு தரும் வேதனை யைச் சித்தப்படுத்தி வைத்துள்ளோம். யார் அல்லாஹ் வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொண்டு, அத்தூதர்களில் எவரையும் பிரித்துப் பாகுபாடு செய்யா மல் இருக்கின்றார்களோ அவர்களுடைய நற்கூலியை (அல்லாஹ்) அவர்களுக்குக் கொடுப்பான். அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையோனாகவும் இருக்கின்றான்’.** (அந்நிஸா:150-152).

இந்த முக்கியமான அடிப்படைகளில் மிகவும் பிரதா னமானதும், முதன்மையானதும்தான் அல்லாஹ்வை உரிய முறையில் நம்பிக்கை கொள்வதாகும், இந்த முதன்மையான விடயம், தெளிவும், விளக்கமும் செய்யப்பட வேண்டியதாகும். எம்மால் முடிந்தள வுக்கு அல்லாஹ்வின் உதவியுடன் இதனை நாம் தெளிவுபடுத்துவோம்.

## அல்லாஹ்வை நம்புதல்

இதுதான் அடிப்படைகளின் ஆணிவேராகவும் அத் திவாரமாகவும் உள்ளது, அதாவது அல்லாஹ்தான் அனைத்துக்கும் எஜமானும் ஆட்சிக்குரியவனுமா வான், அவன் மட்டும்தான் படைக்கக்கூடியவன், உலகை ஆட்சிசெய்கின்றவனும் அவனே, அவன் மட்டும்தான் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன், அவனுக்கு எவ்வித இணையுமில்லை, அவனல்லாது வணங்கப்படுபவை அனைத்தும் வீணானவையாகும், அந்த இபாதத்துகளும்கூட வீணாகிவிடும்.
அல்லாஹ் கூறுகிறான்:

**'இது, நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மை (இறை வன்), மேலும் அவனையன்றி வேறு எதை அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ - அது பொய்யாகும், இன்னும் நிச்சயமாக அல்லாஹ் - அவனே உயர்ந்தவன், மிகவும் பெரியவன்'.**
(அல்ஹஜ்:62).

அவன் பூரணத்துவமான, சங்கைக்குரிய பண்புக ளுக்குச் சொந்தக்காரனும், அனைத்து விதமான குறைகளையும், இழிவுகளையும் விட்டுத் தூய்மையா னவனுமாகும். இத்தகைய விடயங்களைப் பொதிந்தி ருக்கும் தவ்ஹீத், மூன்று வகைகளாகப் பிரிக்கப் படும்.

1- தவ்ஹீதுர் றுபூபிய்யாஹ்
2- தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ்
3- தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்.

இந்த மூன்று வகையான தவ்ஹீதுகளையும் நாம் வரிவாக நோக்குவோம். இன்ஷாஅல்லாஹ்.

## 1 - தவ்ஹீதுர் றுபூபிய்யாஹ்

தவ்ஹீதுர் றுபூபிய்யாஹ் என்பது:
**'அல்லாஹ்தான் உலகத்தைப் படைத்தான் என நம்பு வதும், அவனே அனைத்தையும் பரிபாலிப்பவன், மரணிக்கச்செய்பவன், உயிர்கொடுப்பவன், உணவளிப் பவன், சகலவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன் என நம்புவதுமாகும்'. (அல்லாஹ்வின் செயற்பாடுகளில் அவனைத் தனிமைப்படுத்துவது).**
இந்த வகையிலான நம்பிக்கை இயற்கையோடு பிணைக்கப்பட்டதாகும், ஏறக்குறைய எந்த சமூகத்த வரும் இதில் கருத்துவேறுபாடு கொள்ளவில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: **'மேலும் அவர்களிடம், 'யார் அவர்களைப் படைத்தது?' என்று நீர் கேட்டால் 'அல்லாஹ்' என்றே அவர்கள் நிச்சயமாகக் கூறுவார் கள்'.**
(அஸ்ஸுக்றுப்:87).
மேலும் ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:
**'(நபியே!) நீர் அவர்களிடம், வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்?' என்று கேட்டால், 'யாவரையும் மிகைத்தவனும் எல்லாவற்றையும் அறிந் தோனுமாகிய அவனே அவற்றை படைத்தான்' என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள்'.**
(அஸ்ஸுக்றுப்:9).
மேலும் அல்லாஹ் கூறும்போது:
**'ஏழு வானங்களுக்கு இறைவனும், மகத்தான அர் ஷு க்கு இறைவனும் யார்?' என்று நீர் கேட்பீராக, அதற்கவர்கள் 'அல்லாஹ்வே' என்று பதில் சொல்வார் கள்'.**
(அல்முஃமினூன்:86).
மேலும் அல்லாஹ்:
**'நீங்கள் அறிந்திருந்தால், இப்பூமியும் இதிலுள்ளவர் களும் யாருக்கு(ச் சொந்தம்?) என்று (நபியே!) நீர் கேட்பீராக!**

**‘அல்லாஹ்வுக்கே’ என்று அவர்கள் கூறு வார்கள்’.** (அல்முஃமினூன் :84-85).
என்று கூறுகிறான்.

இவ்வாறு அல்குர்ஆனில் அதிகமான வசனங்கள் இடம்பெறுகின்றன. அல்லாஹ் முஷ்ரிகீன்களைப் பற்றிக் கூறும்போது, அவர்கள் தவ்ஹீதுர் றுபூபிய்யா வை ஏற்றிருந்தனர் எனவும், படைத்தல், உணவ ளித்தல், உயிர்ப்பித்தல், மரணிக்கச்செய்தல் போன்ற வை அவனுக்கு மட்டுமே உரியதெனவும் ஏற்றுக் கொண்டிருந்தனர் எனக் கூறுகிறான்.
தவ்ஹீதுர் றுபூபிய்யாவையும், இறைவனையும், மனிதர்களில் சிறிய ஒரு கூட்டத்தைத் தவிர வேறெ வரும் நிராகரிக்கவில்லை. இவர்களும்கூட உள்ரங்க மாகவும், உளரீதியாகவும் அதனை ஏற்றுக்கொண்டு, வெளிரங்கமாகத்தான், அதனை நிராகரிப்பதைப் போன்று காட்டிக்கொள்கின்றனர். இவர்களின் இந் நிராகரிப்பு வெறும் பெருமையின் அடிப்படையில் அமைந்ததாகும். பிர்அவ்னைப்பற்றி அல்லாஹ் கூறும்போது: **‘(பிர்அவ்ன் சொன்னான்), பிரமுகர்களே! என்னைத்தவிர உங்களுக்கு வேறொரு நாயன் இருக் கின்றான் என்பதாக நான் அறியவில்லை’.**
(அல்கஸஸ் :38).
மூஸா(அலை) அவர்கள், அவனை(பிர்அவ்னை)ப் பார்த்துச் சொன்னார்கள்:
**‘வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனைத் தவிர (வேறு யாரும்) இவற்றைத் தெளிவான சான்று களாக அனுப்பவில்லை என்பதை நிச்சயமாக நீ அறி வாய்’.** (அல்இஸ்றாஃ:102). மேலும் அல்லாஹ் கூறுகிறான்:
**‘அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள்’.** (அந்நம்ல் :14).

அவர்கள் இறைவனை நிராகரித்த இந்நிராகரிப்புக்கு ஆதாரங்கள் எதனையும் அடிப்படையாகக் கொள்ள வில்லை, மாறாக அவர்களின் பெருமைதான் காரணமாக இருந்தது, அல்லாஹ் கூறுகிறான்:
**‘மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள், நமது இந்த உலக வாழ்க்கையைத்தவிர வேறு (வாழ்க் கை) கிடையாது, நாம்**

**இறக்கிறோம், ஜீவிக்கிறோம், காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்ப தில்லை என்று கூறுகிறார்கள், அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது - அவர்கள் (இது பற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத்தவிர வேறில்லை'.**

(அல்ஜாஸியா:24).

இயற்கையோ, புத்தியோ, கேள்விஞானமோ அவர்க ளின் இந்நிராகரிப்புக்கு ஆதாரமாக அமையவே யில்லை. இவ்வுலக அமைப்பும், அதில் நடைபெறும் நிகழ்வுகளும், அல்லாஹ்வின் ஒருமைப்பாட்டுக்கும் அவனது பரிபாலனத்துக்கும் சிறந்த சாட்சிகளாக உள்ளன, ஏனெனில் படைப்பினங்களுக்கான படைப் பாளனும், நிகழ்வுகளை நிகழ்த்துவோனும் இருந்தே யாகவேண்டும், அல்லாஹ் கூறுகிறான்:

**'அல்லது, அவர்கள் எந்தப் பொருளுமின்றி (தாமாக) படைக்கப்பட்டனரா?, அல்லது அவர்கள் (எதையும்) படைக்கும் (சக்தியுடைய)வர்களா?, அல்லது, வானங் களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா?'.**

(அத்தூர்:35-36).

கவிஞன் ஒருவன் பின்வருமாறு கூறுகிறான்:

**'ஒவ்வொரு பொருளும், அவன் ஒருவன்தான் என அறிவிக்கும் அவனது அடையாளங்களே'!.**

இந்த உண்மைக்குப் பதிலளிக்க நிர்ப்பந்திக்கப் பட்ட, அல்லாஹ் இருக்கிறான் என்பதை நிராகரித்த வர்கள் சிலவேளை, 'இவ்வுலகம் இயற்கையின் வெளிப்பாடாகும், அதாவது மரங்கள், பயிரினங்கள், மிருகங்கள், திண்மப் பொருள்கள் போன்றவைகள் உள்ளடங்கிய ஒரு இயற்கை அமைப்பாகும், இது தானாகவே உருவாகிக்கொண்டதாகும்'! என்பர். அல்லது, 'வெப்பம், குளிர், ஈரம், காய்தல், மென்மை, சொரசொரப்பு போன்றவற்றின் தனித் தன் மைகள், பண்புகள் போன்றவற்றின் உள்ளடக்க மாகும், இவைகளின் ஆட்ட அசைவுகள், வளர்ச்சி, சேர்க்கை, தளிர்விடல் போன்ற பண்புகளில் இருந்துதான், இது (உலகம்) உருவானது!, ஏனெனில் இவர்களின் பார்வையில் இப்பண்புகள் மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடியனவாகும்.

இந்த இரண்டு கருத்துக்களுமே பிழையான கருத்துக் களாகும்.

ஏனெனில் முதலாவது கருத்தின் பிரகாரம், இயற்கை யானது படைத்ததும், படைக்கப்பட்டதுமாகும். பூமி, பூமியைப் படைத்தது. வானம், வானத்தைப் படைத் தது..., இப்படியே அனைத்துப் பொருட்களும் அவை களே, அவைகளைப் படைத்துக்கொண்டன என்பதா கும்!!, இது சாத்தியமே கிடையாது.

ஒரு பொருள், அதனையே அதற்கு உருவாக்கிக் கொள்ள முடியவில்லை எனும்போது, எப்படி அப் பொருளில் இருக்கும் பண்புகள் அப்பொருளை உருவாக்க முடியும்?. எனவே இரண்டாவது கருத்தும் சாத்தியமற்றதாகும், ஏனெனில் ஒரு பொருளின் பண்பு, அந்தப் பொருளோடு தொடர்புபட்டதாகும், அதிலிருக்கும் அந்தப் பண்பு அப்பொருளை விட தரம் குறைந்ததுதான், எனவே எப்படி அது அப் பொருளையே உருவாக்கியிருக்கமுடியும்?!.

குறிப்பிட்ட அந்தப் பொருளே உருவாக்கப்பட்டது என்பது தெளிவாகும்போது, அதன் பண்பும் உருவாக்கப்பட்டது என்பது அவசியமாகின்றது,

இன்னும் இயற்கையென்பது ஒரு இயந்திரமாகும்!, இதற்கு உணர்வுகள் கிடையாது. இது இப்படியிருக்க, எவ்வாறு அதிலிருந்து நவீனமான, நேர்த்தியான, நுட்பத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட, ஒன்றோ டொன்று தொடர்புபட்ட, பிரமாண்டமான செயற்பா டுகள் உருவாகமுடியும்?!!.

இந்த இயற்கை வாதிகளில் இன்னும் ஒரு பிரிவி னர் இருக்கின்றனர். அவர்கள், ‘இவ்வுலகம் எந்த விதமான படைப்பாளியோ, நுட்பமோ இல்லாமல் எதேற்சையாகத் தோன்றியதாகும், அதாவது எல்லா விதமான பொருள்களும் ஒன்று சேர்ந்து, முன்னேற் பாடுகள் எதுவுமில்லாமல், திடீரென உருவானதுதான் இவ்வுலகமாகும்’ எனக் கூறுகின்றனர்!!.

இந்த வாதம் இயற்கைக்கும், புத்திக்கும் பொருந்தாத, ஒரு செல்லுபடியற்ற, முட்டாள் தனமான வாதமாகும். ஏனெனில் இந்த உலகின் பூமியையும், அதன் கோள்களையும், அதன் வானத்தையும், ஏனைய படைப்புகளையும் ஆழமாக நோக்கினால், அதன் ஆச்சரியமான ஒழுங்கமைப்பையும் துல்லியமான நுட்பத்தையும் காணலாம், ஒரு நுட்பமான படைப் பாளியைத்

தவிர, இவ்வாறு செய்வதற்கு யாராலும் முடியாது என்பது தெளிவாகத் தெரியவரும்.

இஸ்லாமிய அறிஞர் ஒருவர் கூறுகிறார்:
(இறைவனை) நிராகரித்த நிராகரிப்பாளர்கள், (அவர் களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது) வாய டைத்துப்போயினர். அதாவது, கடலில் மிதந்து கொண்டிருக்கும் ஒரு கப்பலைப் பற்றிய கேள்வி தான் அது, அந்தக் கப்பல், அது உருவாவதற்கு முன்பு, தானாகவே தனக்குத் தேவையான பொருட் களை எடுத்துக்கொண்டு, அதனையே அது உருவாக் கிக்கொண்டது, பார்த்தவர்கள் அதன் அமைப்பிலோ அது செய்யப்பட்டிருக்கும் பொருள்களிலோ எவ் விதக் குறைகளும் காணவில்லை, அதில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பொருட்களும் சிறந்த முறையில் வைக்கப்பட்டுள்ளன, அந்தக் கப்பல், ஓட்டுனர்கள் யாருமேயில்லாமல் தானாகப் போகவேண்டிய இடத் துக்கு போய்ச்சேர்ந்து, அனைத்துப் பொருட்களை யும் தானாகவே இறக்கிவைத்துவிட்டு மீண்டும் அதன் இடத்துக்கே அது திரும்பி வந்திருக்கிறது, அல்லது பிரமாண்டமான தோட்டமொன்று, அத் தோட்டத்தில் அனைத்து விதமான கனிவகைகளும், புற்பூண்டுகளும் இருக்கின்றன, அவைகள் அனைத் தும் அவற்றுக்குத் தேவையான நீரைத் தானாகவே சென்று எடுத்துக்கொள்கிறன, இந்தத் தோட்டத்தில், அதனைக் கவனிப்பவர் யாருமேயில்லை, பின்னர் அவைகள் பூத்து, காய்த்து, தங்களின் கனிகளைத் தாங்களே விற்று, பிரயோசனம் அடைந்து கொள்ளு கின்றன என்றால், இதனை யாரும் ஏற்றுக்கொள் வார்களா?, இவர்கள் கூட இதனை ஏற்றுக்கொள் கிறார்கள் இல்லை எனும் போது, இவ்வளவு பெரிய மகாபஞ்சமும் அதன் செயற்பாடுகளும் தானாக உரு வாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா?, உனது புத்தி எங்கே சென்று விட்டது?, மிருகங்கள் போன் றல்லவா நீயும் சிந்திக்கிறாய், மனிதன் என்றால் அவனுக்கு சிந்திக்கக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டுமே!.
எனவே இவ்வுலக இரட்சகன் ஒருவன் இருப்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும், அந்த இரட்சகன் ‘அல்லாஹ்’ என்பதை உள்ளத்தால் உறுதியாகவும், அறுதியாகவும்

ஏற்றுக்கொள்வதுதான், தவ்ஹீதுர் றுபூபிய்யாஹ்வை ஏற்றுக் கொள்வதாகும்.

## 2 - தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ்

தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ் என்பது:
**'அனைத்து விதமான இபாதத்துகளிலும், வல்ல அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனுக்கு மட்டுமே அந்த வணக்கங்களைச் செய்வதாகும்'.**
உலூஹிய்யாஹ் என்பதன் கருத்து: **'இபாதா'** என்ப தாகும். இலாஹு என்றால், **'வணங்கப்படக்கூடியது'** என்பது கருத்தாகும். இதனால்தான் இந்த வகையான தவ்ஹீதுக்கு வணக்க வழிபாட்டுக்குரிய தவ்ஹீத் எனப் பெயர் சூட்டப்படுகின்றது.
அறபுப் பாஷையில் இபாதத் என்பது, **'கீழ்ப்படிதல்'** **'சிறுமைப்படல்'** என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. இதனால்தான் அதிகமாக நடந்து செல்லும் பாதைக்கு **'தரீகுன் மஃபத்'** என அறபியில் சொல்லப்படும். 'மஃபத்' எனும் சொல், இபாதா எனும் சொல்லில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஷரீஆவின் கண்ணோட்டத்தில், இபாதத் என்றால் என்ன என்பதில் அறிஞர்களின் சொற்பிரயோகங் கள் மாறுபட்டிருந்தாலும், அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் ஒன்றுபட்டிருக்கின்றன.

புத்தி ரீதியாகவோ, வழக்க ரீதியாகவோ இன்றி, மார்க்க அடிப்படையில் செய்யுமாறு கட்டளை இடப் பட்ட ஒரு விடயம்தான் இபாதத் என்று ஒரு சாரா ரும்,
முழுமையான நேஸத்தோடும், முழுமையான கீழ்ப் படிவோடும் செய்யப்படும் ஒன்றுதான் (இபாதத்) என வும் இன்னுமொரு சாராரும் கூறுகின்றனர்.
ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யாஹ்(றஹி) அவர்கள், இபாத்துக்கு வரைவிலக்கணம் சொல்லும் போது: 'இபாத்தத் என்பது, உள்ரங்கமான மற்றும் வெளிரங்கமான, சொல், செயல்களில் அல்லாஹ் வுக்கு விருப்பமானதும், அவன்

பொருந்தக் கூடியது மான விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியி ருக்கும் ஒரு பெயராகும்' எனக் குறிப்பிடுகிறார்கள்.

இந்த வரைவிலக்கணம் மிக நுட்பமானதும், விசால மானதுமாகும், மார்க்க விடயங்கள் அனைத்துமே இபாதத்துக்குள் அடங்கியிருக்கிறன.
'கீழ்ப்படிவோடு கொள்ளப்படும் நேஸம்' என யார் வரை விலக்கணம் சொன்னரோ, அதுவும் மிக நுட்பமானதும் விசாலமானதும்தான், ஏனெனில் பூரணமான கீழ்ப்படிவும், முழுமையான நேஸமும், யார் நேஸிக்கப்படுகிறானோ அவனுக்குக் கட்டுப் படுவதையும் அவனுக்கு அடிபணிவதையும் பொதிந் திருக்கிறது. எனவே ஒரு அடியானுடைய நேஸமும் பணிவும், அவனால் நேஸிக்கப்படுபவனுக்கு வழங் கப்படும். எந்தளவு நேஸமும், பணிவும் ஒரு மனித னால், தனது இரட்சகனுக்கு வழங்கப்படுகிறதோ அந் தளவு அவனுக்குக் கட்டுப்படுவதும் அமைந்திருக் கும். எனவே ஒரு அடியான் அவனுடைய இரட்ச கன் மீது வைக்கும் நேஸமும், பணிவும், அவனை மட்டுமே வணங்குவதையும், அவனுக்கு எதனையும் இணைவைக்காமல் இருப்பதையும் பொதிந்துள்ளது.
அவ்வாறே வேண்டப்பட்ட இபாதத், நேஸத்தையும் பணிவையும் கொண்டிருக்கிறது.
அத்துடன் இன்னும் மூன்று விடயங்களையும் அது பொதிந்ததாக இருக்கிறது, அவை: நேஸம்வைத்தல், ஆசைகொள்ளல், பயம்கொள்ளல் போன்றவையா கும். இவையனைத்தும் ஒன்றிணைவது அவசியம். இவைகளில் ஒன்றை விட்டுவிட்டாலும், பூரணமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவனாக ஆகமாட்டான்.

நேஸம் வைப்பதன் மூலமாக மட்டும், அல்லாஹ்வை வழிபடுவது சூபிய்யாக்களின் வழிமுறையாகும். ஆசைகொள்ளல் மூலமாக மட்டும், அல்லாஹ்வை வணங்குவது முர்ஜிய்யாக்களின் வழிமுறையாகும். பயம் கொள்ளல் மூலமாக மட்டும், அல்லாஹ்வை வழிபடுவது கவாரிஜ்களின் வழிமுறையாகும்.

அடிபணிதல் இல்லாத நேஸம், ஒரு போதும் இபா தத்தாக மாறாது. யார் ஒன்றை நேசித்து, அதற்குக் கட்டுப்படவில்லையோ, அவர் அதற்கு வழிப்பட்ட வராக ஆகமாட்டார். இது எப்படியெனில், ஒரு மனிதன் தனது பிள்ளையையும் நண்பனையும் நேஸிப்பது போலாகும்.
அவ்வாறே நேஸம் இல்லாத அடிபணிதலும் இபாதத் தாக மாறாது. இது எப்படியெனில், ஒரு அரசனுக்கு அல்லது அநியாயக்காரனுக்கு, அவனுடைய தீங்குக் குப் பயந்து கட்டுப்படுவதைப் போலாகும். இதனால் தான் உயர்ந்த அல்லாஹ்வை வணங்குவதற்கு ஒன்றை விட்டுவிட்டு, ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வது (நேஸம் கொள்வதை விட்டுவிட்டு, கட்டுப்படுவதோ, கட்டுப்படுவதை விட்டுவிட்டு, நேஸம் கொள்வதோ) போதாது, மாறாக அனைத்து விடயங்களையும் விட, அல்லாஹ்வை நேஸிப்பதும் எல்லோரையும் விட, அவனிடத்தில் அல்லாஹ் மிக கண்ணியத்துக்குரியவனாகவும் இருப்பது கடமையா கும்.
இபாதத்துத்தான் அல்லாஹ்வுடைய நேஸத்தின் நோக்கமாகவும் அவனுக்கு திருப்தி அளிப்பதாகவும் இருக்கிறது, அதற்காகத்தான் படைப்புக்கள் படைக் கப்பட்டன, அல்லாஹ் கூறுகிறான்:
**'இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்க வில்லை'.**
(அந்தாரியாத்:56).
இன்னும் அதற்காகவே அனைத்துத் தூதர்களும் அனுப்பப்பட்டார்கள், அல்லாஹ் கூறுகிறான்:
**'மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், ஷைத்தான் களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்'.**
(அந்நஹ்ல்).
என்று வஹீ அறிவித்தோம்.

இபாதத்துக்கள் பல வகைகளாகும், தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், உண்மையுரைப்பது, அமானி தத்தைப் பாதுகாப்பது, பெற்றோருக்கு நலவு செய் வது, உறவினர்களுடன் தொடர்பாயிருப்பது, ஒப்பந் தங்களை நிறைவேற்றுவது, நல்ல காரியங்களை பிறருக்குச் சொல்லிக்கொடுப்பது, தீயவைகளைத்

தடைசெய்வது, காபிர்களுடனும், நயவஞ்சகர்களு டனும் ஜிஹாத்செய்வது, மிருகங்கள், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர், அடிமைகள், கால்நடை கள் போன்றவற்றுக்கு இரக்கம் காட்டுவது, பிரார்த்த னை புரிவது, திக்றுகள் ஓதுவது, அல்குர்ஆன் ஓதுதல் போன்ற அனைத்தும் இபாதத்துக்களே!. அவ்வாறே அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்தல், அல்லாஹ்வுக்குப் பயப்படுதல், அவனிட மே நமது பொறுப்புக்களைப் பாரம் சாட்டல், அதே போல் அறுத்துப் பலியிடல், நேர்ச்சை செய்தல், பாதுகாப்புத் தேடல், உதவி தேடல், அபயம் தேடல் போன்ற சகலதும் இபாதத்துக்களேயாகும்!!.

இபாத்துக்களை எவ்விதமான இணையுமில்லாத, வல்ல அல்லாஹ்வுக்காக, மட்டுமே செய்வது கட்டா யக் கடமையாகும், அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தித்தல், அல்லது அல்லாஹ் அல்லாதவர்க ளுக்காக அறுத்துப் பலியிடல், அல்லது நேர்ச்சை செய்தல், அல்லது உதவி தேடல், அல்லது மரணித் தவர்களிடம் அல்லது மறைவானவர்களிடம் பாது காப்புத் தேடல், அல்லது உயிரோடிருப்பவரிடம் அவருக்கு முடியாத, அல்லாஹ்வுக்கு மட்டுமே முடியுமான விடயத்தில் உதவி தேடல் போன்றவை களைச் செய்பவர் மிகப் பெரிய இணைவைப்பை (ஷிர்க்) செய்தவரும், தவ்பாவின் மூலமே தவிர மன்னிக்கப்பட முடியாத மிகப் பெரும் பாவம் செய் தவருமாகும்.
இவ்வகையான இபாதத்துக்களை சிலைக்கோ, அல்லது மரத்திற்கோ, அல்லது கல்லுக்கோ, அல்லது நபிக்கோ, அல்லது உயிரோடுள்ள அல்லது மரணித்துவிட்ட இறை நேஸருக்கோ செய்தாலும் மிகப் பெரும் இணைவைப்பில் அவர் இருக்கிறார்.
கட்டிடங்கள் கட்டப்பட்ட கப்றுகளில் இன்று நடப்ப தைப்போலாகும். உண்மையில் அல்லாஹ் இபாதத் துகளில் தனக்கு இணைவைக்கப்படுவதைப் பொருந்திக் கொள்ளவே மாட்டான், இணைவைக் கப்படும் பொருள், மிக நெருக்கமான மலக்காக இருந்தாலும், அனுப்பப்பட்ட இறைத்தூதராக இருந் தாலும், இறை நேஸராக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் சரியே!., அல்லாஹ் கூறுகிறான்:

**‘நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவேமாட்டான்’.** (அந்நிஸா:48). மேலும் கூறுகிறான்:

**‘எனவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் (சேர்த்து வேறு) எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள்’.**

(அல்ஜின்:18)

மேலும் ஓரிடத்தில்:

**‘மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணைவைக்காதீர்கள்’.** (அந்நிஸா:36).

மிகக் கவலைக்குரிய விடயம் என்னவெனில், சில நாடுகளில் இஸ்லாமியர்கள் என்று தம்மை அடையா ளப்படுத்திக் கொள்பவர்களால், அல்லாஹ் அல்லாத கப்றுகள், இன்று வணங்கப்படும் சிலைகளாக மாற்றப்பட்டுள்ளன. சிலவேளை அவர்களில் ஒருவர், எந்த இடத்தில் இருந்து கொண்டும் அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பார், அவர் கப்றடியில் இல்லை என்றாலும் சரியே!.

ஒருவர் (உட்கார்ந்து) எழும்பும்போது அல்லது ஆச்சர்யமான ஒரு விடயம், திடீரென நடைபெறும் போது அவர், ‘யாறஸூலுல்லாஹ்’ என்று கூறுவதை போலாகும். அல்லது ‘யாறஸூலுல்லாஹ் எனக்கு உதவிசெய்யுங்கள்’ என்று வேண்டுவதைப் போலா கும், அல்லது ‘யாமுஹ்யித்தீன்’ என்று (ஆபத்தில்) அழைப்பதைப்போலாகும், இவர்கள் இந்தச் செயல்க ளை விட்டும் தடுக்கப்பட்டால், அவர்கள் பின்வரு மாறு பதில் கூறுவார்கள்:

‘இவர்களுக்கு எதுவுமே செய்யமுடியாது என்று நாங்கள் நன்கு அறிவோம், ஆனாலும் இவர்கள் நல்ல மக்கள், அல்லாஹ்விடம் இவர்களுக்கு நல்ல இடமிருக்கிறது, நாங்கள், இவர்கள் மூலம், நல்ல இடத்தையும் சிபாரிசையும் அல்லாஹவிடம் வேண் டுகிறோம்’ என்கின்றனர்.

அல்குர்ஆனை ஓதிக் கொண்டே இவர்கள் கூறும் இந்தக் கூற்று, குறைஷி முஷ்ரிக்குகள் கூறிய கூற்றாகும். ஒன்றில் இவர்கள் அதனை மறந்து விட்டார்கள், அல்லது மறந்தது போன்று நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்:

**'தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்யமுடியாத, அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக் குகள்) வணங்குகிறார்கள், இன்னும் அவர்கள், 'இவை, எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை' என்றும் கூறுகிறார்கள். அதற்கு நீர், 'வானங்களிலோ, பூமியிலோ அல்லாஹ் அறியாதவை (இருக்கின்றன என எண்ணிக்கொண்டு) நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? அவன் மிகவும் பரிசுத் தமானவன். அவர்கள் இணைவைப்பவற்றை விட அவன் மிகவும் உயர்ந்தவன்' என்று கூறும்'.**

**(யூனுஸ்:18).**

**'அறிந்து கொள்வீராக! களங்கமற்ற மார்க்க (வழுபாடு யாவு)ம் அல்லாஹ்வுக்கே உரியது, இன்னும் அவனை யன்றிப் பாதுகாப்பாளர்களை எடுத்துக் கொண்டிருப்ப வர்கள், 'அவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக்கொண்டு செல்வார்கள் என்பதற்காகவே யன்றி நாங்கள் அவர்களை வணங்கவில்லை' (என்கின்றனர்). அவர்கள் எதில் வேறுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைப்பற்றி நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பான். பொய் யனாக நிராகரித்துக் கொண்டிருப்பவனை நிச்சயமாக அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்'.**

**(அஸ்ஸு மர்:3).**

அல்லாஹ் அவர்களை (குறைஷிகளை), நிராகரிப்பா ளர்கள், பொய்யர்கள் என்று கூறுகிறான், அவர்கள் அந்த அவ்லியாக்களை, தங்களின் தேவைகள் நிறைவேறுவதற்கு, அல்லாஹ்வுக்கும் அவர்களுக்கும் மத்தியில் இடைத் தரகர்களாக இருப்பவர்கள் என்று மட்டுமே நம்பியிருந்தார்கள், இதைத்தான் இன்று கப்றுகளை வணங்கிக்கொண்டிருப்பவர்களும் கூறு கின்றனர், அல்லாஹ் கூறுகிறான்:

**'இவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் இப்படியே - இவர்களின் சொற்களைப் போலவேதான் கூறினார் கள். இவர்களின் இதயங்கள் அவர்களுடைய இதயங் களைப் போன்றவையேதான்'.** (அல்பகறா:118).

இந்தக் கெட்ட ஷிர்க்கைக் கண்டிப்பதும், அதன் விபரீதங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் முஸ்லிம்களின் அறிஞர்கள் மீதுள்ள கட்டாயக் கடமையாகும், இன்னும் இவ்வாறு

வணங்கப்படும் சிலைகளை (கப்றுகளை) உடைத்தெறிவதும், இவைகளை விட்டும் பள்ளிவாயில்களைத் தூய்மைப்ப டுத்துவதும் முஸ்லிம்களின் ஆட்சியாளர்கள் மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

இந்தச் ஷிர்க்கை சீர்திருத்தவாத இமாம்கள் பலர், கடுமையாக் கண்டித்து, அதனை விட்டும் மக்களைத் தடுத்ததோடு, அதனைப்பற்றி அச்சமூட்டி எச்சரிக் கையும் செய்தனர்.
ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யாஹ்(றஹி), அவர்களுடைய மாணவன் இப்னுல் கையும்(றஹி), அஷ்ஷேக் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் (றஹி), அஷ்ஷேக் முஹம்மது இப்னு இஷ்மாயீல் அஸ்ஸன்ஆனி(றஹி), அஷ்ஷேக் முஹம்மது இப்னு அலி அஷ்ஷவ்கானி(றஹி) போன்ற, அந்தக் காலத்தில் இருந்த அறிஞர்களும், இந்தக் காலத்தில் இருக்கும் அறிஞர்களும் இவர்களில் அடங்குவர், எம்மிடம் இருக்கும் அவர்களின் நூற்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

'நைலுல் அவ்தார்' எனும் தனது நூலில், இமாம் ஷவ்கானி(றஹி) அவர்கள், இவ்விடயம் தொடர்பாக பின்வருமாறு கூறுகிறார்கள்:
'எத்தனையோ மனிதர்கள், இஸ்லாம் அதற்காக அழுகின்ற, கெட்ட செயலான கப்றுகள் மீது கட்டிடம் கட்டி, அதனை அழகுபடுத்துகின்ற ஈனச் செயலைச் செய்கின்றனர், இறை நிராகரிப்பாளர்கள் சிலைகளுக்கு வணக்கம் செலுத்துவது போலும், அதனை விட கண்ணியமாகவும் சில அறிவீனர் களின் நம்பிக்கை இருக்கிறது, அவைகள் (கப்றுகள்) நன்மைகள் செய்யக்கூடியன எனவும், தீயவைக ளைத் தடுக்கக்கூடியன எனவும் அவர்கள் கருது கின்றனர். தேவையாளர்களின் தேட்டத்தை நிறை வேற்றக்கூடிய ஓர் இடமாகவும், வேண்டுதல்களின் வெற்றிக்குரிய ஓர் ஒதுங்கு தலமாகவும் அவைகளை இவர்கள் ஆக்கி விட்டிருக்கின்றனர், தன்னுடைய இரட்சகனிடம் அடியார்கள் கேட்பவற்றை, அவர்கள் அவைகளிடம் கேட்கின்றனர், இவர்கள் பிரயாணம் செய்து அவைகளிடம் செல்கின்றனர், அவைகளைத் தொட்டுத் தடவி, உதவி தேடுகின்றனர், பொதுவாக ஜாஹிலிய்யாக் காலத்தில் சிலைகளுக்கு அந்த மக்கள் என்னென்ன செய்தார்களோ,

அவைகளில் எதனையுமே விட்டுவிடாமல் இவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி றாஜிஊன்.

இந்தக் கொடிய தீமையும், மிகப் பெரிய இறை நிரா கரிப்பும் நடைபெற்றும்கூட, அல்லாஹ்வுக்காகக் கோபப்படக்கூடிய, தூய்மைமிக்க மார்க்கத்தைப் பாதுகாக்கக்கூடிய, மார்க்கத்தில் ஆர்வமிக்க அறிஞ ரையோ, மாணவனையோ, தலைவரையோ, அமைச்ச ரையோ, அரசரையோ நாம் காணவில்லை.

சந்தேகப்பட முடியாத அளவுக்குள்ள செய்திகள் கூறுகின்ற விடயம் யாதெனில்,
இந்தக் கப்று வணங்கிகளில் அதிகமானவர்கள் அல்லது மிக அதிகமானவர்கள், அவர்களின் பிரச்சினையில், எதிரிகளுக்கு எதிராக, சத்தியம் செய்யவேண்டியேற்பட்டால், அல்லாஹ்வின் மீது பொய்ச் சத்தியம் செய்கின்றனர், அதன் பின்பு, உனது ஷைகின் மீது, அல்லது நீ நம்பியிருக்கும் அந்த அவ்லியாவின் மீது சத்தியம் செய்! என்று சொல்லப்பட்டால், அவர் தடுமாற ஆரம்பிக்கிறார், பயப்படுகிறார், மறுக்கிறார், பின்பு அவர் உண்மை யை ஏற்றுக்கொள்கிறார்!!, அல்லாஹ், இருவரில், இரண்டாமவன் அல்லது மூவரில், மூன்றாமவன் என்று கூறியவர்களுடைய ஷிர்க்குக்கு மேலாக ஆகிவிட்ட இவர்களின் ஷிர்க்குக்கு, இது மிகத் தெளிவான ஆதாரமாகும்.

இறை நிராகரிப்பை விட, இஸ்லாத்துக்கு மிகக் கடினமான சோதனை, வேறு எதுதான் இருக்கிறது?!, அல்லாஹ் அல்லாதவைகளை வணங்குவதை விட, இந்த மார்க்கத்துக்கு வேறு எந்த பலாய்தான், கெடுதியாக இருக்கமுடியும்?, முஸ்லிம்களுக்குப் பீடித்திருக்கும் இந்த முஸீபத்துக்கு, வேறு எந்த முஸீபத்துதான் பகரமாகமுடியும்?!, இந்தத் தெளிவான ஷிர்க்கைக் கண்டிப்பது கடமையில்லை என்றால், வேறு எந்தக் கெடுதியைத்தான் கண்டிப்பது கடமை யாகும்?!!.

லாஹவ்ல வலாகுவ்வத இல்லாபில்லாஹில் அலிய்யுல் அழீம்.

உயிரோடுள்ளவனை நீ அழைத்தால்,
அவனை நீ கேட்கச் செய்யலாம்,

ஆனாலும் நீ உயிரில்லாதவனையல்லவா அழைத்துக் கொண்டிருக்கிறாய்!.

நெருப்பை நீ ஊதியிருந்தாலும்,
அது உனக்கு வெளிச்சம் தந்திருக்கும்,
ஆனாலும் நீ வெறும் மண்ணையல்லவா
ஊதிக் கொண்டிருக்கிறாய்!!.

என்ற தனது கவிதையை இமாம் ஷவ்கானி(றஹி) அவர்கள் படிக்கிறார்கள். அவருக்குப் பின்னால் பலாய்கள் இன்னும் அதிகரித்தேவிட்டன, அவர் விபரித்ததை விட அதிகமாகவே நிலைமை மாறியி ருக்கிறது.

## தவ்ஹீதுல் உலூஹிய்யாவுக்கும் தவ்ஹீதுர் றுபூபிய்யாவுக்குமிடையிலுள்ள தொடர்புகள்

இந்த இரண்டு வகையான தவ்ஹீதுக்கும் இடையி லுள்ள தொடர்புகளாவன:
தவ்ஹீதுல் உலூஹிய்யாவுக்கு, தவ்ஹீதுர் றுபூபிய் யா அவசியமாகும், அதாவது தவ்ஹீதுர் றுபூபிய்யா வை ஏற்றுக்கொள்வது, தவ்ஹீதுல் உலூஹிய்யாவை ஏற்றுக்கொள்வதை அவசியமாக்குவதோடு, அதனை செயல்படுத்துவதையும் வேண்டிநிற்கிறது.

அல்லாஹ்தான் எனது இரட்சகன், அவன்தான் என்னைப் படைத்தான், அவனே எனது விஷயங்க ளைக் கவனிக்கிறான் என்பதை, யார் அறிகிறாரோ அவர், அல்லாஹ்வை மட்டுமே வணங்குவதும், அவனுக்கு எதனையுமே இணைவைக்காமல் இருப்ப தும் கடமையாகின்றது.

தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீதுர் றுபூபிய்யா வைப் பொதிந்துள்ளது, அதாவது தவ்ஹீதுர் றுபூபிய் யா, தவ்ஹீதுல் உலூஹிய்யாவுக்குள் அடங்கியுள் ளது, யார் அல்லாஹ்வை மட்டும் வணங்கி, அவ னுக்கு எதனையும் இணைவைக்காமல்

இருக்கி றாரோ அவர், தனது இரட்சகனும், தன்னைப் படைத்தவனும் அல்லாஹ்வே என்று நம்பிக்கை கொள்வது அவசியமாகிறது.
இப்றாஹீம்(அலை) அவர்களின் கூற்றை, அல்லாஹ் சொல்லிக்காட்டுகிறான்:

**'அவ்வாறாயின், நீங்கள் எதை வணங்கிக்கொண்டி ருந்தீர்கள்? என்பதை நீங்கள் பார்த்தீர்களா? என்று கூறினார். நீங்களும் உங்கள் முந்திய மூதாதையர்க ளும் (எதை வணங்கினீர்கள் என்று கவனியுங்கள்). நிச்சயமாக இவை எனக்கு விரோதிகளே! - அகிலங்க ளின் இறைவனைத் தவிர, (அவனே காப்பவன்) அவனே என்னைப் படைத்தான், பின்னும் அவனே எனக்கு நேர்வழி காண்பிக்கிறான். அவனே எனக்கு உணவளிக்கிறான், அவனே எனக்குக் குடிபானம் தருகிறான், நான் நோயுற்ற காலத்தில், அவனே என்னைக் குணப்படுத்துகிறான். மேலும் அவனே என்னை மரணிக்கச்செய்கிறான், பிறகு அவனே என்னை உயிர்ப்பிப்பான், நியாயத் தீர்ப்பு நாளன்று, எனக்காக, என் குற்றங்களை மன்னிப்பவனும் அவனே என்று நான் ஆதரவு வைக்கின்றேன்'.**

(அஷ்ஷுஅறாஉ:75-82).

உலூஹிய்யாவும் றுபூபிய்யாவும் சில வேளை, ஒன் றாகச் சேர்த்துக்கூறப்படும், ஆனாலும் கருத்தில் தனித்தனியாக இருக்கும், ஒன்று அடுத்ததின் பிரிவாக இருக்கும், பின்வரும் வசனத்தில் இவ்வாறு இடம்பெறுவதை நாம் அவதானிக்கலாம்:

**'(நபியே!) நீர் கூறுவீராக, மனிதர்களின் இறைவனி டத்தில், நான் பாதுகாவல் தேடுகிறேன். (அவனே) மனிதர்களின் அரசன், (அவனே) மனிதர்களின் நாயன்'.**

(அந்நாஸ்:1-3).

இங்கு 'றப்பு' என்ற சொல்லின் கருத்து, 'அவனே படைப்புகளின் செயற்பாட்டை செயற்படுத்தும் அரச னாவான்' என்பதாகும்.
'இலாஹ்' என்பதன் கருத்து, 'உண்மையாக வணங் கப்படுவதற்கு அவன் மட்டுமே தகுதியானவன்' என்பதாகும்.

சில நேரம் இரண்டும் தனித்தனியாகக் கூறப்படும், ஆனாலும், ஒரே கருத்தில் அமைந்திருக்கும், இதற்கு உதாரணம், கப்றில்

மய்யித்திடம் கேள்வி கேட்கும் மலக்குகளின் வார்த்தைகள் போன்றாகும்.

'உன்னுடைய றப்பு யார்?' இதன் கருத்து, 'உனது இலாஹும், உன்னைப் படைத்தவனும் யார்? என்ப தாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்:

**'இவர்கள், நியாயமின்றி, தம் வீடுகளைவிட்டு வெளி யேற்றப்பட்டார்கள், 'எங்களுடைய இறைவன் ஒருவன்தான்' என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் சொல்லவில்லை)'.**

(அல்ஹஜ்:40).

**'அல்லாஹ்வை அன்றி மற்றவைகளை நான் இறைவ னாக எடுத்துக் கொள்வேனா? என்று நபியே! நீங்கள் கேளுங்கள்'.** (அல்அன்ஆம்:164). மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

**'நிச்சயமாக எவர்கள், எங்கள் இறைவன் அல்லாஹ் தான் எனக்கூறி, பின்பு(அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, 'நீங்கள் பயமோ, கவலையோ படவேண்டாம் - உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சிபெறுங்கள்' (எனக் கூறியவாறு) இறங்குவார்கள்'.** (அல்புஸ்ஸிலத்:30).

இவ்வசனங்கள் அனைத்திலும் றுபூபிய்யத் என்பது, உலூஹிய்யத் எனும் கருத்தில் அமைந்தவையாகும்.

இவ்விரண்டு வகைகளிலும், இறைத் தூதர்கள் அழைப்பு விடுத்த வகை, தவ்ஹீதுல் உலூஹிய்யா வாகும், ஏனெனில், தவ்ஹீதுர் றுபூபிய்யாவை அதிகமான மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர், மிகக் குறைவானவர்களைத் தவிர, வேறுயாரும் அதனை நிராகரிக்கவில்லை, நிராகரித்தவர்களும் மனதினா லன்றி, வெளிப்படையாகத்தான் நிராகரித்தனர், அவர்கள் அதனை மட்டும் ஏற்றுக் கொணடிருந்தால் கூட, அது ஈமானுக்குப் போதாது, ஏனெனில் இப்லீஸ்கூட அதனை ஏற்றுக்கொண்டுதான் இருக்கி றான், அல்லாஹ் கூறுகிறான்:

**'(அதற்கு இப்லீஸ்,) 'என் இறைவனே! என்னை நீ வழிகேட்டில் விட்டுவிட்டதால், நான் இவ்வுலகில் (வழி கேட்டைத்தரும் அனைத்தையும்) அவர்களுக்கு அழகாகத் தோன்றும்படி செய்து,**

**(அதன் மூலமாக) அவர்கள் அனைவரையும் வழிகெடுத்தும் விடுவேன் என்றான்’.** (அல்ஹிஜ்ர் :39).

றஸூல்(ஸல்) அவர்கள் எந்த முஷ்ரிக்குகளிடம் அனுப்பப்பட்டார்களோ, அந்த முஷ்ரிக்குகள்கூட இதனை ஏற்றுக் கொண்டுதான் இருந்தனர், அல் குர்ஆனின் பல வசனங்களில் அல்லாஹ் இது பற்றிக் கூறுகிறான், உதாரணமாக ஓரிடத்தில்:
**‘மேலும், அவர்களிடம், யார் அவர்களைப் படைத்தது? என்று நீர் கேட்டால், ‘அல்லாஹ்’ என்றே அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள், அவ்வாறிருக்கும்போது (அவனை விட்டு) அவர்கள் எங்கு திருப்பப்படுகிறார் கள்?’.**
(அஸ்ஸுக்றுப் :87).

யார் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை விட்டுவிட்டு, தவ்ஹீதுர் றுபூபிய்யாவை மட்டும் ஏற்றுக்கொண் டார்களோ அவர்கள், முஸ்லிம்களாக ஆகமாட்டார்கள், ஒரு முஸ்லிமுடைய உயிரும், பொருளும் பாதுகாக்கப்படுவது போல், தவ்ஹீதுல் உலூஹிய்யா வை ஏற்றுக் கொண்டு, அல்லாஹ்வை மட்டும் வணங்காதவருடைய உயிரும், பொருளும் பாதுகாக் கப்படாது

அல்லாஹ்தான் படைப்பாளன், அனைத்து விஷயங் களையும் கவனிப்பவன் அவனே என்று ஏற்றுக் கொள்வது(றுபூபிய்யா)தான், படைப்பினங்களிடம் வேண்டப்பட்ட தவ்ஹீத் என்று சொல்லுகின்ற, பல்ஸபா பேசுகின்ற, சூபித்துவ உலமாக்களின் நம்பிக்கை தவறானது என்பதை இது மிகத் தெளி வாக உணர்த்துகிறது.
யார் தவ்ஹீதுர் றுபூபிய்யாவை ஏற்றுக்கொள்கிறாரோ, அவர் முஸ்லிமாகிவிட்டார் என்பது அவர்களின் கொள்கையாகும். இதனால்தான், அவர்கள், தங்களது கொள்கை விளக்கப் புத்தகங்களில், தவ்ஹீதுக்கு வரைவிலக்கணம் சொல்லும்போது, தவ்ஹீதுர் றுபூ பிய்யாவுக்கே பொருத்தமான விளக்கத்தைச் சொல்லுகின்றனர்.
உதாரணமாக, ‘தவ்ஹீத்’ என்பது, அல்லாஹ் இருக் கிறான் என்றும், அவனே படைப்பாளன், உணவ ளிப்பவன் என்றும்

உண்மைப்படுத்துவதுதான்' என்று எழுதிவிட்டு!, பின்பு தவ்ஹீதுர் றுபூபிய்யா வுக்குரிய ஆதாரங்களைக் கூறுகின்றனர்.

இப்னு தைமிய்யாஹ்(றஹி) அவர்கள் கூறுகின்றார் கள்: 'பொதுவாக தவ்ஹீதை ஏற்றுக் கொள்ளுகின்ற தர்க்கவாதிகள், அவர்களுடைய புத்தகங்களில், தவ்ஹீதை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளனர், அவர்கள் கூறுகின்றனர்: 'அவனுடைய அமைப்பி லேயே அவன் தனித்தவன், அவனுக்குப் பிரிவுகள் கிடையாது, அவனுடைய பண்புகளில் அவன் தனித் தவன், அவனுக்கு நிகர் யாரும் கிடையாது, அவனு டைய செயல்களில் அவன் தனித்தவன், அவனுக் குத் துணை கிடையாது'.
இம்மூன்று வகைகளிலும் அவர்களிடம் மிகவுமே பிரபலமானது, மூன்றாவது வகையாகும். அதாவது செயற்பாட்டில் ஒருமைப்படுத்தல், அதாவது அவனு டைய செயல்களில் அவன் தனித்தவன், அவனுக் குத் துணை கிடையாது, என்ற இந்த வகையான தாகும், அதாவது உலகத்தைப் படைத்தவன் அவன் மட்டுமே எனும் இவ்வகையான தவ்ஹீதைச் சொல்லிவிட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் இருந்தால், இவ்வுலகம் சீராக நடைபெறாது என்பன போன்ற கருத்துக்களைச் சொல்லுகின்ற வசனங் களை அதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர், முக்கியமான தவ்ஹீது இதுதான் எனவும், 'லாயி லாஹ இல்லல்லாஹ்' என்று நாம் சொல்லும் கலிமா வின் பொருளும் இதுதான் எனவும் அவர்கள் கருதுகின்றனர், எந்தளவென்றால் உலூஹிய்யாஹ் என்பதன் கருத்தே, 'புதிதாக ஒன்றை உருவாக்குவ தற்கு சக்திபெற்றவன்' என்பதுதான் எனவும் ஆக்கி விட்டனர்!.
ஆரம்பத்தில் நபி(ஸல்) அவர்கள் அனுப்பப்பட்ட அறபு முஷ்ரிகீன்களும், இந்த விஷயத்தில் நபியவர் களுக்கு மாற்றமான கருத்தைக் கொண்டிருக்கவில்லை, மாறாக அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தான் என அவர்களும் ஏற்றுக்கொண்டிருந்தனர், கழாக்கத்ரைக்கூட அவர்கள் ஏற்றுக்கொண்டி ருந்தனர், இருந்த போதிலும் அவர்கள் முஷ்ரிக்குக ளாகவே கருதப்பட்டனர்'.

இப்னு தைமிய்யாஹ்(றஹி) அவர்களின் இந்தக் கருத்து, படைப்புகளிடம் வேண்டப்பட்ட தவ்ஹீது, தவ்ஹீதுர் றுபூபிய்யாதான் எனக் கூறுவோருக்கு தெளிவான பதிலாகும். இந்தக் கருத்தை பின்வரும் அல்குர்ஆன் வசனமும் உறுதிப்படுத்துகிறது:

**'மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், 'அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங் கள்' என்று (போதிக்குமாறு), நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்'.** (அந்நஹ்ல்:36).

தூதர்கள் அவர்களின் சமூகத்தினருக்கு, 'நீங்கள் அல்லாஹ்தான் படைப்பாளன் என்று ஏற்றுக் கொள் ளுங்கள்' எனக் கூறவில்லை, காரணம் அதனை அவர்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுதான் இருந்த னர், அந்த நபிமார்கள் அவர்களுக்குக் கூறியதெல் லாம்:

**'அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், ஷைத் தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்'.**

(அந்நஹ்ல்:36).

இப்னு தைமிய்யா(றஹி) அவர்கள் மேலும் கூறுகி றார்கள்: 'தூதர்கள் கொண்டுவந்த தவ்ஹீத் எது வெனில், 'கடவுள் தன்மை அல்லாஹ்வுக்கு மட்டு மே உண்டு என்பதை உறுதிப்படுத்துவதாகவும், அல்லாஹ்தான் வணக்கத்துக்குரியவன், அவனைத் தவிர வேறு யாருமே வணங்கப்படக்கூடாது' என்ற விடயத்தைப் பொதிந்ததாகவுமே அமைந்திருந்தது'.

தர்க்க வாதிகளில் சிலரும், சூபிய்யாக்களும் நினைப்பதைப் போல், தவ்ஹீத் என்பதைக் கொண்டு, அல்லாஹ்தான் இவ்வுலகைப் படைத்தான் என நம்பிக்கை கொள்ளும், தவ்ஹீதுர் றுபூபிய் யாஹ்வை மட்டும் நாடப்படவில்லை, இந்த வகை யான தவ்ஹீதை, ஆதாரத்தோடு அவர்கள் நிலை நிறுத்தினால், தவ்ஹீதின் உச்சியையே அவர்கள் எட்டிவிட்டதாகவும், அதைப்பற்றி பேசினாலோ, எழு தினாலோ, தவ்ஹீதை முழுமையாக எழுதிவிட்டதாக வும் அவர்கள் எண்ணுகின்றனர்.

பண்பாடுகளில் அல்லாஹ்வுக்குப் பொருத்தமானவற் றை ஒரு மனிதன் உறுதிப்படுத்தி, அவனைத் தூய் மைப்படுத்தவேண்டிய முறையில் தூய்மைப்படுத்தி, அனைத்தையும் அவன் மட்டும்தான் படைத்தான் என உறுதிப்படுத்தினாலும், அவன் ஒரு ஏகத்துவ வாதியாக முடியாது, எதுவரை எனில், 'அல்லாஹ் வைத் தவிர வேறு கடவுள்கள் கிடையாது, அவன் தான் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன்' என உறுதி கொள்வதோடு, அல்லாஹ்வை மட்டுமே வணங்கக்கூடியவனாகவும், அவனுக்கு எதனையும் இணைவைக்காமல் இருப்பவனாகவும் மாறவேண்டும், கடவுள் எனப்படுபவன் யாரெனில், அவன்தான் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன், கடவுள் என்ப வன், புதியவற்றை உருவாக்குவதற்கு சக்தியுள்ள வனே என்பது கிடையாது, கடவுள் என்பவன் புதிய வற்றை உருவாக்குவதற்கு சக்தியுள்ளவனே என்று விளக்கம் கொடுக்கப்பட்டால், கடவுளுக்கு விஷேட மான தன்மை, அதுதான் என நம்பிக்கை கொண்ட வனாகி, இதையே தவ்ஹீதின் முடிவாக, நோக்கமாக கொள்கிறான், இதனைத்தான் அல்லாஹ்வின் பண் புகளில் அளவுக் கதிகம் விளக்கம் கொடுத்து, வழி கெட்டவர்கள் செய்தனர். அபுல் ஹஸன் அஷ்அரி அவர்கள், அவரை தொடர்ந்தவர்கள் சம்மந்தமாகச் சொல்லப்படுவதும் இதுதான், இவர்கள் நபிமார்கள் கொண்டுவந்த தவ்ஹீதின் எதார்த்தத்தையே புரியாத வர்கள், அறபு முஷ்ரிகீன்களும், அல்லாஹ் மட்டும் தான் அனைத்தையும் படைக்கக்கூடியவன் என்று உறுதி கொண்டிருந்தனர், ஆனாலும் அவர்கள் முஷ்ரிக்குகள் என்றே அழைக்கப்பட்டனர்.

அல்லாஹ் கூறுகிறான்:

**'மேலும் அவர்கள் இணைவைப்பவர்களாக இருக்கின்ற நிலையிலல்லாமல், அவர்களில் பெரும்பாலானோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதில்லை'.**

(யூஸுப்:106).

அவர்களிடம், வானங்கள், பூமியைப் படைத்தது யார்? என்று கேட்டால், அல்லாஹ்தான் என்று கூறி விட்டு, அவனல்லாதவைகளை வணங்குவார்கள் என சில ஸலபுகள் சொன்னார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

**‘நீங்கள் அறிந்திருந்தால், இப்பூமியும் இதிலுள்ளவர்க ளும் யாருக்கு (ச் சொந்தம்? என்று (நபியே!) நீர் கேட்பீராக! ‘அல்லாஹ்வுக்கே’ என்று அவர்கள் கூறு வார்கள், (அவ்வாறாயின் இதை நினைவிற்கொண்டு) நீங்கள் நல்லுணர்வு பெறமாட்டீர்களா? என்று கேட்பீராக!. ‘ஏழு வானங்களுக்கு இறைவனும் மகத்தான அர்ஷு க்கு இறைவனும் யார்? என்றும் நீர் கேட்டால், ‘அல்லாஹ்தான்’ என்று அவர்கள் சொல் வார்கள், (அவ்வாறாயின்) நீங்கள் அவனுக்கு அஞ்சி நடக்கமாட்டீர்களா? என்று நீர் கேட்பீராக!. ‘எல்லா வெற்றின் ஆட்சியும் யார் கையில் இருக்கிறது?, யார் எல்லாவற்றையும் பாதுகாப்பவனாகவும், அவனுக்கு எதிராக எவரும் பாதுகாக்கப்பட முடியாது என்று மிருக்கிறதோ அவன் யாரென்று, நீங்கள் அறிவீர்களா யின் (சொல்லுங்கள்) என்று நீர் கேட்பீராக. அதற்க வர்கள் (இது) ‘அல்லாஹ்வுக்கே’ (உரியது) என்று கூறுவார்கள். (உண்மை தெரிந்தும்) ‘நீங்கள் ஏன் மதிமயங்கியிருக்கிறீர்கள்’ என்று (நபியே!) நீங்கள் கேட்பீராக.** (அல்முஃமினூன்: 84-89).

அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தான் என உறுதிப்படுத்துபவன், அவனை மட்டுமே வணங்கிய வனாகவும், அழைத்தவனாகவும் அவனுடைய விட யத்தில் கூட்டுத் சேர்ந்தவனாகவும், அதிலேயே கூட்டை முறித்துக் கொண்டவனாகவும், அவனுடைய தூதருக்குக் கட்டுப்பட்டவனாகவும் ஒருபோதும் மாற மாட்டான்.
பொதுவாக, குறைஷிகள் எல்லோருமே அல்லாஹ் தான் அனைத்தையும் படைத்தான் என்று கூறிக் கொண்டே, அவனிடம் இவைகள் நம்மை நெருக்கி வைக்கும் என நினைத்தவைகளைக் கொண்டு அவனுக்கு இணைவைத்தனர்.
இதனால்தான் இவர்களைப் பின்பற்றிய சிலர், சூரி யன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்றவைகளுக்கு சுஜூது செய்தனர் - சிரம் தாழ்த்தினர், அவைகளை உதவிக்கு அழைத்தனர், அவைகளுக்காக நோன்பு நோற்றனர், பிராணிகளை அறுத்து, அவைகளுக்குப் பலியிட்டு, நெருக்கத்தை வேண்டியவர்கள், இவை கள் ஷிர்க் - இணைவைத்தல் கிடையாது, இணை வைத்தல் என்பது: ‘இந்தச் சிலைகள்தான், எனது அனைத்து

விடயங்களையும் நிருவகிக்கின்றன’ என்று, நான் நம்பிக்கை கொள்வதுதானே தவிர, அவைகளை இடைத் தரகர்களாக, காரணத்துக்குரிய வைகளாக எடுப்பது ஷிர்க் – இணைவைத்தலில்லை என்று குருட்டுவாதம் புரிந்தனர். ஆனாலும் இவை கள் ஷிர்க் – இணைவைத்தலே என்பது இஸ்லாத் தில் உறுதியாகவே தெரிந்த விடயமாகும்.

இதைத்தான் இன்றைய சமாதி(கப்று) வழிபாட்டுக் காறர்கள் கூறுகிறார்கள், பலவகையான வணக்க வழி பாடுகளை இவர்கள், அவற்றை நெருங்குவதற்காகச் செய்துவிட்டு, இவைகள் ஷிர்க் – இணைவைத்தலே இல்லை, ஏனெனில் நாங்கள், இவர்கள் படைக்கின் றனர், பரிபாலிக்கின்றனர், உணவளிக்கின்றனர் என்று நம்பிக்கை கொள்ளவில்லை, மாறாக இவைக ளில் இருப்பவர்களை நடுவர்களாக வைத்து, அல்லாஹ்விடம் நெருக்கத்தை நாடுகிறோம்’ என்று கூறுகிறார்கள்.

(அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டவேண்டும்)

## தவ்ஹீதுல் உலூஹிய்யாவின் பக்கம் அழைப்பதில், அல்குர்ஆனின் அணுகுமுறைகள்.

உலகம் மற்றும் அதனுடைய இயற்கை அமைப்பைப் பார்த்து, மனிதர்கள் தவ்ஹீதுர் றுபூபிய்யாவை ஏற்றுக்கொண்டிருந்தனர், ஆனாலும் அந்த தவ்ஹீத் மட்டும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டதாக ஆகுவதற்கும், நரக வேதனையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் போதுமானதாக ஆகாது, நபிமார்க ளின் அழைப்புப் பணியில் தவ்ஹீதுல் உலூஹிய்யா வுக்குத்தான் அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டி ருந்தது, குறிப்பாக இறுதி நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் அழைப்புப் பணியாகும்.

'வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை' என்று நீங்கள் கூறுங்கள்! என நபி(ஸல்) அவர்கள் மனிதர்களை அழைத்தார்கள். இந்த அழைப்பு, இபாதத்துகளை அல்லாஹ்வுக்கு மட்டுமே செய்யவேண்டும் என்ப தையும், அவனல்லாத யாருக்கும், எதற்கும் இபாதத் துகளை நிறைவேற்றக் கூடாது என்பதையும் பொதிந் திருக்கிறது. எனவேதான் இவ்வழைப்பை விட்டும், பின்வருமாறு கூறிக்கொண்டு, அவர்கள்(காபிர்கள்) தூரமாக விரண்டோடினார்கள், அல்லாஹ், அவர்கள் சொன்ன வார்த்தையை பின்வருமாறு கூறுகிறான்:

**'இவர் (எல்லா) தெய்வங்களையும், ஒரே நாயனாக ஆக்கிவிட்டாரா? நிச்சயமாக இது, ஓர் ஆச்சரியமான விஷயமே!'.** (ஸாத் :05).

தங்களையும் தங்கள் தெய்வங்களையும் அப்படியே விட்டுவிடுவதோடு, இந்த அழைப்புப் பணியையும் நபியவர்கள் விட்டு விட வேண்டும் என்பதற்காக குறைஷிக் காபிர்கள் படாத பாடுபட்டார்கள், இதற்காக அவர்கள், அனைத்து வழி முறைகளையும் கையாண்டார்கள். சிலபோது, ஆசைகாட்டல், ஆர்வ மூட்டல் மூலமும், சிலபோது பயமுறுத்தல்கள் மூல மும் இதனை அவர்கள் மேற்கொண்டனர். ஆனா லும் நபி (ஸல்) அவர்கள்:

**‘எனது வலது கரத்தில் சூரியனையும் இடது கரத்தில் சந்திரனையும் அவர்கள் தந்து, இந்தப் பிரச்சாரத்தை விடுமாறு கூறினாலும், வல்ல அல்லாஹ் இம் மார்க்கத்தை அனைத்து மார்க்கங்களையும் விட மேலோங்கச் செய்யும்வரை அல்லது மற்றவைகளை அழிக்கும்வரை இப்பிரச்சாரத்தை நான் விடமாட்டேன்’** என உறுதியாகக் கூறிவிட்டார்கள்.

அல்லாஹ்வின் வசனங்கள், இந்தக் கொள்கையின் பக்கம் மக்களை அழைத்துக்கொண்டும், முஷ்ரிக்குகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்துக்கொண்டும், அவர்கள் கொண்டிருந்த கொள்கை பிழையானது என தீர்க்கமாக நிரூபித்துக்கொண்டும் இறங்கிக் கொண்டேயிருந்தது.

தவ்ஹீதுல் உலூஹிய்யாவின் பக்கம் அழைக்கும், அல்குர்ஆனின் முறைகள் பலவாகும், அவற்றில் சிலவற்றை நாம் நோக்குவோம்.

**1- அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டும், அவனல்லாதவைகளை வணங்கக்கூடாது என வந்திருக்கும் அவனின் கட்டளைகள்.**

அல்லாஹ் கூறுகிறான்: **‘மேலும், அல்லாஹ்வையே நீங்கள் வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள்’.** (அந்நிஸா:36).

**‘மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த, உங்கள் இறைவனை வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறை யச்சமும், தூய்மையும்) உடையோராகலாம்’.**

(அல்பகறா:21).

**2- படைப்பினங்களைப் படைத்ததே, தன்னை வணங்குவதற்காகத்தான் எனக் கூறும் வசனம்.**

அல்லாஹ் கூறுகிறான்: **‘இன்னும், ஜின்களையும் மனிதர்களையும், அவர்கள் என்னை வணங்குவதற் காகவேயன்றி நான் படைக்கவில்லை’.**

(அத்தாரியாத்:56).

**3- நபிமார்கள் அனைவரையும், தன்னை வணங்குமாறு அழைப்பதற்கும், தானல்லாது வணங்கப்படும் அனைத் தையும்**

**நிராகரிப்பதற்காகவுமே அனுப்பினேன் எனும் அல்லாஹ்வின் வசனங்கள்.**

அல்லாஹ் கூறுகிறான்:

**'மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், 'அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், அல்லாஹ் அல்லாது வணங்கப்படும் அனைத்தை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்' என்று (போதிக்கு மாறு), நம் தூதர்களை நாம் அனுப்பி வைத்தோம்'.**

(அந்நஹ்ல்:36).

**4- படைத்தல், பராமரித்தல், பக்குவப்படுத்தல் போன்ற காரியங்களில், தான் தனித்திருப்பதை விளக்கி, அதன் மூலம் தவ்ஹீத் உலூஹிய்யாவை நிலைப்படுத்தல்.**

அல்லாஹ் கூறுகின்றான்:

**'மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த, உங்கள் இறைவ னையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும், தூய்மையும்) உடையோராகலாம். அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப் பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்து மழையைப் பொழியச்செய்து, அதிலி ருந்து உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச்செய்கிறான். (இந்த உண்மைகளை யெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தா தீர்கள்'.**

(அல்பகறா:21-22).

**'இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவைதாம். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வையே வணங்குகிறவர்களாக இருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸுஜூது செய்யாதீர் கள் - இவற்றைப் படைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்யுங்கள்'.**

(அல்புஸ்ஸிலத்:37).

**(அனைத்தையும்) படைக்கிறானே அவன், (எதை யுமே) படைக்காத (நீங்கள் வணங்குப)வை போலா வானா? நீங்கள்**

**(இதையேனும்) சிந்திக்க வேண்டா மா?'.** (அந்நஹ்ல்:17).

**5- பூரணத்துவமிக்க பண்புகளை தனக்கு ஒருமைப் படுத்தி, நிலைப்படுத்தி, அவைகள், ஏனைய விக்கிர கங்களுக்கு இல்லை என்று நிராகரிப்பதன் மூலம் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நிலைப்படுத்தல்.**

அல்லாஹ் கூறுகிறான்:

**'ஆகையினால் அவ(ன் ஒருவ)னையே வணங்குவீராக! மேலும், அவனை வணங்குவதில் (கஷ்டங்களையேற் றுப்) பொறுமையுடன் இருப்பீராக! (பெயரில், வல்ல மையில், மற்றும் தன்மைகளில் அல்லாஹ்வுக்கு) நிகரானவனை நீர் அறிவீரா?'.** (மர்யம்:65).

**'அல்லாஹ்வுக்குப் பல அழகிய திருநாமங்கள் இருக் கின்றன, அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்'.** (அல்அஃறாப்:180).

அவனது மிக நெருங்கிய தோழர் இப்றாஹீம்(அலை) அவர்கள், தனது தந்தைக்குச் சொன்ன விடயம் பற்றி அல்லாஹ் கூறும்போது:

**'என் அருமைத் தந்தையே! (யாதொன்றையும்) கேட்க இயலாத, பார்க்க இயலாத, உங்களுடைய எந்தத் தேவையையும் பூர்த்திசெய்ய இயலாத ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்?' என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவுபடுத்தும்'.**

(மர்யம்:42).

**'மூஸாவின் சமூகத்தார், அவர் (சென்ற) பின் தங்கள் நகைகளைக் கொண்டு, ஒரு காளைக் கன்றின் சிலையை(ச் செய்து, அதை தெய்வமாக) ஆக்கிக் கொண்டார்கள், அதற்கு (மாட்டின் சப்தத்தைப் போல் வெறும்) சப்தமிருந்தது, நிச்சயமாக அது அவர்களிடம் பேசவுமாட்டாது, இன்னும் அவர்களுக்கு (நேர்)வழி காட்டவும்செய்யாது என்பதை அவர்கள் கவனித்திருக்க வேண்டாமா'.** (அல்அஃறாப்:148).

**6- காபிர்கள் வணங்கும் விக்கிரகங்களின் இயலாத் தன்மையைத் தெளிவுபடுத்துவதன் மூலம், தவ்ஹீதுல் உலூஹிய்யாவை விளங்கப்படுத்தல்.**

அல்லாஹ் கூறுகிறான்:

**'எந்தப் பொருளையும் படைக்க முடியாதவைகளையா இவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணையாக்குகிறார்கள்? இன்னும், அவர்களோ (அல்லாஹ்வினாலேயே) படைக் கப்பட்டவர்களாயிற்றே!, அவர்கள், இவர்களுக்கு எத்த கைய உதவியும் செய்ய சக்தியற்றவர்களாக இருக் கின்றனர், (அது மாத்திரமல்ல) அவர்கள் தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளவும் சக்தியற்றவர் கள்'.** (அல் அஃறாப்:191-192).

**'அவனையன்றி (வேறு தெய்வங்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக்கொண்டிருப்பவர்களை அழைத்துப் பாருங்கள், அவர்கள் உங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கவோ அல்லது திருப்பிவிடவோ சக்திபெற வில்லை (என்பதை அறிவீர்கள்)'.** (அல் இஸ்றா:56)

**அல்லாஹ்வை விட்டுவிட்டு, வானங்களிலோ பூமியிலோ இவர்களுக்காக எந்த உணவையும் கைவசத்தில் வைத்திருக்காதவைகளையும் (அதற்கு) சக்திபெறாத வைகளையும் இவர்கள் வணங்குகிறார்கள்".**

(அந்நஹ்ல்:73).

**'மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது, எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள்!, நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது. இன்னும், அவர்களிடமிருந்து அது ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போனாலும், அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது தேடுவோனும், தேடப்படுவோனும் பலவீனர் களே'.** (அல் ஹஜ்:73).

**7- அல்லாஹ் அல்லாதவைகளை வணங்குபவர்களை சிந்தனையற்றோர், புத்தி குறைந்தோர் என வர்ணிப்ப தன்மூலம், தவ்ஹீத் உலூஹிய்யாவை நிலைநிறுத் தல்.** அல்லாஹ் கூறுகிறான்:

‘(அப்படியாயின்) அல்லாஹ்வையன்றி உங்களுக்கு எந்த நன்மையோ, தீமையோ அளிக்காதவற்றையா வணங்குகிறீர்கள்’ என்று கேட்டார். சீச்சீ! உங்க ளுக்கும், நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவற் றுக்கும் கேடுதான், நீங்கள் இதனை அறிந்து கொள்ளவில்லையா?’ (என்று இப்ராஹீம் கூறினார்)’.

(அல் அன்பியா:66-67).

‘கியாமநாள் வரை (அழைத்தாலும்) தனக்கு பதில் கொடுக்கமாட்டாத - அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களைவிட வழி கெட்டவர்கள் யார்?, தங்களை அழைப்பதையே அவர்களால் அறிய முடியா து’. (அல் அஹ்காப்:5).

8- அல்லாஹ் அல்லாதவைகளை வணங்கும் முஷ்ரிக் குகளின் இறுதி முடிவு பற்றிய கருத்தும், மிகக் கடுமையான உதவி தேவைப்படும் அந்த மறுமை நாளில், அவர்கள் வணங்கிய கடவுள்களே, அவர் களை விட்டும் நீங்கிவிடும் என்பதை விபரிப்பதன் மூலம், தவ்ஹீத் உலூஹிய்யாவை நிலைநிறுத்துதல்.

அல்லாஹ் கூறுகிறான்:

‘அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக்கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப் பதைப்போன்று நேசிப்போரும் மனிதர்களில் இருக்கி றார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள், அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ள வர்கள், இன்னும் (இணைவைக்கும்) அக்கிரமக்காரர் களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தர விருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டுகொள்வார்கள். அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. நிச்சயமாக தண்ட னை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமை யானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்). (இத்தவறான வழியில்) யாரைப் பின்பற்றினார்களோ அ(த்தலை)வர்கள் தம்மைப் பின்பற்றியோரைக் கைவிட்டு விடுவார்கள், இன்னும் அவர்கள் வேதனை யைக் காண்பார்கள் அவர்களிடையேயிருந்த தொடர்பு கள் யாவும் அறுபட்டுவிடும். (அத்தலைவர்களைப்) பின்பற்றியவர்கள் கூறுவார்கள்: ‘நமக்கு (உலகில் வாழ) இன்னொரு வாய்ப்புக் கிடைக்குமானால், அ(த்தலை)வர்கள் நம்மைக் கைவிட்டு விட்டதைப் போல், நாமும் அவர்களைக் கைவிட்டு விடுவோம்’. இவ்வாறே அல்லாஹ், அவர்கள் செய்த செயல்களை அவர்களுக்குப் பெரும் துக்கம் அளிப்பதாக

எடுத்துக் காட்டுவான். அன்றியும், அவர்கள் நரக நெருப்பிலி ருந்து வெளியேறுகிறவர்களும் அல்லர்’.

(அல்பகறா:165-167).

‘கியாம நாளில், நீங்கள் இணைவைத்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள், யாவற்றையும் நன்கு அறிபவனைப் போன்று, (அவர்கள்) எவருமே உங்களுக்கு அறிவிக்க மாட்டார்கள்’. (அல்பாதிர்:14).

‘கியாம நாள்வரை (அழைத்தாலும்) தனக்குப் பதில் கொடுக்கமாட்டாத - அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களைவிட வழி கெட்டவர்கள் யார்?, தங்களை அழைப்பதையே அவர்கள் அறிய முடியாது. அன்றியும் மனிதர்கள் ஒன்று கூட்டப்படும் (அந் நாளில்), இவர்கள், அவர்களுடைய பகைவர்களாக இருப்பர், அவர்கள், தங்களை வழிபட்டுக் கொண்டி ருந்ததையும் நிராகரித்து, (மறுத்து) விடுவர்’.

(அல்அஹ்காப்:5-6).

‘(மலக்குகளை வணங்கிவந்த) அவர்கள் அனைவ ரையும் ஒன்றுகூட்டும் அந்நாளில், அவன் (அல்லாஹ்) மலக்குகளிடம்: ‘இவர்கள்தானா உங்களை வணங் கிக் கொண்டிருந்தவர்கள்’ என்று கேட்பான். (இதற்கு மலக்குகள்): ‘நீ மிகத் தூய்மையானவன், நீயே எங்கள் பாதுகாவலன், இவர்கள் இல்லை. எனினும் இவர்கள், ஜின்களை வணங்கிக்கொண்டி ருந்தார்கள் - இவர்களில் பெரும்பாலானோர், அவர் (ஜின்)கள் மேல் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்’ என்று கூறுவார்கள்’. (ஸபஃ:40-41).

இன்னும், ‘மர்யமுடைய மகன் ஈஸாவே!, ‘அல்லாஹ் வையன்றி என்னையும், என் தாயாரையும் இரு கடவுள்களாக ஆக்கிக்கொள்ளுங்கள்’ என்று மனிதர் களிடம் நீர் கூறினீரா?’ என்று அல்லாஹ் கேட்கும் போது, அவர்: ‘நீ மிகவும் தூய்மையானவன், எனக்கு உரிமையில்லாத ஒன்றை நான் சொல்வதற்கில்லை. அவ்வாறு நான் கூறியிருந்தால், நீ அதை நிச்சயமாக அறிந்திருப்பாய். என் மனதிலுள்ளதையும் நீ அறிகி றாய், உன் உள்ளத்திலிருப்பதை நான் அறிய மாட் டேன். நிச்சயமாக

**நீயே மறைவானவற்றையெல்லாம் நன்கு அறிபவன்' என்று அவர் கூறுவார்'.** (அல்மாஇதா:116).

**9- சிபாரிசுக்கு உரியவன் அல்லாஹ் மட்டும்தான் என்றும், அவனிடத்திலேயே அதனைத் தேடவேண்டும் என்றும், அவனுடைய அனுமதி இன்றி, யாருமே சிபாரிசு செய்ய முடியாது எனவும், அதுவும் யாருக்கு சிபாரிசு தேடப்படுகிறதோ அவர், அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்ற பின்புதான் சுபாரிசு செய்யப் படுவார் எனவும் சொல்லி, அல்லாஹ்வுக்கும் அவர்க ளுக்கும் இடையில், இடைத்தரகர்களை ஏற்படுத்திய முஷ்ரிக்குகளுக்கு சாட்டையடி கொடுப்பதன் மூலமும் அல்லாஹ் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நிலை நிறுத்துகிறான்.** அல்லாஹ் கூறுகிறான்:

**'அவர்கள் அல்லாஹ் அல்லாதவற்றை(த் தங்களுக் குப்) பரிந்து பேசுபவர்களாக எடுத்துக் கொண்டார் களா?, அவை எந்த சக்தியையும், அறிவையும் பெறாமல் இருந்த போதிலுமா? என்று (நபியே!) நீர் கேட்பீராக!, பரிந்து பேசுதல் எல்லாம், அல்லாஹ் வுக்கே உரியது. வானங்களுடையவும், பூமியுடையவும் ஆட்சி அவனுக்கே உரியது. பின்னர் அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்' என்று (நபியே!) நீர் கூறுவீ ராக!'.** (அஸ்ஸுமர்:43-44).

**'அவன் அனுமதியின்றி, அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்?'.** (அல்பகறா:255).

**'அன்றியும் வானங்களில் எத்தனை மலக்குகள் இருக் கின்றனர்?, எனினும், அல்லாஹ் விரும்பி, எவரைப் பற்றித் திருப்தியடைந்து, அவன் அனுமதி கொடுக்கின் றானோ அவரைத் தவிர வேறெவரின் பரிந்துரையும் எந்தப் பயனுமளிக்காது'.** (அந்நஜ்ம்:26).

இவ்வசனங்களில், சிபாரிசுக்கு உரியவன் அல்லாஹ் மட்டும்தான் என்றும், அவனிடத்திலேயே அதனைத் தேடவேண்டும் என்றும், அவனுடைய அனுமதி இன்றி யாருமே சிபாரிசு செய்ய முடியாது எனவும், அதுவும் யாருக்கு சிபாரிசு தேடப்படுகிறதோ, அவர் அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்ற பின்புதான் சுபாரிசு செய்யப்படுவார் எனவும் தெளிவாக்குகி றான்.

**10- அல்லாஹ் அல்லாத எவைகளை இவர்கள் வணங் குகிறார்களோ அவைகள், அவற்றை வணங்குபவர் களுக்கு**

**எவ்வகையிலுமே பிரயோசனமளிக்காது எனும் போது, அவைகள் எப்படி வணங்கப்படுவதற்குத் தகுதிபெறும் எனக் கேட்பதன் மூலம், அல்லாஹ் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நிலை நிறுத்துகிறான்.**

அல்லாஹ் கூறுகிறான்:

**'(நபியே இந்த இணைவைப்பாளர்களிடம்)நீர் கூறும்! அல்லாஹ்வை விடுத்து, உங்களின் கடவுளர்களாக நீங்கள் யாரைக் கருதுகின்றீர்களோ, அவர்களை அழைத்துப் பாருங்கள்!, அவர்கள் வானங்களிலோ பூமியிலோ உள்ள அணுவளவு பொருளுக்கும் உரிமை யுடையவர்களல்லர். வானம் மற்றும் பூமியின் உரிமை யில் அவர்கள் பங்காளிகளாவும் இல்லை. அவர்களில் யாரும் அல்லாஹ்வுக்கு உதவி புரிபவர்களாயும் இல்லை'.**

(ஸபஃ:22).

**11- ஷிர்க்கைக் கேவலப்படுத்தி, அதனைப் பிழையா னது எனக் கூறும், பல உதாரணங்களை அல்குர் ஆனில் சொல்வதன் மூலம், அல்லாஹ் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நிலைநிறுத்துகிறான்.**

அல்லாஹ் கூறுகிறான்:

**'யாரேனும் அல்லாஹ்வுக்கு இணைவைப்பாராயின் அவர், வானத்திலிருந்து விழுந்துவிட்டவரைப்போன்று ஆகிவிடுகின்றார். இனி அவரைப் பறவைகள் இறாய்ஞ் சிக் கொண்டுசெல்லும், அல்லது காற்று அவரைத் தூக்கிச் சென்று, ஏதேனும் அதழ பாதாளத்தில் எறிந்துவிடும், அங்கு அவர் சின்னாபின்னமாகிடுவார்'.**

(அல்ஹஜ்:31).

இவ்வசனத்தில், ஏகத்துவத்தை உயர்த்தி, அதனைப் புகழ்ந்து, வானத்துக்கு ஒப்பாக்கிச் சொல்லிவிட்டு, ஏகத்துவத்தை விட்டவனை(முஷ்ரிகை), வானத்திலி ருந்து, பூமியின் ஆழமான, கீழ்ப் பகுதியில் விழுந்து, உடல் சின்னாபின்னமானவனைப் போல, எனக் கேவலமாக விபரிக்கிறான் அல்லாஹ், ஏனெ னில் அவன் ஈமானின் மிக உயர்ந்த இடத்திலி ருந்து, நிராகரிப்பின் மிகக் கீழ்த்தரமான இடத்துக்கு விழுந்திருக்கிறான், உண்மையை விட்டும் தூரமாக இருப்பவனின் மனோஇச்சையை, காற்றின் மூலம் தூரமான இடத்துக்கு வீசப்படும் பொருளுக்கு ஒப் பிட்டிருக்கிறான்.

இது அல்குர்ஆனில் இருக்கும் பல உதாரணங்க ளில் ஒன்றேயொன்றாகும், ஷிர்க்கை மிக மிகக் கீழ்த்தரமாகச் சொல்லி,

அதைச் செய்யும் முஷ்ரிக்கு களுக்கு மறுமையில் இருக்கும் தோல்வி சம்மந்த மாக விபரிக்கும் எத்தனையோ வசனங்களை அல் குர்ஆனில் காணலாம்.

நாம் இங்கு எடுத்துக் காட்டியது தவ்ஹீதுல் உலூஹிய்யாவை உறுதிப்படுத்தும் அல்குர்ஆனின் சில அணுகுமுறைகளேயாகும், இவையல்லாமல், அல்குர்ஆனைப் படித்து, ஆய்வுசெய்கின்ற ஒருவர், தவ்ஹீத் கொள்கையை சந்தேகத்துக்கு இடமின்றி, தெளிவாகவும், விரிவாகவும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்குள்ள, உறுதியான பல ஆதாரங்களையும் அணுகுமுறைகளையும் கண்டுகொள்வார்.

## தவ்ஹீதுல் உலூஹிய்யாவில், இணைவைப்பு (ஷிர்க்) நிகழ்தல்!

உண்மையைத் தெரிந்துகொண்ட ஒரு முஸ்லிம், அதற்கு எதிரான, அதனை அழிக்கக்கூடிய தீங்குகளைத் தவிர்ந்து கொள்வதற்காக, அத்தீங்கு பற்றி அறிந்துவைத்திருப்பது அத்தியவசியமாகும், ஒரு கவிஞன் கூறுகிறான்:

**‘நான் ஷிர்க்கை அறிந்துகொண்டது, ஷிர்க்வைப்ப தற்கல்ல. மாறாக நான் அதிலிருந்து தவிர்ந்து நடப்ப தற்காகவே!.**

**‘மனிதர்கள் நபி (ஸல்) அவர்களிடம், நலவுகள் பற்றியே கேட்பார்கள், ஆனால் நானோ தீங்குகள் பற்றியே கேட்கக்கூடியவனாக இருந்தேன், ஏனெனில் நான் அவற்றில் விழுந்து விடக்கூடாது என்பதற்காக’ என ஹுதைபா (றழி) அவர்கள் கூறுகிறார்கள்’.**

**‘ஜாஹிலிய்யாக் காலத்தைப் பற்றித் தெரியாதவர் இஸ்லாத்தில் வளர்வதால், இஸ்லாத்தின் நலவுகள் ஒவ்வொன்றாக அழிவதை நான் பயப்படுகிறேன்’ என உமர் (றழி) அவர்கள் கூறினார்கள்.**

இவைகளுக்கெல்லாம் மேலாக, நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கூறிய விடயத்தை அல்லாஹ் தனது வேதத்தில் விபரிக்கிறான்:

**‘இப்றாஹீம் இவ்வாறு பிரார்த்தனை புரிந்ததை நினைவு கூறுங்கள், ‘என் இறைவனே! (மக்காவாகிய) இந்நகரத்தைப் பாதுகாப்பு**

**அளிக்கக்கூடியதாக ஆக்குவாயாக!! மேலும், என்னையும் என் மக்களையும் சிலைகளை வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!!!, என் இறைவனே! திண்ணமாக இந்தச் சிலைகள் பெரும்பாலான மக்களை வழிக்கேட்டில் வீழ்த்திவிட்டன'.** (இப்றாஹீம்:35).

இணைவைப்பு(ஷிர்க்) நிகழ்ந்து விடக்கூடாது எனும் பயமும், அதை அறிவதன் மூலம் ஒரு முஸ்லிம் அதிலிருந்து விலகிவிடும் அவசியமும் உண்டா கின்றது.

இணைவைப்பு(ஷிர்க்) என்பது:

**'பிரார்த்தனை செய்தல், அறுத்துப் பலியிடுதல், நேர்ச்சை செய்தல், அல்லாஹ்வுக்கு மட்டுமே முடியுமான விடயங்களில், அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடல் போன்ற, வணக்க வழிபாடுகளில் ஏதாவ தொன்றை அல்லாஹ் அல்லாவர்களுக்காகச் செய்வ தாகும்'.**

ஏகத்துவம்(தவ்ஹீத்) என்பது:

**'வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதாகும், இதுதான் மனித இனத்தின் அடிப் படையாகும், இணைவைத்தல் இடையில் உண்டான தாகும்.**

அல்லாஹ் கூறுகின்றான்:

**'மனிதர்கள் எல்லோரும் ஒரே சமூகத்தினராகவே இருந்தார்கள், அல்லாஹ் நபிமார்களை நற்செய்தி சொல்பவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிப்பவர்களாக வும் அம்மக்களுக்கு மத்தியில் அனுப்பினான், அத்துடன் அவர்களோடு, மக்கள் கருத்து வேறுபாடு படுகின்ற போது, தீர்ப்பளிப்பதற்காக உண்மையைக் கொண்டுள்ள வேதத்தையும் அருளினான்'.** (அல்பகறா:213).

இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்:

**'ஆதம் (அலை) அவர்களுக்கும், நூஹ் (அலை) அவர்க ளுக்கும் இடைப்பட்ட காலம், பத்து நூற்றாண்டுகளா கும், இக்காலத்தில் வாழ்ந்த அனைவருமே இஸ்லாத் தில்தான் இருந்தனர்'.**

**'இவ்வசனத்துக்கு இக்கருத்துத்தான் சரியானது'** என இப்னுல் கையிம்(றஹி) அவர்கள், இப்னு கதீர் (றஹி) அவர்கள் போன்றோர் கூறுகின்றனர்.

உலகில் முதன்முதலாக இணைவைப்பு(ஷிர்க்) ஆரம்பித்தது, நூஹ் நபியவர்களுடைய காலத்திலாகும். அக்காலத்தில் வாழ்ந்தவர்கள், அவர்களில் நல்லடி யார்களின் விடயத்தில் அளவு கடந்து சென்றனர்.

இமாம் புகாரி(றஹி) அவர்கள், தனது ஸஹீஹுல் புகாரியில், இப்னு அப்பாஸ்(றழி) அவர்களின் செய்தியை பின்வருமாறு பதிந்திருக்கிறார்கள்:

**'இந்தப் பெயர்களெல்லாம் நபி நூஹ் (அலை) அவர்க ளின் காலத்தில் வாழ்ந்த நல்லடியார்களின் பெயர்க ளாகும், அவர்கள் மறைந்த பின், அவர்கள் அமர்ந்தி ருந்த இடங்களில் அடையாளங்களை ஏற்படுத்துமாறும், அவைகளுக்கு அவர்களுடைய பெயர்களைச் சூட்டுமாறும், ஷைத்தான் அவர்களுடைய சந்ததியின ருக்கு சிந்தனையை ஏற்படுத்தினான், அவர்களும் அப்படியே செய்தனர், அவர்கள் அவ்வடையாளங்களை வணங்கவில்லை, ஆனாலும் அவர்கள் மறைந்த பின் அவர்களுக்குப் பின்னர் தோன்றியவர்கள், எதற்காக அவ்வடையாளங்கள் வைக்கப்பட்டன என்பதை மறந்தவர்களாக, அவற்றையே வணங்க ஆரம்பித்து விட்டனர்'.**

இப்னுல் கையில்(றஹி) அவர்கள் கூறுகிறார்கள்:

**'ஸலபுகளில் பலர் கூறுகின்றனர்: அவர்கள் (நல்லடி யார்கள்) மரணித்தபோது, அவர்களின் சமாதிகளில் பிந்தியவர்கள் தரிக்கலானார்கள், பின்னர் அவர்களுக் காக உருவங்களைச் செய்ய ஆரம்பித்தனர், காலப் போக்கில் அவைகளையே, இவர்கள் வணங்க ஆரம் பித்தும் விட்டனர்'.**

இமாம் புகாரி(றஹி) அவர்கள் அறிவித்திருக்கும், இப்னு அப்பாஸ்(றழி) அவர்களின் செய்தியான, நபி நூஹ்(அலை) அவர்களுடைய கூட்டத்தினர் நல்லடி யார்கள் மேல் அளவு மீறிச்சென்று, அவர்களின் உருவங்களைச் செய்து, அவற்றைப் பாதுகாத்து, அவர்கள் அமர்ந்த இடங்களில் அவைகளை நட்டி வைத்தனர், என்பதிலிருந்து உருவப் படங்கள் செய்வது, அதனை சுவரில் தொங்கவிடுவது, உருவங்கள் செய்து அவைகளை மைதானங்களிலும், பாதைகளிலும் நட்டிவைப்பது போன்ற செயல்களின் அபாயம் தெளிவாவே விளங்குகிறது. இவைகள்தான், மனிதர்கள் ஷிர்க்கின் பக்கம் செல்வதற்குக்

காரணமாக அமைகிறது, ஏனெனில் நபி நூஹ்(அலை) அவர்களின் காலத்தில் நடந்தது போன்று, வரையப்பட்டு, நட்டி வைக்கப்பட்ட அந்த உருவங்களுக்கு கண்ணியம் கொடுத்து, இறுதியில் அவற்றையே வணங்கும் அளவுக்கு அவர்கள் சென்றனர்.

அதனால்தான் உயிருள்ள பொருட்களின் உருவம் அமைப்பதை, இஸ்லாம் தடைசெய்தது மட்டுமின்றி, உருவம் அமைப்பவர்களைச் சாபமிட்டு, அவர்களுக்கு மறுமையில் மிகப்பெரும் வேதனை இருப்பதாக எச்சரிக்கிறது, அவர்கள் தான் மறுமையில் கடு மையான தண்டனைக்குரியவர்கள் என்று சொல்லு வதும், ஷிர்க்கின் தீங்கு நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகவே!. அல்லாஹ்வின் படைப்புகளை அளவுக் கதிகம் நேசிக்கக்கூடாது என்பதுவும் அதற்காகவே!!.

இந்தச் செய்தியில் இருந்து, மனித சமுதாயத்தை வழிகெடுப்பதற்கு அல்லாஹ்வின் சாபம் உண்டான, ஷைத்தான் செய்யும் முயற்சிகளையும் சூழ்ச்சிகளையும் நாம் விளங்குகிறோம். அவன் உணர்வு ரீதி யாகவும், நலவின் பெயரிலும்தான், அம்மக்களிடம் ஊடுருவினான், ஏனெனில் நபி நூஹ்(அலை) அவர் களின் சமூகத்தவர்களிடம், நல்லவர்களை அதிக மாக நேசித்தல், புகழ்தல் போன்ற விடயங்களை ஷைத்தான் நோக்கியபோது, அவர்களை நல்லடியார்கள் மீது அளவுக் கதிகம் நேஸம்வைத்து, அவர்க ளுக்காக ஞாபகார்த்த உருவம் நடுமாறு அவன் எண்ணத்தை உண்டாக்கினான், இதன் மூலம் அம்மக்களை, உண்மையிலிருந்து வெளியேற்றி, வழிகேட்டின் பக்கம் கொண்டுசெல்வதாகவே அவனு டைய திட்டம் இருந்தது, இம்மக்களோடு அவன் தன்னுடைய முயற்சியை சுருக்கிக்கொள்ளவில்லை, அவர்களில் அறிவு குறைந்த, வழிகேடு நிறைந்த சந்ததியினரை, இதனை விட மிக அதிகமாகவே வழிகெடுத்து, நாட்டப்பட்டிருந்த அந்த உருவங்க ளுக்கு வணக்கம் செலுத்துவதை அவர்களுக்கு அழ காக்கிக் காட்டி, மிகப்பெரிய ஷிர்க்கில் அவர்களை விழச்செய்தான், அவர்களின் நபியை அவர்கள் பின்வருமாறு கூறி அலட்சியப்படுத்தினார்கள்:

**‘மேலும் அவர்கள் (சொன்னார்கள்), ‘உங்கள் தெய் வங்களை நீங்கள் விட்டுவிடாதீர்கள்’.** (நூஹ்:23).

இமாம் இப்னுல் கையிம்(றஹி) அவர்கள் கூறுகிறார் கள்: **‘சிலைகளை வணங்கவைக்கும் விடயத்தில் ஷைத்தான் முஷ்ரிக்குகளோடு, அவர்களின் சிந்த னைத் தரத்திற்கு ஏற்றவாறு விளையாடுகிறான்...**

நூஹ்(அலை) அவர்களுடைய கூட்டத்தார்கள், மரணமடைந்தவர்களை வரைந்துவைத்து கண்ணியம் கொடுத்தபோது, அதன் மூலம் அவர்கள், அவைகளை வணங்கும் அளவுக்கு, அவர்களை அவன் (ஷைத்தான்) கொண்டுசென்றான், இக்காரணம்தான் பொதுவாக முஷ்ரிக்குகளின் பொதுமக்களிடம் ஏற் பட்டதாகும்.

அவர்களில் குறிப்பிட்ட சிலர், சிலைகளை நட்சத்திரங்களின் வடிவில் செய்து, அவைகளுக்குத் தனியிடம், பாதுகாப்பு, மறைப்பு, அறுத்துப் பலியிடல் போன்றவைகளை எல்லாம் தயார்செய்தனர், அவர்க ளின் கணிப்பின்படி அச்சிலைகள், உலகில் பிரதிப லிப்பை ஏற்படுத்துகின்றன. இச்செயற்பாடுகள் உலகில் அன்றிலிருந்து இன்றுவரை இருந்து கொண்டுதான் இருக்கிறன.

ஸாபியாக்களின் முஷ்ரிக்குகள்தான், இதற்கு அடிப் படையாக இருக்கின்றனர், இவர்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், நபி இப்றாஹீம்(அலை) அவர்கள், இவர்களுடன் இவர்களின் ஷிர்க்கு சம்மந்தமாக பல விவாதங்கள் புரிந்தனர், அவர்களின் அறிவின் மூலம், இவர்க ளின் வாதங்களையும், அவர்களின் கைகளால், இவர்களின் கடவுள்களையும் உடைத்தெறிந்தனர். அப்போது இப்றாஹீம்(அலை) அவர்களை நெருப்பி லிடுமாறு, அம்மக்கள் கோரிக்கையும் விடுத்தனர்.

இன்னுமொரு கூட்டத்தினர் சந்திரனை சிலையாக எடுத்தனர், அதற்கு வணங்கப்படும் தகுதியிருப்ப தாக அவர்கள் நம்பினர், இவ்வுலகின் கீழ்ப் பகுதி யின் பராமரிப்பு அதனுடையது என்றும் அவர்கள் நம்பினர்.

மற்றுமொரு கூட்டம், நெருப்பை வணங்குகிறது, அவர்கள்தான் மஜூஸிகள்.

வேறொரு கூட்டம், தண்ணீரை வணங்குகிறது.

பிறிதொரு கூட்டம் மாட்டை வணங்குகிறது, இப்ப டியே பட்டியல் நீண்டுகொண்டு செல்கிறது.
இவற்றின் மூலம், அல்லாஹ்வின் பின்வரும் வசனத்தின் கருத்து தெளிவாகிறது:
**‘இன்னும் எவன் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறா னோ அவன், வானத்திலிருந்து விழுந்து, பறவைகள் அவனை வாரி எடுத்துச் சென்றது போலும், அல்லது பெரும் காற்றடித்து, அவனை வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றதுபோலும் ஆகிவிடுவான்’.** (அல் ஹஜ் :31).
மேலும் கூறுகிறான்:
**‘வெவ்வேறான பல தெய்வங்கள் இருப்பது நல்லதா? அல்லது (யாவரையும்) அடக்கி, ஆளுகின்ற ஒருவ னான அல்லாஹ்வா?’**
**‘அவனையன்றி நீங்கள் வணங் கிக் கொண்டிருப்பவை யாவும், நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட (வெறும் கற்ப னைப்) பெயர்களேயன்றி வேறில்லை, அவற்றுக்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கிவைக்க வில்லை, அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவ ருக்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக்கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கின்றான். இதுவே நேரான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும் பாலானோர் இதனை அறிந்து கொள்வதில்லை’**

(யூசுப்:39-40).
மேலும் ஓரிடத்தில்: **‘அல்லாஹ் ஓர் உதாரணம் கூறுகிறான், ஒருவருடன் ஒருவர், கருத்து வேற்றுமை கொண்டிருக்கும், பல எஜமானர்களுக்கு (ஊழியம் செய்யும்) ஒரு மனிதனும், ஒரே மனிதனுக்கு (வேலை செய்யும் பிறிதொரு) மனிதனும் இருக்கின்றனர், இவர் கள் இருவரும் சமமாவார்களா?’.** (அஸ்ஸுமர் :29).

இம்முஷ்ரிக்குகள், இணையில்லாத அல்லாஹ்வை மட்டும் வணங்குவதை விட்டுவிட்டபோது, ஷைத்தா னை வணங்கும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார் கள், மனோஇச்சைகளும், அவர்களின் எண்ணங்க ளும் அவர்களைப் பிரித்துவிட்டன.

இமாம் இப்னுல் கையிம்(றஹி) அவர்கள் கூறுகிறார் கள்: **‘அவர்கள் படைக்கப்பட்ட காரணமான வணக் கத்தைவிட்டு அவர்கள் விரண்டார்கள், ஆத்மாவையும் ஷைத்தானையும் வணங்க, அவர்கள் சோதிக்கப்பட் டார்கள்’.**

தவ்ஹீதின் மூலமே தவிர, உள்ளங்களின் ஒன்று சேரலும், உலகத்தின் நலவும் இருக்காது, அல்லாஹ் கூறுகிறான்:

**‘பூமியில் உள்ளவற்றிலிருந்து இவர்கள், தெய்வங் களை எடுத்துக் கொண்டிருக்கின்றார்களே! அவை, (இறந்தோரை) உயிர் கொடுத்து எழுப்புமா?’ (வானங்கள் பூமி ஆகிய) இவற்றில், அல்லாஹ்வை யன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், நிச்சய மாக அவையிரண்டும் அழிந்தேபோயிருக்கும், அர்ஷு டைய இறைவனாம் அல்லாஹ், அவர்கள் வர்ணிக்கும் (இத்தகைய) தன்மைகளிலிருந்து மிகவும் தூய்மையா னவன்’.**

(அல்அன்பியா:21-22)

அதனால்தான், இவ்வுலகம் தவ்ஹீதை விட்டு வெறு மையடைந்தால் மறுமை நிகழும், நபியவர்களின் ஹதீஸ் ஒன்றை இமாம் முஸ்லிம்(றஹி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**‘அல்லாஹ், அல்லாஹ் எனும் வார்த்தை கேட்கும் வரை மறுமை நிகழாது’.**

ஆரம்ப முஷ்ரிக்குகள் எப்படி அவர்களின் வணக் கங்களிலும், வணங்கப்படுபவைகளிலும் பிரிந்து கிடந்தார்களோ, அவ்வாறே இன்றைய, சமாதி வழி பாட்டாளர்கள் பிரிந்து கிடக்கின்றனர், ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு சமாதி எனும் அடிப்படையில், பல வணக்க வழிபாடுகளை அவைகளுக்குச் செய்து, அவற்றின் பக்கம் நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். சூபியாக்களின் ஒவ்வொரு தரீக்காக்களுக்கும் ஒவ்வொரு ஷேகுமார்கள் என நிர்ணயிக்கப்பட்டு, அவருடைய முரீதுகள் அல்லாஹ்வை விட்டுவிட்டு அவரைக் கடவுளாக எடுத்து, அல்லாஹ் அனுமதிக் காத விடயங்களை அவர்(ஷைகு), அவர்(முரீது)க ளுக்கு ஆகுமாக்குவதை, அவர்களும் ஆகுமாகக் கருதி செயல்படுவதைப் பார்க்கிறோம்.

இதுதான் மனிதர்களுடன் ஷைத்தான் விளையாடும் விளையாட்டாகும், அல்லாஹ்வை ஒருமைப்படுத்து வதன் மூலமும், நபி(ஸல்) அவர்களின் சுன்னாவைப் பின்பற்றுவதன்

மூலமுமே, அவனின் தீங்கிலிருந் தும், கெடுதியிலிருந்தும் பாதுகாப்புப் பெறலாம்.

உண்மையை உண்மையாகக் காண்பித்து, அதனைப் பின்பற்றும் பாக்கியத்தையும், பொய்யைப் பொய்யா கக் காண்பித்து, அதனைத் தவிர்ந்துகொள்ளும் பாக்கியத்தையும் அல்லாஹ் எமக்கு ஏற்படுத்தித் தருவாயாக! அவன்தான் எங்களின் பொறுப்பாளன், மிகச் சிறந்த பொறுப்பாளியாகவும், உதவியாளனாக வும் அவன் இருக்கிறான்.

## இணைவைப்பின் அபாயமும், அது நிகழும் காரணங்களைவிட்டு தவிர்ந்திருப்பதன் அவசியமும்

இணைவைப்பு மிகப் பெரும் பாவமாகும், ஏனெனில் அதனைச் செய்பவர், பாவமன்னிப்புத் தேடாமல் மரணித்தால் அவருக்கு பாவமன்னிப்பே கிடையாது என அல்லாஹ் அறிவிக்கிறான். இவ்வளவுக்கும் அல்லாஹ், அவன்மீதே அவன் இரக்கத்தை கடமையாக்கிக் கொண்டவனாகும், எனவே இது ஷிர்க்கின் கடுமையை தெளிவாக எடுத்துச்சொல்கிறது, ஆகவே ஒரு மனிதன் ஷிர்க்கில் விழுந்துவிடாது கடுமையான எச்சரிக்கையோடு இருப்பதோடு, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, அதனைப் பற்றித் தெரிந்திருப்பதும் அவசியமாகும், ஏனெனில் அது மிக மிக மோசமானதும், மிகப்பெரும் அநியாயமான துமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

**‘நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்’.** (லுக்மான்:13).

ஏனெனில் அது அல்லாஹ்வைக் குறைத்து மதிப்பி டவைப்பதும், அவனுக்கு வேறொன்றை ஒப்பாக்குவ துமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

**‘நிராகரிப்பவர்கள் தம் இறைவனுக்கு(ப் பிற பொருட்க ளைச்) சமமாக்குகின்றனர்’.** (அல்அன்ஆம்:1).

மேலும் ஓரிடத்தில்:

**‘அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்’.**

(அல்பகறா:22).

ஏனென்றால் இணைவைத்தல் என்பது, படைப்பினங் கள் படைக்கப்பட்ட நோக்கத்தையும், அனைத்து விடயங்களும் அல்லாஹ்வுக்காகத்தான் என்ற கொள்கையையும் உடைக்கக்கூடியதும், படைப்பாளனைப் படைப்பினங்களோடு ஒப்பாக்குவதுமாகும், ஒரு மிகப் பெரிய இயலாத ஏழ்மையானவனை, மிகப் பெரிய சக்தியுள்ள, எவருடைய தேவையுமற்ற செல்வந்தநோடு ஒப்பிடுவது, மிக மோசமானதொரு ஒப்பீடாகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது சமூகத்தை, ஷிர்க்கை விட்டும் கடுமையாக எச்சரித்தனர், அதன் பக்கம் கொண்டு செல்லும் அனைத்து வழிக ளையும் அடைத்தனர், வேதம் கொடுக்கப்பட்டவர் களைத் தவிர மற்ற அறபு மக்கள், இல்லை இல்லை உலக மக்கள் அனைவரும் மிக மோசமான நிலை யில்தான், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்படும்போது இருந்தனர், அல்லாஹ் கூறுகி றான்:

**'நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களுக்கு அருள் புரிந்திருக்கின்றான். அவன் அவர்களுக்கு, அவர்களில் இருந்தே ஒரு றஸூலை (தூதரை) அனுப்பிவைத் தான். அவர், அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கிறார், இன்னும் அவர்க ளைப் (பாவத்தைவிட்டும்) பரிசுத்தமாக்குகிறார். மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கின்றார் - அவர்களோ நிச்சயமாக இதற்குமுன், பகிரங்கமான வழி கேட்டிலேயே இருந்தனர்'.**
(ஆலுஇம்றான்:164).

இந்தக் கால வேளையில் படைப்புகள், சுடப்பட்டு நட்டி வைக்கப்பட்ட கற்களைக் கடவுள்களாக எடுத்து, அவைகளில் மண்டியிட்டு, அவைகளை வலம்வந்து, அவர்களின் பொருட்களையும், பிள்ளை களையும் அவைகளுக்கு அறுத்துப் பலியிட்டு, அவைகளை நெருங்கக்கூடியவர்களாக இருந்தனர்.
அல்லாஹ் கூறுகிறான்:

**'இவ்வாறே இணைவைப்போரில் பெரும்பாலானோ ருக்கு, அவர்களுடைய குழந்தைகளையே கொலை செய்வதை, அவர்களுடைய தெய்வங்கள் அழகாக்கி வைத்துள்ளன. அவர்களை நாசப்படுத்தி, அவர்களு டைய மார்க்கத்தையும்**

**குழப்பத்திலாக்கிவிட்டன. அல்லாஹ் நாடியிருந்தால், அவர்கள் அப்படிச் செய்திருக்கமாட்டார்கள். எனவே (நபியே!) நீர் அவர் களையும், அவர்களுடைய பொய்யான கூற்றுக்களை யும் விட்டு விலகிவிடுவீராக'.** (அல் அன் ஆம் :137).

வேதக்காறர்களில் இன்னுமொரு கூட்டம், நேரான வழியை விட்டும் வழி தவறி, கடவுள்களை மூன்று பேர்களாக ஆக்கியது. அல்லாஹ்வை விட்டுவிட்டு, அவர்களின் பாதிரி களையும் சந்நியாசிகளையும் கடவுள்களாக எடுத்துக் கொண்டது. நாசமடைந்த யூதக் கூட்டம், பூமியில் குழப்பத்தை ஏற்படுத்தி, பிரச்சினையை நெருப்பாகப் பரவச் செய்தது, அல்லாஹ்வின் ஒப்பந்தத்தையும் உடன் படிக்கையையும் உடைத்துக்கொண்டது, அதற்கு வழங்கப்பட்ட வேத வரிகளோடே விளையாடியது. எதுவரை யென்றால், அவற்றுக்குரிய இடங்களில் இருந்தே அவற்றை மாற்றியது.

மூன்றாவது ஒரு கூட்டம், நெருப்பை வணக்கும் மஜூஸிகள், இவர்களின் நம்பிக்கைப் பிரகாரம் இவர்களுக்கு இரண்டு கடவுள்கள். ஒன்று நலவு களை உருவாக்குவதற்கு, மற்றொன்று கெடுதிகளை உருவாக்குவதற்கு!.

நான்காவது பிரிவினர் ஸாபிஊன்கள் என அழைக் கப்படுபவர்கள், இவர்கள் கோள்களினதும், நட்சத்தி ரங்களினதும் பிரதிபலிப்புக்கள் உலகில் இருக்கின் றன என நம்பி, அவற்றை வணங்கி வழிபடுபவர் கள்.

ஐந்தாவது கூட்டத்தினர், 'தஃரிய்யாக்கள்' எனப் படுவோர், இவர்கள் எந்த மார்க்கத்தையும் நம்பாதவர்கள், மறுமை சம்மந்தமான நம்பிக்கையோ, கேள்வி, கணக்கு சம்மந்தமான நம்பிக்கையோ அற்றவர்கள் இவர்கள்.

இவ்வாறுதான் நபியவர்கள் தூதராக அனுப்பட்ட போது உலகின் நிலை இருந்தது.

வடிகட்டிய மடமைத் தனத்திலும், குருட்டுத்தனமான வழிகேட்டிலும் உலகம் மூழ்கிக்கிடந்தது, ஆனாலும் அல்லாஹ் நபியவர்களின் அழைப்பின் மூலம், அவ்வழைப்புக்கு பதிலழித்த

மக்களைப் பாதுகாத்து, இருழில் இருந்தவர்களை ஒழிக்குக் கொண்டு வந்தான், இப்றாஹீம்(அலை) அவர்களின் தூய மார்க்கத்தை, நபியவர்கள் உயிர்ப்பித்தார்கள். சிலை களை உடைத்தார்கள், ஷிர்க்கை விட்டும் மக்க ளைத் தடுத்ததோடு, அதன்பால் கொண்டு செல்லும் அனைத்து வழிகளையும் அடைத்தனர்.

## நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தடைசெய்த, இணைவைத்தலின் பக்கம் கொண்டு செல்லும் சொல், செயல் ரீதியான சில விடயங்களைப் பார்ப்போம்.

1- அல்லாஹ்வையும் அவனது படைப்புகளையும் சமமாக விளங்கவைக்கும் வார்த்தைகள் மொழிவதை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள், உதாரணமாக: **'அல்லாஹ்வும் நீங்களும் நாடியவாறு'**, **'அல்லாஹ்வும் நீங்களும் இல்லையென்றால்'** என்பன போன்றவைகளாகும்.
இவற்றுக்குப் பதிலாக, **'அல்லாஹ்வும் பின்பு நீங்க ளும் நாடியவாறு'**, எனச் சொல்லுமாறு கட்டளை யிட்டார்கள், ஏனெனில் அறபு மொழியில் அந்த **'வாவு'** எனும் எழுத்து, சமமான கருத்தைக் குறிக்கப் பயன் படுத்தப்படும். **'தும்ம'** என்பது ஒன்றன்பின் ஒன்றாக வரும் ஒழுங்கமைப்பைக் குறிக்கப்பயன் படுத்தப்படுவதாகும், சொல்லில் குறிப்பிடப்படும் அந்த **'வாவு'**, சிறிய இணைவைப்பாக மாறிவிடும் அது, பெரிய இணைவைப்பின் பக்கம் கொண்டு செல்லும் வழியாகும்.

2- அத்தோடு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், கப்றுகளில் கட்டிடம் கட்டி, அவற்றைக் கண்ணியப் படுத்துவதையும், அவைகளில் விளக்கேற்றுவதையும், அவற்றை அழகுபடுத்துவதையும், அவற்றில் எழுதி வைப்பதையும் தடை செய்தார்கள்.

3- தொழுகையை நிறைவேற்றுகின்ற பள்ளிகளாக சமாதிகளை எடுக்காதீர்கள் எனத் தடுத்தனர், கார ணம், அது சமாதி வழிபாட்டுக்கு இட்டுச் செல்லக் கூடியது என்பதனாலாகும்.

4- நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், சூரியன் உதயமாகும்போதும், அது மறையும்போதும் தொழுவ தைத் தடைசெய்துள்ளனர், ஏனெனில் அந்த நேரத் தில் சூரியனுக்கு சுஜூது செய்பவர்கள், அவர்களு டைய வணக்கத்தை செலுத்துகின்ற நேரம், எனவே அவர்களுக்கு நாம் ஒப்பாகக் கூடாது என்பதற்காக வாகும்.

5- மஸ்ஜிதுல் ஹறாம்(மக்காவில் உள்ளது), மஸ்ஜி துன் நபவி,(மதீனாவில் உள்ளது), மஸ்ஜிதுல் அக் ஸா(பலஸ்தீனத்தில் உள்ளது) ஆகிய மூன்று பள்ளி வாயில்களைத் தவிர, ஏனைய இடங்களுக்கு இபாதத் நோக்கமாவும், அல்லாஹ்வின் நெருக்கத் தைப் பெறும் நோக்கிலும் பிரயாணம் செய்யக் கூடாது என நபியவர்கள் தடைசெய்தனர்.

6- நபியவர்கள் தன்னை அளவுக் கதிகம் புகழ்வ தைத் தடைசெய்தனர், அவர்கள் சொன்னார்கள்:

**'மர்யமுடைய மகன் ஈஸாவை கிறிஸ்த்தவர்கள் அளவு மீறிப் புகழ்ந்ததுபோல், என்னை நீங்கள் அளவு மீறிப் புகழாதீர்கள், மாறாக நான் அல்லாஹ்வின் அடிமை என்றும், அவனுடைய தூதர் என்றுமே சொல்லுங் கள்'.** (புகாரி).

7- வணங்கப்படும் சிலை இருக்கும் இடமாகவோ அல்லது ஜாஹிலிய்யாக் காலத்தில் பெருநாள் கொண்டாடிய இடமாகவோ ஒரு இடம் இருந்தால், அவ்விடத்தில் அனுமதிக்கப்பட்ட நேர்ச்சைகளைக் கூட நிறைவேற்ற வேண்டாம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள்.

தவ்ஹீதைப் பாதுகாப்பதற்காகவும், அதனை அழித்து விடக்கூடிய செயல்களைவிட்டும் சமூகத்தைத் தடுத்துவிடவேண்டும் என்பதற்காகவுமே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்த எச்சரிக்கைகளை எல்லாம் செய்தனர்.

நபியவர்கள் கொடுத்த இந்தப் பூரணமான தெளிவுக் கும், ஷிர்க்கிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் இந்தக் கடுமையான பேணுதலுக்குப் பின்னரும், சமாதி வழிபாட்டுக்காறர்கள் நபியவர்களின் வழி முறைக்கு மாறுசெய்து, அவர்களின் சொல்லுக்கு நேர்முரணாக செயல்பட்டும், எதனை அவர்கள்

தடைசெய்தார்களோ, அதனை இவர்கள் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள், கப்றுகளின் மீது குப்பாக்களைக் கட்டுகிறார்கள், அவைகளின் மீது பள்ளிவாயல்களை அமைக்கிறார்கள், பல வர்ண சோடனைகளை அதிலே செய்கிறார்கள், அல்லாஹ் அல்லாதவர்களுக்கும் – அல்லாஹ் அல்லாதவைக ளுக்கும் அவர்கள் தமது வணக்க வழிபாடுகளைச் செய்கிறார்கள்.

இமாம் இப்னுல் கையிம்(றஹி) அவர்கள் கூறுகி றார்கள்: கப்றடியில் நபி(ஸல்) அவர்கள் கடைப் பிடிக்குமாறு சொன்ன சுன்னாக்களையும், அவர்கள் செய்யக்கூடாதெனத் தடுத்த செயற்களையும், அவர்க ளின் தோழர்கள் செய்த செயற்பாடுகளையும், இப் போதுள்ளவர்களின் செயற்பாடுகளையும் ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்குமிடையில் மிகப் பெரும் வேறுபாட்டைக் காண்பார், இது, அதற்கு நேர்மாற்றமாக இருப்பதைக் காணலாம்.

- நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், கப்றுகளின் பக்க மாகத் தொழுவதைத் தடைசெய்தனர், ஆனால் இவர்களோ, அவைகளின் பக்கமாக மட்டுமல்ல அவைகளிடத்திலும் தொழுகின்றனர்!.

- நபியவர்கள் கப்றுகளைப் பள்ளிகளாக எடுப்ப தைத் தடுத்தனர், ஆனால் இவர்களோ கப்றுகளில் பள்ளிவாயில்கள் கட்டி, அல்லாஹ்வின் வீட்டுக்குப் பொருத்தமில்லாத, மோசமான பெயர்களைச் சூட்டு கின்றனர்!.

- நபியவர்களோ கப்றுகள் மீது விளக்கேற்றுவதைத் தடைசெய்தனர், ஆனால் இவர்களோ அவைகளில் விளக்கேற்றுவதற்காக முண்டியடிக்கின்றனர்.

- நபியவர்களோ கப்றுகளைப் பெருநாட்களாக (திரும்பத் திரும்ப ஒன்றுசேரும் இடங்களாக) ஆக்காதீர்கள் என்றனர், ஆனால் இவர்களோ பெருநாட்களை விட, பல மடங்கு அதிகமாக ஒன்று சேரக்கூடிய நாட்களாக, காலங்களாக அவைகளை ஆக்கிவிட்டனர்!.

● நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், கப்றுகளை 'நிலத்தோடு மட்டமானதாக வையுங்கள்' என்றனர், ஆனால் இவர்களோ இந்த ஹதீஸிற்கு மாற்றம் செய்வதில் அளவுகடந்து செல்கிறார்கள், வீடு கட்டு வதைப் போல் உயர்த்திக் கட்டிடம் கட்டுகின்றனர், அதிலே இவர்கள் குப்பாக்களையும் அமைக்கின்ற னர்.

● கப்றுகள் மீது கட்டிடம் கட்டுவதையும், அவைக ளைப் பூசுவதையும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தடுத்தனர், ஆனால் இவர்கள், அதற்கென்று பலகை களை எடுத்த, அவற்றில் குர்ஆன் வசனங்களையும் குர்ஆன் அல்லாதவைகளையும் எழுதிவைக்கின்ற னர்!.

● நபியவர்கள், கப்றுகளில் இருந்து எடுக்கப்படாத வேறு மண்களை அவற்றில்ப் போடுவதைத் தடுத்த னர், ஆனால் இவர்களோ அவைகளில் அவற்றுக்கு ரிய மண் அல்லாத, மண்களை மட்டுமல்ல, சுண் ணாம்புகளையும் பூச்சுக்களையும் அதிகரிக்கின்றனர்!.

அதாவது கப்றுகளைக் கண்ணியப்படுத்தும், அவைக ளைக் கொண்டாட்ட இடங்களாக எடுத்துக் கொள் ளும், அவைகளில் விளக்கேற்றும், அவைகளில் பள்ளிவாயில்கள், குப்பாக்களை அமைக்கும் இவர் கள், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சொன்ன தற்கு முழுக்க முழுக்க மாற்றமாகவும், அவர்கள் கொண்டு வந்ததற்கு முழுமையாக எதிராகவும் செயற்படுகின்றனர்.

இதனை விடப் பெரிய விடயம், கப்றுகளைப் பள்ளி களாக எடுப்பதும், அவைகளில் விளக்கேற்றுவதும் தான், இவைகள் பெரும் பாவங்களில் உள்ளவை யாகும்.

இந்த விடயம் சம்மந்தமாக வந்திருக்கும் சில நபி மொழிகளை மட்டும் நாம் காண்போம்.

அபில் ஹய்யாஜ் அல் அஸதி(றழி) அவர்கள் அறி விக்கிறார்கள்: **'அலி(றழி) அவர்கள் எனக்குச் சொன் னார்கள்: அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் என்னை ஒரு விடயத்துக்காக அனுப்பி வைத்தார்கள், அவ்விடயத்துக்கு உன்னை**

**நான் அனுப்பட்டுமா? எனக் கேட்டுவிட்டு, நீ எந்தவொரு (செய்யப்பட்ட) உருவத்தைக் கண்டாலும் அதனை அழிக்காமல் விட்டுவிடாதே!, கட்டப்பட்டுள்ள எந்தக் கப்றையும் நீ உடைக்காமல் விட்டு விடாதே'.** (முஸ்லிம்).

ஜாபிர்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், கப்றுகள் பூசப்படுவதையும் அக்கப்றுகளில் உட்காருவதையும், அவைகளில் கட்டி டம் கட்டப்படுவதையும் தடைசெய்தார்கள்'.**

(முஸ்லிம்).

ஜாபிர்(றழி) அவர்களின் வேறொரு ஹதீஸில்:
**'அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், கப்றுகள் பூசப்படுவதையும், அவைகளில் எழுதிவைப்பதையும் தடைசெய்தார்கள்'.** (அபூதாவூத்).
ஜாபிர்(றழி) அவர்களே அறிவிக்கிறார்கள்: **'நபிகள் நாயம்(ஸல்) அவர்கள், கப்றுகள் பூசப்படுவதையும், அவற்றில் எழுதிவைப்பதையும், அவற்றில் இல்லாத தை(மண்ணை) அதில் அதிகரிப்பதையும் தடைசெய் தனர்'.** (முஸ்லிம்).

இவ்வாறான செயற்களை நிராகரிப்பவர்கள், வெறுப்ப வர்கள் குறைவானவர்களாகவும், அவர்கள் கடுமையானவர்களாகவும், அவ்லியாக்களின் உரிமை களில் குறைசெய்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார் கள்.
ஆச்சர்யம் யாதெனில், அவ்லியாக்களின் உரிமை களில் குறைவு ஏற்படுகின்றது என ரோசப்படுபவர் கள், அல்லாஹ்வின் உரிமையில் மிகப் பெரிய ஷிர்க்(இணைவைப்பு) செய்யப்படுவதைப் பார்த்து ரோசப்படவில்லை, அதேபோல், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுடைய வழிமுறைக்கு மாற்றம் செய்யப்படுவதைப் பார்த்தும் ரோசப்படவில்லை,

8- நபியவர்களின் விடயத்தில் அளவு கடத்தல், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களே தன்னை அளவுக் கதிகம் கண்ணியப்படுத்தக் கூடாது, புகழக் கூடாது என்று கூறியிருக்கும் போது, அவர்களல்லாதவர் களை எப்படி அளவுக் கதிகமாகப்

புகழமுடியும்!, ஏனெனில் அவ்வாறு செய்வது, படைப்புகளைப் படைப்பாளனுக்கு இணையாக்குகின்ற செயலாகும்.

அதனால்தான் தன்னை அளவுக்கதிகம் புகழ்வதை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தடுத்தார்கள், நபிய வர்கள் சொன்னார்கள்: **'மர்யமுடைய மகன் ஈஸா (அலை) அவர்களை, கிறிஸ்தவர்கள் புகழ்ந்ததுபோல் என்னை நீங்கள் புகழாதீர்கள், நான் ஒரு அடிமை, எனவே அல்லாஹ்வின் அடிமை எனவும் அவனுடைய தூதர் என்றுமே என்னைச் சொல்லுங்கள்'.**

(புகாரி, முஸ்லிம்).

அதாவது ஈஸா(அலை) அவர்களை கிறிஸ்தவர்கள் புகழ்வதில் அளவு கடந்தார்கள், எதுவரை என்றால், அவரைக் கடவுள் என்றே சொன்னார்கள், எனவே என்னை நீங்கள் அளவு கடந்து புகழாதீர்கள், நான் ஒரு அடிமை, எனவே அல்லாஹ் என்னை எப்ப டிப் புகழ்ந்தானோ எப்படி, அல்லாஹ்வின் அடிமை என்றும் அவனுடைய தூதர் என்றுமே சொல்லுங் கள் என நபியவர்கள் கட்டளையிடுகின்றனர்.

அல்லாஹ் கூறுகிறான்: **'தன் அடியார் மீது, எந்த விதமான முரண்பாடுகளும் இல்லாமலாக்கி இவ்வே தத்தை இறக்கிவைத்தானே, அந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தாகும்.** (அல்கஹ்ப்:1).

மேலும் ஓரிடத்தில்: **'உலகத்தார் யாவரையும் அச்ச மூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, (சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ் வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்'.** (அல்புர்கான்:1).

மேலும் ஓரிடத்தில்: **'மேலும், நிச்சயமாக அல்லாஹ் வின் அடியார், அவனைப் பிரார்த்தித்தவராக நின்ற போது, அவர்பால் அவர்கள் கூட்டம் கூட்டமாக (வந்து) நெருங்கிவிடுகின்றனர்'** (அல்ஜின்:19).

இன்னும் ஓரிடத்தில்: **'தூதரே! உம் இறைவனிட மி ருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும், (இவ்வாறு) நீர் செய்யாவிட் டால், அவனுடைய தூதை, நீர் நிறைவேற்றியவராக ஆகமாட்டீர்'.**
(அல்மாயிதா:67).

மேலும் அவன்: **'நபியே! நீங்கள் பெண்களைத் 'தலாக்' சொல்வீர்களானால், அவர்களின் 'இத்தா' வைக் கணக்கிட ஏற்ற வகையில், (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள்'.**

(அத்தலாக்:1).

இணைவைப்பாளர்கள், நபியவர்களுக்கு மாற்றம் செய்வதையும், அவர் தடுத்தவற்றை செய்வதற்குமே முற்படுகின்றனர், அவர் தடுத்ததையும், எச்சரிக்கை செய்ததையும் செயல்படுத்தி, அவரைக் கண்ணியப் படுத்தினார்கள், மிகப் பெரும் அளவில் அவர்கள் முரண்பட்டார்கள், அளவு மீறலிலும், இணைவைத் தலிலும், அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாயிருக் கிறார்கள். நபியவர்களைப் புகழும் விடயத்தில் அவர்களின் பாடல்களிலும் கவிதைகளிலும் தெளி வாகவே ஷிர்க் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்,

'புர்தா' எனும் தனது புத்தகத்தில், பூஸரி என்பவர் நபியவர்களை அழைத்துப் பின்வருமாறு பாடுகிறார்:
'படைப்புகளில் கண்ணியத்துக்குரியவரே, கடுமை யான சோதனைகள் வரும்போது நான் உதவி தேடுவதற்கு உம்மைத்தவிர வேறு யார்தான் இருக்கி றார்கள்'.
அத்தோடு இதற்கு அடுத்து வருகின்ற பாடல்களி லும், பிரார்த்தனை, உதவிதேடல், இரட்சிப்புத்தேடல் போன்றவைகளை நபியவர்களிடம் கேட்பதையும், மிகக்கடுமையான காலகட்டங்களிலும், மிக நெருக்க மான வேளைகளிலும் நபியவர்களை அழைத்து இரட்சிப்புத் தேடுகிறார்!, அல்லாஹ்வை மறந்தே விட்டார்!!.

ஷைத்தான் இக்கவிஞருக்கும் இவரல்லாதவர்களுக் கும், இந்தக் கெட்ட செயல்களை அழகாகக் காட்டி னான், நபியவர்களைப்

புகழ்வதில் அளவு கடந்து சென்ற இவ்விடத்தை – அது பெரிய ஷிர்க்காக இருந்தும் - நபியவர்கள் மீதுள்ள நேஸமாகவும், கண்ணியமாகவும், அவர்களின் உள்ளங்களில் வெளிப்படுத்திய அதேநேரம், சுன்னாவைப் பின் பற்றி, அவர்களை அளவு மீறிப் புகழாமலிருப்பதை ஒரு குறையாகவும், வெறுப்பாகவும் அவர்களின் உள்ளங்களில் வெளிப்படுத்தினான்.
நபி(ஸல்) அவர்கள் தடைசெய்த, அவர்களை அளவு மீறிப் புகழ்தலும், அவர்களின் சொல், செயற்களில் அவர்களைப் பின்பற்றாத தன்மையும், அவரளித்த தீர்ப்புக்களை பொருந்திக்கொள்ளாத தன்மையும்தான் அவர்களின் விடயத்தில் நாம் செய்யும் உண்மை யான குறைபாடாகும். அவர்களை கண்ணியப்படுத் தலும், அவர்களை நேசித்தலும், அவர்களைப் பின் பற்றுவதிலும் அவர்களின் மார்க்கத்திற்கும் வழி முறைக்கும் உதவி செய்வதன் மூலம்தான் ஏற்பட முடியும்.

அப்துல்லாஹ் இப்னு ஸிக்கீர்(றழி) அவர்கள் கூறுகி றார்கள்: ‘பனூ ஆமிருடைய சிறியதொரு கூட்டத் தோடு, நபி(ஸல்) அவர்களிடம் நாம் சென்று, நபிய வர்களைப் பார்த்து, நீங்கள் எங்களின் (செய்யித்) தலைவரும், தலைவருடைய மகனும்… என்று கூறி னோம்’. அதற்கு நபி(ஸல்) அவர்கள்: **‘உயர்ந்த அல்லாஹ்தான் தலைவன்’** என்றனர், அப்போது நாம்: ‘சிறப்பிலும் கண்ணியத்திலும் எங்களிலேயே மிகச் சிறந்தவர் என்றோம், அப்போது நபி(ஸல்) அவர்கள்: **‘உங்களின் விடயத்தைச் சொல்லுங்கள், ஷைத்தான் உங்கள் மூலம் வழி தேடிக்கொள்ளாமல் இருக்கட்டும்’** எனக் கூறினர். (அபூதாவூத்).

இந்த ஹதீஸில் நபி(ஸல்) அவர்கள், தன்னை, ‘நீங்கள் எங்களின் தலைவர்’ என்று சொன்னபோது, ‘நீங்கள் என்னை அப்படிச் சொல்லாதீர்கள்’! எனத் தடைசெய்ததோடு, ‘கண்ணியத்துக்குரிய, உயர்ந்த அல்லாஹ்தான் எமது தலைவர்’ என பதில் சொன் னார்கள், அத்தோடு ‘நீங்கள்தான் சிறப்பிலும் கண் ணியத்திலும் எங்களிலேயே மிகச் சிறந்தவர்’ எனக் கூறியபோது, அதையும் கூடச் சொல்லாதீர்கள் எனத் தடுத்த காரணமே, தனது

விடயத்தில் அளவு மீறிவிடுவார்களோ எனப் பயந்ததுதான், அதனால் தான், 'ஷைத்தான் உங்கள் மூலம் வழி தேடிக் கொள்ளாமல் இருக்கட்டும்' எனக் கூறினார்கள்.
இதிலிருந்து விளங்குவது, தனக்கு முன்னால் ஒரு வன், தன்னைப் புகழ்கிறான் என்றால், அவன் ஷைத்தானுடைய வேலையைச் செய்கிறான் என்பதா கும். இது புகழப்படுபவனை கண்ணியப்படுத்தும் நிலைக்கு இட்டுச்செல்லும், இது தவ்ஹீதின் பூரணத் துவத்துக்கு எதிரானது, அத்தோடு, சிலவேளை புகழ் கின்றவன் யாரைப் புகழ்கிறானோ அவனை, அளவு மீறித் தகுதியில்லாத அளவு புகழ்வதற்கும் வாய்ப்பி ருக்கிறது.

இணைவைத்தலி(ஷிர்க்கி)ன் பக்கம் மக்களைக் கொண்டுசெல்லக்கூடாது என்பதற்காகவும், கடவுளின் பண்புகளைக் கொண்டு, மக்கள் தன்னை வர்ணிக் கக்கூடாது என்பதற்காகவும் நபி(ஸல்) அவர்கள், தன்னை அளவு மீறிப் புகழக்கூடாது எனத் தடை செய்தார்கள், இவ்வாறான எல்லை மீறல்கள், நபிய வர்களைப் புகழ்தல் எனும் பெயரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, உதாரணமாக 'புர்தா' எனும் பாடல் புத்தகத்தை எழுதியவர், இவரைப் போன்ற பலரும் உள்ளனர். புர்தாவின் ஆசிரியர் கூறுகிறார்:
'படைப்புக்களில் கண்ணியத்துக்குரியவரே!, கடுமை யான சோதனைகள் வரும்போது, நான் உதவி தேடு வதற்கு உம்மைத்தவிர வேறு யார்தான் இருக்கிறார் கள்?'.
இன்னுமொரு இடத்தில்: 'உங்களின் பெரும் கொடையினால்தான் இவ்வுலகமும் அதிலுள்ளவைக ளும். லவ்ஹுல் மஹ்பூல், எழுதுகோல் எல்லாமே உங்கள் அறிவுக்கு உட்பட்டவைகள்தான்?'. என்று பாடியிருக்கிறார்.

தவ்ஹீதின் மதிப்பு பாதுகாக்கப்படவேண்டும், அதனை சீரழிக்கின்ற விடயங்களாலும், ஷிர்க்கின் மூலமும், அதற்கிட்டுச் செல்லும் வழிகள் மூலமும் தவ்ஹீத் பலமிழந்து விடக்கூடாது என்பதற்காகவும் அதனை(புகழை) விட்டுவிடுமாறு நபி(ஸல்) அவர்கள் சமூகத்துக்கு வழிகாட்டி, நற்போதனை செய்தார்கள். அவ்வழிகாட்டலிலுள்ளதுதான், அம் மக்கள் 'நீங்கள் எமது

தலைவர்' எனக் கூறியபோது, 'அவ்வாறு என்னை அழைக்காதீர்கள்' எனத் தடைசெய்ததா கும்.

இப்னுல் அதீர்(றஹி) அவர்கள், தனது 'நிஹாயா' எனும் புத்தகத்தில் குறிபிடுகிறார்கள்: 'செய்யித்' எனும் சொல், 'பரிபாலிப்பவன்' 'அரசன்' 'சங்கைக் குரியவன்' 'சிறந்தவன்' 'கண்ணியத்துக்குரியவன்' 'இரக்கமுள்ளவன்' 'தனது சமூகத்திடமிருந்து வரும் வேதனைகளை சகித்துக்கொள்வன்' 'கணவன்' 'தலைவன்' 'முன்னணியில் இருப்பவன்' எனும் கருத்துக்களில் பயன்படுத்தப்படும்.

இந்த ஹதீஸ் சொல்லும் விடயம், அல்லாஹ்தான் உண்மையான 'உயர் ஆட்சிக்கு உரியவன்', படைப் புக்கள் அனைத்தும் அவனுடைய அடிமைகள் என் பதாகும்.
'செய்யித்' எனும் சொல், பொதுவாக அல்லாஹ் வுக்கு உபயோகிக்கப்பட்டால், அது 'அரசன், 'பரி பாலிப்பவன்' 'தலைவன்' போன்ற கருத்துக்களைப் பொதிந்திருக்கும்.

இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள் சொன்னார்கள்: 'அல்லாஹுஸ்ஸமத்' என்றால், 'தலைமைத்துவத்துக் குத் தேவையான, அனைத்து விடயங்களும் பூரண மடைந்த தலைவன்' என்பது கருத்தாகும்.

இப்னுல் அதீர்(றஹி) கூறுகிறார்: 'குறைஷிக் கோத் திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர், நபி(ஸல்) அவர்க ளிடம் வந்து, 'நீங்கள் குறைஷிகளின் தலைவர்'! எனப் புகழ்ந்தார், அதற்கு நபியவர்கள்: 'அல்லாஹ்தான் தலைவன்' என்றனர், அதாவது 'அவன்தான் தலைமைக்குத் தகுதியானவன்' என்ற னர், பணிவானவராக, தனக்கு முன்னால் தன்னைப் புகழ்வதை வெறுத்தவர் போல் இவ்வாறு சொன்னார் கள்'.

**'நான் ஆதமுடைய மக்களின் தலைவர், அதனால் பெருமை கிடையாது'** எனும் நபியவர்களின் ஹதீஸ், அல்லாஹ் அவர்களை கண்ணியப்படுத்தியதையும், அவர்கள்

தலைமையானவர் என்பதையும் அறிவிக் கும் செய்தியாகவும், அல்லாஹ் அவர்களுக்கு அளித்த அருட்கொடைகளைப் பற்றிப் பேசிய பேச் சாகவும், தனது சமூகத்துக்கு அதனை அறிமுகப் படுத்தும் பொருட்டுமே அவ்வாறு சொன்னார்கள். ஏனென்றால், சமூகத்தின் நம்பிக்கையும், செயற்பாடு களும் அதன் அடிப்படையில் அமையவேண்டும் என்பதற்காகவேயாகும். அதனால்தான், தொடர்ந்து சொன்னார்கள்: **‘பெருமை கிடையாது’** என்றனர், அதாவது இந்தச் சிறப்புக்களெல்லாம் அல்லாஹ்விட மிருந்து வந்தவை, நானாக எதனையுமே சேகரிக்க வில்லை, எனது சக்தியினால் நான் பெற்றுக்கொண் டவைகள் அல்ல, அதனால் நான் பெருமைப்படுவ தற்கு எதுவுமே இல்லை என்பதாகும்.

வந்த அந்தக் குழுவினர் சொன்னதுபோல், நபியவர் கள், உண்மையில் மனித சமூகத்தின் தலைவர்தான், ஆனாலும், வந்தவர்கள் அப்படிச் சொன்னபோது அதனைத் தடுத்த காரணம், அவர்கள் அளவு மீறிப் புகழ்ந்து, ஷிர்க்கின் பால் சென்று விடுவார்கள் எனப் பயந்ததனாலாகும்.

தவ்ஹீதைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக, அல்லாஹ் அவர்களுக்களித்த இடத்தை விட உயர்ந்த இடத்துக்கு அவர்களை உயர்த்துவதை நபியவர்கள் விரும்பவேயில்லை.
இவ்வாறு, உறுதியான பல ஹதீஸ்களில் அவர்க ளின் இக்கருத்துக்களைக் காணலாம், நபியவர்கள் கூறினார்கள்: **‘மர்யமின் மகன் ஈஸாவை, கிறிஸ்தவர் கள் புகழ்ந்ததுபோல் நீங்கள் என்னைப் புகழாதீர் கள், நான் ஒரு அடிமை, எனவே என்னை அல்லாஹ் வின் அடிமை எனவும், அவனுடைய தூதர் எனவுமே சொல்லுங்கள்’.** (புகாரி).

வேறு ஒரு ஹதீஸில்: **‘என்னைக் கொண்டு உதவி தேடப்படக்கூடாது, அல்லாஹ்வைக் கொண்டு மட்டும் தான் உதவிதேடப்படவேண்டும்’.** (மஜ்மஉஸ்ஸவாயித்).

ஒருவரையொருவர் புகழ்ந்து கொள்வதைத் தடத்த தோடு, அவ்விடயத்தில் கடுமையாகவும் இருந்தனர், ஒரு மனிதர், இன்னுமொரு மனிதரைப் புகழ்ந்ததைப் பார்த்த நபியவர்கள்:

**‘உனக்குக் கேடு உண்டாகட் டும்!, உன்னுடைய நண்பனின் கழுத்தை நீ வெட்டி விட்டாய்’** எனக் கண்டித்தார்கள். (புகாரி, முஸ்லிம்).

மேலும் சொன்னார்கள்: **‘நீங்கள் அதிகமாகப் புகழக் கூடியவர்களைக் கண்டால், அவர்களின் முகங்களில் மண்ணை வீசுங்கள்’.** என்றனர். (முஸ்லிம்).

இதுவும் கூட புகழ்பவர், அளவு மீறிப் போய்விடக் கூடாது என்பதற்காகவும், புகழப்படுபவர், பெருமைப் படக்கூடாது என்பதற்காகவுமேயாகும், ஏனெனில் இவை இரண்டுமே கொள்கையில் பிரதிபலிப்பை ஏற்படுத்தக்கூடியவைகளே!.

9- நல்லடியார்களின் விடயத்தில் அளவு மீறுதல்: நபி(ஸல்) அவர்களுடைய விடயத்திலேயே அளவு மீறுவது தடையெனும்போது, அவர்களல்லாதவர்க ளின் விடயத்தைப் பற்றிச் சொல்லவே தேவை யில்லை.

நல்லடியார்களில் அளவு மீறிச்செல்லல் என்பது:
அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் கண் ணியத்தைத் தாண்டி, அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிமையான விடயங்களுக்கு, அவர்களை உயர்த்து தல், கஷ்டமான வேளைகளின்போது அவர்களிடம் உதவி தேடல், அவர்களின் சமாதிகளை வலம்வரல், அவர்கள் அடக்கப்பட்டிருக்கும் சமாதி மண்ணிலி ருந்து பரக்கத்துத் தேடல், அவர்களுக்காக அறுத் துப் பலியிடல், அவர்களிடம் உதவி வேண்டுதல் போன்ற விடயங்களாகும்.

நல்லடியார்களில் அளவு கடந்து சென்றதால்தான், நபி நூஹ்(அலை) அவர்களின் சமூகத்தினரை ஷைத்தான் மிகப் பெரிய ஷிர்க்கில் நுழைத்தான். எனவே இதிலிருந்து எச்சரிக்கையாக இருப்பது கடமையாகும், அது நல்ல நோக்கத்திலிருந்தாலும் சரியே.

நல்லடியார்களைக் கண்ணியப்படுத்தல், அவர்களை நேசித்தல் எனும் பெயரில் ஷைத்தான், நபி நூஹ் (அலை) அவர்களின் கூட்டத்தினரை வழிகெடுத்தது போல், இந்த சமூகத்தில்

சோனைக்கு உட்படுத்தப் பட்டவர்களை அளவு கடத்தலிலும், பித்அத்துகளி லும் விழவைத்தான்.
இன்றும் கூட ஷைத்தான், கப்று வணங்கிகளிடம், நல்லடியார்களின் சமாதிகளில் மண்டியிடல், அவை களில் கட்டிடம் கட்டுதல் போன்ற விடயங்கள், அந்த அவலியாக்களை நேஸிக்கின்ற விடயங்களா கும் எனவும், அவர்களிடம் பிரார்த்திப்பது ஏற்றுக் கொள்ளப்படும் என்ற எண்ணத்தையும் உருவாக்கி யிருக்கிறான்.
பின்பு, அந்த எண்ணத்திலிருந்து அவர்களை, ஒரு படி மேலே கொண்டுசென்று, அவைகளிடம் பிரார்த் தித்தல், அவைகள் மூலம் நெருக்கத்தை வேண்டு தல் போன்றவைகளை செய்யவைக்கிறான், இவைக ளை அவர்கள் செய்கின்றபோது, கப்றுகளில் அடக் கப்பட்டிருப்பவர்களிடம் பிரார்த்தித்தல், அவர் களை வணங்குதல், அல்லாஹ் அல்லாதவர்களிடம் சிபாரிசு தேடுதல், அவர்களின் சமாதிகளில் விளக் கேற்றுதல், அவைகளை மறைப்பிடல், அவைகளை வலம்வரல், தொடுதல், மோர்தல் போன்றவைகளை செய்யவைக்கிறான்.
இவைகளையும் அவர்கள் செய்கின்றபோது, அந்தக் கப்றுகளை வணங்கி வழிபட மக்களை அழைப்பதற் கும், அவைகளைக் கொண்டாடப்படுகின்ற, வணக் கங்களை நிறைவேற்றுகின்ற, விஷேட இடங்களாக அவர்களை எடுக்கவைத்தான்.
இதற்கும் இவர்கள் கட்டுப்பட்டபோது, யாரெல்லாம் இவற்றைத் தடுக்கிறார்களோ, அவர்களெல்லாம், அவ்லியாக்களைக் குறைத்து மதிப்பிடுபவர்கள், அவர்களின் பகைவர்கள் எனவும், அவர்களுக்கு எந்த கண்ணியமோ, சக்தியோ இல்லையென்று தவ றாக நினைப்பவர்கள் எனவும் எண்ணவைத்தான்.

அறிவீனர்கள், பொதுமக்களில் அதிகமானவர்களின் உள்ளங்களிலும், அறிவாளிகள், மார்க்கவாதிகள் எனச் சொல்லப்படுபவர்களின் உள்ளங்களிலும் இவைகள்தான் நிறைந்திருக்கின்றன. இவர்கள், ஏகத்துவ வாதிகளைப் பெரும் கற்களால் எறிந்தார் கள், இவர்களை விட்டும் மனிதர்களை விரண் டோட வைத்தார்கள், இவைகளெல்லாம் அவர்கள் செய்துகொண்டிருக்கும் செயல்களாகும். நல்லடியார்க ளின்

நேஸத்தின் பெயரிலும், அவர்களை கண்ணி யப்படுத்துதலின் பெயரிலும்தான் இவைகளெல்லாம் நடைபெறுகின்றன.
இந்த விடயத்தில், அவர்கள் பொய் சொன்னார்கள், ஏனெனில், உண்மையில் நல்லடியார்களை நேஸித் தல் என்பது, அல்குர்ஆனின் வழியிலும், ஹதீஸின் வழியிலும்தான் அமையவேண்டும், கூட்டலோ குறைத்தலோ இன்றி, அவர்களின் கண்ணியத்தை அறிந்து கொள்ளலும், நல்ல செயற்பாடுகளில் அவர் களை முன்மாதிரியாகக் கொள்வதும்தான்.
அல்லாஹ் கூறுகிறான்:
**'அவர்கள், எங்கள் இறைவனே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களுக்கு முந்தியவர்களான, எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்பை அருள்வா யாக, அன்றியும், ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் பகையை ஆக்காதிருப் பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன், கிருபைமிக்கவன் என்றும் (பிரார்த் தித்துக்) கூறுவர்'.** (அல்ஹஷ்ர்:10).

இப்னு தைமிய்யாஹ்(றஹி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒரு நபியிலோ அல்லது, நல்ல மனிதன் ஒருவனி லோ, அளவு மீறுபவன், கடவுள் கொள்கையில் ஒரு பகுதியை அம்மனிதருக்குக் கொடுக்கிறான், உதார ணமாக: 'இந்த எனது செய்யிதே(தலைவனே), எனக்கு உதவி செய்வாயாக!, எனது கஸ்டங்களை நீக்குவாயாக!, அல்லது எனக்கு உணவளிப்பாயாக!, என்பதைப்போல். அல்லது, நான் உனது பொறுப்பில் இருக்கிறேன், என்பதைப் போன்ற வார்த்தைகளா கும். இவைகள் எல்லாமே ஷிர்க்கும் வழிகேடுகளு மாகும். இதனைச் செய்தவர், தவ்பாச் செய்யுமாறு வேண்டப்படுவார், அதனை ஏற்று, தவ்பாச் செய்தால் மன்னிக்கப்படுவார், மறுத்தால் கொலை செய்யப்படுவார்(இஸ்லாமிய ஆட்சியில்). ஏனெனில் அல்லாஹ், தூதர்களை அனுப்பியதும், வேதங்களை இறக்கியதும் அவனை மட்டும்தான் வணங்கவேண் டும், அவனைத் தவிர வேறு கடவுள்களே இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவுமே!.

ஈஸா(அலை) அவர்கள், மலக்குமார்கள், விக்கிரகங் கள் போன்ற, அல்லாஹ் அல்லாதவர்களை அழைப் பவர்கள், அவைகள்

படைப்புகளைப் படைத்தன என்றோ, அல்லது மழையைப் பொழிவிக்கின்றன என்றோ, அல்லது பயிரினங்களை முழைப்பிக்கின் றன என்றோ நம்பவில்லை. மாறாக: **‘அவர்கள் எங்க ளை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவேயன்றி நாங்கள் அவை களை வணங்கவில்லை’.** (அஸ்ஸுமர் :3).

என்றுதான் அவற்றை வணங்கியவர்கள், அல்லது அவர்களின் சமாதிகளை வணங்கியவர்கள், அல்லது அவர்களின் உருவங்களை வழிபட்டவர் கள் கூறினார்கள். மேலும் இவர்கள், எங்களுக்கு அல்லாஹ்விடத்தில் பரிந்துரை பேசுவார்கள் எனவும் கூறினர், அதனால்தான் அல்லாஹ் தனது தூதர்களை அனுப்பி, வணக்கம் சார்ந்த அழைப்பா னாலும் சரி, உதவிதேடி அழைக்கும் அழைப்பானா லும் சரி, அவனல்லாது அழைக்கப்படக்கூடிய அனைத்தையும் தடை செய்தான்’.

இதிலிருந்து இந்தச் சமாதி வழிபாட்டுக்காறர்களின் சந்தேகம் என்ன என்பது தெளிவாகின்றது, நல்லடி யார்களை அவர்கள், படைத்தல், உணவளித்தல், உயிர்ப்பித்தல், மரணிக்கச்செய்தல் போன்ற விடயங் களில், அல்லாஹ்வுடன் கூட்டாக்கவில்லை என்றும், மாறாக தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கும், தமது கஷ்டங்களைக் கழைவதற்கும், அல்லாஹ் வுக்கும் தங்களுக்கும் இடையில் உள்ள இடைத் தர கர்களாகவேதான், அவர்களை நம்பியிருப்பதாக இம் மக்கள் தங்களை நியாயப்படுத்தினர், ஜாஹிலிய் யாக் காலத்து இணைவைப்பாளர்களுக்கு ஏற்பட்ட தும் இதே சந்தேகம்தான், அல்லாஹ் இதனைத் தனது திருமறையில் குறிப்பிட்டு, அதனை நிராகரித் துள்ளான்.

ஜாஹிலிய்யாக் கால முஷ்ரிக்குகளின் இணைவைப் பை விட, இன்றையவர்களின் இணைவைப்பு அதிக மாயிருப்பதைக் காணலாம். இவர்கள், அனைத்து விஷேட சந்தர்ப்பங்களிலும், மரணித்த அவர்களின் பெயர்களையே அழைக்கின்றனர், அல்லாஹ்வின் பெயரை இவர்கள் கொஞ்சமாகவே மொழிகின்றனர். வலிமார்களின் பெயர்கள்தான் அவர்களின் வாய் களில் அதிகமாகமே மொழியப்படுகின்றன. ஆரம்ப கால முஷ்ரிக்குகள் கஸ்டமான வேளைகளில் அல்லாஹ்வை அழைப்பவர்களாகவும், சாதாரணமான வேளைகளில் அல்லாஹ்

அல்லாதவைகளை அழைப்பவர்களாகவும் இருந்தனர், ஆனால் இன்றி ருப்பவர், கஸ்டமான வேளையிலும், சாதாரணமான வேளையிலும் கூட, அல்லாஹ் அல்லாதவர்களைத் தானே அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனைத்தான் முஹம்மத் இப்னு இஸ்மாயீல் அஸ் ஸன்ஆனீ(றஹி) அவர்கள் பின்வருமாறு கூறுகின் றனர்:

**'தேவையற்ற ஒருவனாகிய அவனை, சங்க டத்தில் சிக்கிய ஒருவன் அழைப்பதுபோல், கஷ்ட மான வேளையில் அவைகளின் பெயர் சொல்லி அழைப்பவர்கள் எத்தனையோபேர் இருக்கின்ற னரே!, முஸ்லிம்களின் அறிஞர்களே! வழிகேட்டிலே தடுமாறுகின்ற, சஞ்சரிக்கின்ற இவ்விரண்டு கூட்டத் தினருக்கும் நீங்கள்தானே பெறுப்பானவர்கள்...'.**

நீங்கள் அவர்களோடு இரண்டறக் கலந்து ஒன்றாக வாழ்கிறீர்கள், அப்படியிருந்தும் உண்மையான வழி யை, நீங்கள் ஏன் அவர்களுக்குத் தெளிவுபடுத்தி, இந்த மிகப் பெரும் இணைவைப்பை விட்டும் அவர்களைத் தடுக்கிறீர்களில்லை?!. அல்லாஹ், பின் வரும் வசனத்தின் மூலம் உங்கள்மீது கடமையாக் கிய அழைப்புப் பணியையும், தெளிவுபடுத்தல் பணி யையும் ஏன் நீங்கள் பாழ்படுத்திக் கொண்டிருக்கி றீர்கள்?, அல்லாஹ் கூறுகிறான்:

**'தவிர வேதம் கொடுக்கப்பட்டோரிடம், அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவேண் டும், அதை மறைக்கக்கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவுபடுத்துவீராக). அப்பால், அவர்கள் அதைத் தங்கள் முதுகுகளுக்குப் பின்னால் எறிந்து விட்டு, அதற்குப் (பதிலாகச்) சொற்ப கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள் - அவர்கள் (இவ்வாறு) வாங்கிக்கொண்டது மிகக் கெட்டதாகும்'.**

(ஆலுஇம்றான்:187).

உலமாக்கள், நபிமார்களின் வாரிசுகளல்லவா?, இந்த மிகப்பெரும் ஷிர்க்கை ஒழித்து, மார்க்கம் முழுவ தும் அல்லாஹ் ஒருவனுக்கே ஆகும்வரை முஷ்ரிக் குகளுடன் போராடுவதற்காகத்தானே நபிமார்கள் வந்தார்கள்!.

உங்கள் மீது இந்தப் பொறுப்பைச் சுமத்தியவன், உங்களிடம் அது சம்மந்தமாக விசாரிப்பானே!, எனவே அவனை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்!!.
புகாரியில் இடம்பெறும் ஹதீஸில் சொல்லப்படுகின்ற விடயம்தான்: **'மறுமையில், முதன்முதலில் நரக நெருப்பில் வீசப்படுபவர், தனது அறிவைக்கொண்டு செயல்படாத அறிஞர்'** என்பதாகும்.

நடந்து கொண்டிருக்கும் இவ்விடயத்தை, நீங்கள் ஷிர்க் என்றால், ஷிர்கின் மீது மக்களை நீங்கள் விட்டிருக்கிறீர்கள் என்பது அதன் கருத்து. அப்படி யென்றால், இது ஆபத்தான ஒரு விடயமாகும். அல்லது நடந்து கொண்டிருக்கும் இவ்விடயத்தை, நீங்கள் ஷிர்க் என்று கருதவில்லை என்றால், அது முந்தியதைவிட பெரும் ஆபத்தாகும், ஏனெனில் மிகத் தெளிவான ஒரு விடயத்தை நீங்கள் அறியா திருக்கிறீர்கள் என்பது அதன் கருத்தாகும்!.

அல்லாஹ்வே! முஸ்லிம்களின் நிலைமைகளை நீ சீர்செய்வாயாக!. அவர்களில், வழிகெட்டவர்களை நீ நேர் வழிப்படுத்துவாயாக!.

10- உருவம் வரைதலும் இணைவைப்பின் பக்கம் இட்டுச்செல்லும் ஒரு சாதனமே!.
ஒரு பொருளின் உருவத்தை அமைப்பதன் மூலம், அல்லது வரைவதன் மூலம் அப்பொருளின் உருவத் தைத் தரிபடுத்துதல்.
உலமாக்கள், உருவமைப்பு விடயம் சம்மந்தமான பேச்சுக்களை, அகீதாவுடன் சேர்த்துப் பேசியிருப்ப தைக் காண்கிறோம். ஏனெனில் உருவமைப்பு ஷிர்க் கின் பக்கம் இட்டுச்செல்லும் ஒரு சாதனமும், படைத்தல் விடயத்தில் அல்லாஹ்வுடன் பிறரைக் கூட்டுச்சேர்க்கும், அல்லது அதற்காக முயற்சிக்கும் ஒரு விடயமுமாகும். பூமியில் முதன் முதலாக இணைவைப்பு நிகழ்ந்ததே, நபி நூஹ்(அலை) அவர் களின் சமூகம், அவர்களின் நல்லடியார்களை வரைந்து, அவர்களின் இருப்பிடங்களில் அவைக ளை நட்டி வைத்து, அவைகளுக்குக் கண்ணியம் கொடுத்ததாலேயாகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், உருவ வரைதலின் அனைத்து வகைகளை விட்டும் எச்சரித்ததோடு, அதனைத் தடையும்செய்தனர், அதனை எவர் செய்கிறாரோ அவருக்கு, மிகக் கடுமையான வேத னையையும் வாக்களித்தனர். அத்தோடு, இருக்கின்ற உருவங்களை அழித்து விடுமாறும், அவற்றை மாற்றிவிடுமாறும் கட்டளையிட்டனர், ஏனெனில் உருவம் வரைதல் என்பது, படைக்கும் விடயத்தில் அல்லாஹ் தனிமையானவன் எனும் உண்மைக்கு வெளிப்படையாக முரண்படுவதாகும். உருவம் வரை கின்ற இம்மனிதன், அல்லாஹ் தனிமைப்பட்டிருக் கும் இவ்விடயத்தை இல்லாமல் ஆக்க முயற்சிக் கின்றான். ஏனெனில், உருவம் வரைதல் என்பது ஷிர்க்குக்கு இட்டுச்செல்லும் ஒரு சாதனமாகும்.
மேலே நாம் குறிப்பிட்டதுபோல், உலகில் முதன் முதலில் இணைவைப்பு ஏற்பட்டதே, உருவம் அமைத்ததாலேயாகும். நபி நூஹ்(அலை) அவர்க ளின் கூட்டத்தினருக்கு, நல்லடியார்களின் உருவங் களை அமைப்பதை ஷைத்தான் அழகாக்கினான். வணக்க வழிபாடுகளில் அவர்களை பின்பற்றுவதற் கும், அவர்களின் நிலமைகள் சம்மந்தமாக ஞாபகப் படுத்திக் கொள்வதற்குமாக, அவர்களின் உருவங் களை இவர்களின் சபைகளில் நட்டிவைத்தனர். இது இறுதியில் அந்த உருவங்களையே வணங்கும் அளவுக்கும், அல்லாஹ் அல்லாத அவ்வுருவங்கள் நன்மையும் தீமையும் ஏற்படுத்தக்கூடியவை என, அவர்கள் நம்பும் அளவுக்கும் அவர்களை இட்டுச் சென்றது.

உருவம் அமைத்தல், சிலை வணக்கத்தின் ஆரம்ப மாகும். ஏனெனில் படைப்பினம் ஒன்றை வரைவது, பெரும்பாலும் அதற்கு கண்ணியம் கொடுப்பதற்கும், அதன் மீதுள்ள ஒரு வகையான நல்ல எண்ணத்தி லுமேயாகும். அதிலும் குறிப்பாக வரையப்படுபவ ருக்கு, ஆட்சி, அதிகாரத்திலோ அல்லது அறிவி லோ, அல்லது நன்மையான காரியங்களிலோ பெரும் பங்கிருந்தால், இன்னுமொருபடி மேலாகும். அதிலும் குறிப்பாக, வரையப்பட்ட உருவங்கள் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருப்பது அல்லது வீதி களில் அல்லது மைதானங்களில் நட்டிவைக்கப்பட் டிருப்பதாகும். இவைகள் அனைத்துமே அறிவீனர்க ளையும், வழிகெட்டவர்களையும், அவைகளில் நம்பிக்கை வைப்பதற்கும்,

அவைகளை வணங்குவ தற்கும் இட்டுச்செல்லும். உடனடியாக இல்லாவிட்டா லும், சில காலங்களுக்குப் பின்பு இது நிகழும். அத்தோடு (உருவம் வரைதல், அதனை நட்டி வைத்தல் போன்றவை) அல்லாஹ்வை விட்டு விட்டு, சிலைகளையும் விக்கிரகங்களையும் வணங் பவர்களுக்கு வழியைத் திறந்துவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த விடயத்தில் வந்திருக்கும், சில தெளிவான, ஆதாரபூர்வமான ஹதீஸ்களையும், அவற்றுக்குரிய இலகுவான சில விளக்கங்களையும் நாம் பார்ப் போம்.

அபூஹுரைறா(றழி) அவர்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னதாக அறிவிக்கிறார்கள்:

**'அல்லாஹ் கூறுகிறான்: எனது படைப்பைப் போன்று, படைக்க நினைப்பவனை விட அநியாயக்காரன் வேறு யார்தான் இருக்கமுடியும்?, மிகச் சிறிய ஒரு பொரு ளையேனும் உங்களுக்கு முடிந்தால், நீங்கள் தயா ரித்துக்கொள்ளுங்கள், அல்லது சிறிய பொருளையோ நீங்கள் படையுங்கள், அல்லது ஒரு தொலிக்கோது மைக் கொட்டையையேனும் உங்களுக்கு முடிந்தால் நீங்கள் தயாரித்துக் கொள்ளுங்கள்'.**

(புகாரி, முஸ்லிம்).

இதன் கருத்தாவது: உருவம் அமைப்பவனை விட அநியாயக்காரன் வேறு யாருமே கிடையாது. மனிதன், மிருகம் போன்ற உயிருள்ள, அல்லாஹ் வின் படைப்பினங்களைப் போன்ற உருவங்களை அமைப்பவன், அனைத்தையும் படைக்கும் ஆற்றல் பெற்ற அல்லாஹ்வோடு போட்டியிடுகிறான் என்பதா கும். அல்லாஹ்வே அனைத்தையும் பரிபாலிப்ப வன். அவன்தான் அனைத்துப் படைப்புகளையும் படைத்து, அவை வாழவேண்டும் என்பதற்காக அவைகளுக்கு உயிரூட்டினான். அல்லாஹ் கூறுகின் றான்: **'வானங்களையும், பூமியையும் அவன் சத்தியத் துடன் (தக்க முறையில்) படைத்துள்ளான், அன்றியும் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங்களையும் அழகாக்கினான், அவனிடம்தான் (யாவருக்கும்) மீளு தல் இருக்கிறது'.** (அத்தகாபுன்:3).

மேலும் ஓரிடத்தில்: **'அவன்தான் அல்லாஹ், படைப் பவன், ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன், உருவமளிப் பவன்'.** (அல்ஹஷ்ர்:24).

அத்தோடு, அல்லாஹ்வுடன் போட்டிபோடும் அளவு, உருவங்களை அமைத்தவர்களைப் பார்த்து, 'நீங்கள் உருவங்கள் அமைத்ததைப் போன்று அவைகளுக்கு உயிர் கொடுங்கள்' என அல்லாஹ் சவால் விடு கின்றான். இதுவும் கூட அவர்களின் இயலாமை யையும், அவர்கள் செய்த முயற்சியின் தோல்வியை யும்தான் காட்டுகிறது. அதேபோல் அவர்கள், உயி ருள்ள ஒரு மிருகத்தையேனும் அமைப்பதற்கு சக்தி பெறமாட்டார்கள். அவ்வாறே ஒரு கனியையோ, ஒரு தானியத்தையோ அவர்கள் உருவாக்க சக்திபெற மாட்டார்கள். முடியுமானால் ஒரு சிறிய விதையை அவர்கள் உருவாக்கட்டும்! என அல்லாஹ் சவால் விட்டுக்கொண்டிருக்கிறான்.

ஆயிஷா(றழி) அவர்கள் கூறுகிறார்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: **'மறுமை நாளில் மனிதர்களிலேயே மிகக் கடுமையாக வேதனை செய்யப்படுபவர், அல்லாஹ்வின் படைப்பில் அவனோடு போட்டி போட்டுக் கொண்டவராகும்'.**

(புகாரி, முஸ்லிம்).

உருவம் அமைப்பவர்களுக்கு மறுமையில், அவர்க ளின் இந்தக் கெட்ட செயலுக்குரிய கூலியாக, கடுமையான வேதனையை நபி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்தனர். அவர்கள் இவ்வுலகில் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தாலும், ஓவியர்கள் என்று பெயரெடுத்தாலும், அவர்கள் பலதரப்பட்ட ஊக்கு விப்புக்கள் செய்யப்பட்டாலும், தங்களது இப்பாவங்க ளுக்கு மன்னிப்புக் கேட்காமல் மரணித்தால், அவர் கள் ஒதுங்குமிடம் மிகக் கெட்டதாகவே இருக்கும். ஏனெனில், அவர்களின் இந்த அறிவின் மூலம், அல்லாஹ் மட்டுமே அதற்குரியவன் எனத் தனித்தி ருக்கும், உருவமைத்தல் விடயத்தில் அவனுடன் போட்டிபோட்டவர்கள். அல்லாஹ்தான் யாவற்றையும் அறிந்து படைக்கக் கூடியவனாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: **‘அல்லது அவர்கள் இணை யாக்கிக் கொண்டிருக்கும் (தெய்வங்கள்), அல்லாஹ் படைத்திருப்பதைப் போல், எதையும் படைத்திருக்கின் றனவா? (அப்படியிருந்தால் இது யார்)படைப்பு என்று அவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டிருக்குமே!, (அவ்வா றில்லையே, எனவே நபியே! நீர் உறுதியாகக்) கூறும்! ‘அல்லாஹ்வே எல்லாப் பொருட்களையும் படைக்கிற வன், அவன் ஒருவனே (அனைத்தையும்) அடக்கியாள் பவன்’.** (அர்றஃது:16).

இமாம் நவவி(றஹி) அவர்கள், இந்த ஹதீஸ் பற்றிக் கருத்துச் சொல்லும் போது: ‘வணக்கத்துக்காக உருவம் செய்பவனைத்தான் இவைகள் குறிக்கும், அவன் சிலைகளையும் அவை போன்றவைகளையும் செய்பவன், இவன் காபிராவான். மேலும் மனிதர்க ளிலேயே மிக அதிக தண்டனைக்குரியவனுமாவான்.

அல்லாஹ்வின் படைப்போடு, போட்டிபோடும் நோக் கில் உருவமைப்பவனையும் இது குறிக்கிறது என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. இவ்வாறு ஒருவன் நினைத்தால், அவனும் காபிராவான். அவனுக்கும் கடுமையான தண்டனை இருக்கிறது. அவனது நிராகரிப்புக்கு ஏற்ப தண்டனையும் அதிகமாகும்.

வணக்கத்துக்காக இல்லாமலும், அல்லாஹ்வுடன் போட்டிபோடும் எண்ணம் இல்லாமலும் ஒருவன், உருவம் அமைக்கிறான் என்றால், அவன் மிகப் பெரும் பாவியும், கெட்டவனுமே தவிர அவன் காபி ராகமாட்டான்’.

அப்துர் றஹ்மான் இப்னு ஹஸன்(றஹி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘மிருகங்கள் போன்ற அல்லாஹ்வின் படைப்புகளைப் போன்று படைக்க நினைக்கின்ற ஒருவனுக்கே இப்படியென்றால், படைப்புகளை றப்புல் ஆலமீனுக்கே ஒப்பாக்கி, வணக்கவழிபாட்டை அல்லாஹ் அல்லாதவைகளுக்குச் செய்கின்றவனு டைய நிலை என்னவாகும்?, இமாம் புகாரி, முஸ்லிம்(றஹி) அவர்கள் பதிவு செய்திருக்கும் இப்னு அப்பாஸ்(றழி) அவர்களின் அறிவிப்பு: ‘நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட நான் கேட்டேன்: **‘உருவம் செய்கின்ற அனைவரும் நரகத்தில்தான் இருப்பர், அவர்கள் செய்த ஒவ்வொரு உருவத்துக்**

**கும் உயிர்கொடுக்கப்பட்டு அவைகளினால், அவர்கள் நரகத்தில் வேதனை செய்யப்படுவர்’.**

(புகாரி, முஸ்லிம்).

இதன் கருத்தாவது: மறுமையில், ஒருவன் உலகில் செய்த அனைத்து உருவங்களும் கொண்டு வரப் பட்டு, அனைத்துக்கும் உயிர் கொடுக்கப்பட்டு, அவற் றை வரைந்தவனுக்கு அவைகளாலேயே வேதனை செய்யப்படும். அவைகள் குறைவாக இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும் சரியே!.

இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள் அறிவிக்கும் செய்தியொன்றை இமாம் புகாரி, முஸ்லிம்(றஹி) அவர்கள் பதிந்திருக்கிறார்கள்: **‘யார் ஒரு உருவத் தை அமைக்கிறாரோ, அவர் அந்த உருவத்துக்கு உயிர் கொடுக்குமாறு மறுமையில் வேண்டப்படுவார், ஆனால் அது அவருக்கு முடியாமலிருக்கும்’.**

(புகாரி, முஸ்லிம்).

இது உருவம் அமைத்தவருக்கான, மற்றுமொரு வகையான தண்டனையாகும், இதன் கருத்து தெளி வானதாகும். அதாவது உலகில் அவர் அமைத்த ஒவ்வொரு உருவமும் கொண்டு வரப்பட்டு, அவருக்கு முன்னால் நிறுத்தப்பட்டு, அவைகளுக்கு உயிர் கொடுக்குமாறு, அவர் வேண்டிக் கொள்ளப் படுவார். அவருக்கு அது எவ்வாறு முடியும?. **‘உயிர் என்பது, எனது இரட்சகனின் விடயமாகும்’.**

(அல்இஸ்றா:85).

ஆனாலும், அது அவருக்குரிய தண்டனையாகும், அதனைச் செய்ய அவருக்கு முடியாது. தொடரான தண்டனை அவருக்குக் கொடுப்பதற்காக இவ்வாறு அவருக்குச் சொல்லப்படும்.

அல்லாஹ்வின் படைப்பினங்களில், அவர் போட்டி போட்டதற்காக, அல்லாஹ் அவருக்கு அளிக்கின்ற தொடரான தண்டனை இதுவென்று இந்த ஹதீஸ் தெளிவாகச் சொல்கிறது.

அபுல் ஹய்யாஜ்(றஹி) அவர்கள் அறிவிக்கும் செய்தியொன்றை இமாம் முஸ்லிம்(றஹி) அவர்கள் பதிந்துள்ளார்கள்: ‘அலி(றழி) அவர்கள் எனக்குச் சொன்னார்கள்: **‘நபி(ஸல்) அவர்கள், என்னை அனுப்பிய ஒரு விடயத்துக்காக உன்னை நான் அனுப் பட்டுமா? எனக் கேட்டுவிட்டு, எந்த உருவங்களைக் கண்டாலும்**

**அதனை நீ அழிக்காமல் விட்டுவிடாதே!, மேலும் கட்டப்பட்டிருக்கும் எந்தக் கப்றையும் நீ உடைக்காமல் விட்டு விடாதே!! எனக் கூறினார்கள்.**

(முஸ்லிம்).

இந்த ஹதீஸில் உருவங்களை அழிக்கவேண்டும் என சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அல்லாஹ் வின் படைப்புகளுக்கு ஒப்பாக இருக்காத வகையில் அதனுடைய அமைப்பை விட்டும் அதனை மாற்ற வேண்டும். அத்தோடு சமாதிகளில் கட்டப்பட்டி ருக்கும் பள்ளிகள், குப்பாக்கள், மற்றும் சிலை வணக்கம் புரிபவர்களின் அமைப்பைப் போன்றுள்ள அனைத்துக் கட்டிடங்களையும் உடைக்கவேண்டும் எனவும் அதில் இடம்பெற்றிருக்கிறது.

ஷிர்க்கின் பக்கம் கொண்டு செல்லும் மிகப் பெரிய இரண்டு விடயங்கள்தான், உருவம் அமைப்பதும், சமாதிகளில் கட்டிடம் கட்டுவதுமாகும். எனவே இவையிரண்டையும் அழிக்கவேண்டும் என இந்த ஹதீஸில் கூறப்பட்டிருப்பது, மார்க்கத்தைப் பாதுகாப் பதற்கும் முஸ்லிம்களின் கொள்கையைப் பாதுகாப்ப தற்குமான மிகப் பெரும் நடவடிக்கையாகும்.

எமது இந்தக் காலத்தில் உருவங்கள் வரைதல், அவற்றைப் பாவித்தல், அவ்வுருவங்களை (சுவர் போன்றவைகளில்) தொங்கவிடுதல், ஞாபகார்த்தமாக அவைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் அதிகரித்துவிட்டன. அத்தோடு சமாதிகளில் கட்டி டம் கட்டுதலும் இக்காலத்தில் அதிகரித்து விட்டது. எதுவரை என்றால், அவ்விடயம் ஒரு விரும்பப் படக்கூடிய விடயமாக ஆகிவிட்டது. ஏனெனில் மார்க்கம் அறிமுகமற்ற ஒன்றாக ஆகி விட்டதும், சுன்னாக்கள் மறைக்கப்பட்டுவிட்டதும், பித்அத்து கள் அதிகரித்துவிட்டதும், அதிகமான மார்க்க அறி ஞர்களின் மவ்னமும், நடந்துகொண்டிருக்கும் செயற் பாடுகளுக்கு அவர்களும் கட்டுப்பட்டு விட்டதுமா கும். அதனால் அதிகமான நாடுகளில் நன்மையான காரியங்கள், கெட்ட விடயங்களாகவும், கெட்ட விட யங்கள் நன்மையான காரியங்களாகவும் சித்தரித்துக் காட்டப்படுகின்றன.

லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யுல் அழீம்.

அல்லாஹ்வினதும் அவனுடைய வேதத்தினதும், அவனுடைய நபியினதும், முஸ்லிம்களின் தலைவர் களினதும், பொதுமக்களினதும் உரிமைகள் சம்மந்த மாக உபதேசம் செய்வதும், உணர்த்துவதும் கடமை யாகும். குறிப்பாக வழிகேட்டின் பக்கமும் நாசத்தின் பக்கமும் அழைக்கும் வழிகெட்ட அழைப்பாளர்கள் அதிமாயுள்ளனர். எனவே அவர்களின் பொய்களை மக்களுக்குத் தோலுரித்துக் காட்டுவதும், அவர்க ளின் வழிகேடுகளுக்குப் பதிலளிப்பதும் அவர்க ளின் கெடுதிகளிலிருந்து முஸ்லிம் சமூகம் எச்சரிக் கையோடு இருப்பதற்காக, முஸ்லிம்களை விழிப்பூட் டுவதும் கட்டாயமாகும்.

அல்லாஹ்வின் வேதத்தையும் அவனுடைய தூதரு டைய வழியையும் பின்பற்ற, மஸ்லிம்களுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக!.

## தவ்ஹீதுல் உலூஹிய்யாவில், இணைவைக்கும் இணைவைப்பாளர்களின் சந்தேகங்களும், அவற்றுக்கான பதில்களும்!.

சந்தேகங்களையும் கட்டுக்கதைகளையும் கிழறி விட்டு, அவற்றையே தமது செயலுக்கு ஆதாரமாக சிலர் கொள்வதுதான், அதிகமான மக்களின் வழி கேட்டிற்குரிய காரணமாக இருக்கிறது. அவற்றில் இவர்கள் தொடராக இருப்பதற்கும் இதுவே அடிப் படையாகும்.

அதனால் இச்சந்தேகங்களுக்குப் பதிலளிப்பதும் அவற்றிலுள்ள பொய்களை நிரூபிப்பதும் மிகவும் அவசிமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

**‘அழிந்தவர்கள் தக்க முகாந்திரத்துடன் அழிவதற்கா கவும், தப்பிப் பிழைத்தவர்கள் தக்க முகாந்திரத் தைக் கொண்டே தப்பிக்கவும், (இவ்வாறு அவன் செய்தான்) - நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவ னாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்’.**

(அல் அன்பால்:42).

இச்சந்தேகங்களை இரண்டு வகைகளாக நாம் நோக் கலாம்.

- ஒன்று, முன்பிருந்த சமூக இணைவைப்பாளர்கள் ஆதாரமாகக் காட்டியவை.

● இரண்டாவது, இப்போதுள்ள, சமூக இணைவைப் பாளர்கள் ஆதாரமாகக் காட்டுவது.

அச்சந்தேகங்களில் சிலது பின்வருமாறு:

✸ முதலாவது: பல சமூக இணைவைப்பாளர்களுக் கிடையிலும் உள்ள பொதுவான ஒரு சந்தேகம், அதுதான்: 'இது எங்கள் முன்னோர்கள் செய்த விடயமாச்சே!, எனவே எப்படி இது பிழையாகும்?' என்ற கேள்வியாகும். இவர்கள் தமது முன்னோர்க ளிடமிருந்து இந்தக் கொள்கையை, பரம்பரையாகப் பெற்றுக்கொண்டனர்.

இது சம்மந்தமாக அல்லாஹ் கூறும்போது:

**'இவ்வாறே உமக்கு முன்னரும் நாம், (நம்முடைய) தூதரை எந்த ஊருக்கு அனுப்பினாலும், அவர்களில் செல்வந்தர்கள்: 'நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதா தையரை ஒரு மார்க்கத்தில் கண்டோம், நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச்சுவடுகளையே பின்பற்றுகின் றோம்' என்று கூறாதிருக்கவில்லை'.**

(அஸ்ஸுக்றுப்:23).

இந்த வாதம், தமது கூற்றை நிரூபிக்க முடியாத ஆதாரமற்றவர்களின் வாதமாகும். இது அடிப்படை யே இல்லாத ஒரு ஆதாரமாகும். விவாதச் சந்தை யில் போடப்படுவதற்குக் கூட தகுதியில்லாததாகும் இது. இவர்கள், எந்தத் தந்தைமார்களைப் பின்பற்று கிறார்களோ அவர்கள், நேர் வழியில் இருக்க வில்லை. எனவே இவ்வாறு வழிகேட்டில் இருந்தவர் களை எவ்வாறு பின்பற்றவோ, வழிகாட்டிகளாக எடுக்கவோ முடியும்?.

அல்லாஹ் இவர்களுக்கு பதிலளிக்கிறான: **'உங்கள் மூதாதையரை, எதன்மீது நீங்கள் கண்டீர்களோ, அதைவிட மேலான நேர்வழியை நான் உங்களுக்குக் கொண்டு வந்திருந்த போதிலுமா?'.**

(அஸ்ஸுக்றுப்:24).

மேலும் அல்லாஹ் கூறும்போது:

**'என்ன!, அவர்களுடைய தந்தையர் (மூதாதையர்கள்) ஒன்றும் அறியாதவர்களாகவும், நேர்வழியில் நடக்கா தவர்களாகவும் இருந்தாலுமா? (அவர்களை இவர்கள் பின் பற்றுவார்கள்'.**
(அல்மாயிதா:104).

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: **'மேலும், 'அல்லாஹ் இறக்கிவைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்' என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் 'அப்படி யல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்க ளும் பின்பற்றுகிறோம்' என்று கூறுகிறார்கள், என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காத வர்களாகவும், நேர்வழி பெறாதவர்களாகவும் இருந் தால் கூடவா அவர்களை இவர்கள் பின்பற்றுவர்'.**

(அல்பகறா:170).

அவர்களின் தந்தைமார்கள் நேர்வழியில் இருப்பார் களானால் அவர்களைப் பின்பற்றுவது புகழுக்குரிய தாகும்.

அல்லாஹ், நபி யூசுப்(அலை) அவர்களைப் பற்றிச் சொல்லும்போது: **'நான் என் மூதாதையர்களான இப்றாஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரின் மார்க் கத்தைப் பின்பற்றுகிறேன், அல்லாஹ்வுக்கு எதையும் நாங்கள் இணைவைப்பது எங்களுக்குத் தகுமான தல்ல, இது எங்கள் மீதும் (இதர) மக்கள் மீதும் அல்லாஹ் புரிந்த அருளாகும் - எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவ தில்லை'.** (யூசுப்:38).

மேலும் ஓரிடத்தில்: **'எவர்கள் ஈமான் கொண்டு, அவர்களுடைய சந்ததியினரும், ஈமானில் அவர்களைப் பின் தொடர்கிறார்களோ, அவர்களுடைய அந்த சந்த தியினரை அவர்களுடன் (சுவனத்தில் நாம் ஒன்று) சேர்த்து விடுவோம்'.** (அத்தூர்:21).

நபிமார்களின் அழைப்புப் பணியை எதிர்கொண்ட இணைவைப்பாளர்களான, முன்னோர்களின் உள்ளங் களில் குடிகொண்டிருந்த ஒரு சந்தேகம்தான் இது வாகும். நபி நூஹ்(அலை) அவர்கள், தனது சமூகத் தினரைப் பார்த்து இவ்வாறு கூறியதாக அல்லாஹ் கூறுகிறான்: **'என் சமூகத்தவர்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள், அவனன்றி உங்களுக் கு (வேறு) நாயன் இல்லை, நீங்கள் (அவனுக்கு) அஞ்சவேண்டாமா? என்று கூறினார். ஆனால், அவரு டைய சமூகத்தாரில் காஃபிர்களாய் இருந்த தலைவர் கள்: 'இவர்**

**உங்களைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை, இவர் உங்களை விட சிறப்புப் பெற விரும்புகிறார். மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், அவன் மலக்குகளை(த் தூதர்களாக) அனுப்பியிருப் பான். முன்னிருந்த நம் மூதாதையரிடம் இ(த்தகைய விஷயத்)தை நாம் கேள்விப்பட்டதேயில்லை'.**

(அல்முஃமினூன்:23-24).

நபி நூஹ்(அலை) அவர்கள் கொண்டு வந்தவைக்கு எதிராக, அவர்களுடைய கூட்டத்தினர் காட்டிய ஆதாரம்தான், மூதாதையர்களின் வழிமுறை என்ப தாகும்.

நபி ஸாலிஹ்(அலை) அவர்களுக்கு, அவர்களுடைய கூட்டத்தினர் சொன்ன வார்த்தையை அல்லாஹ் குறிப்பிடும்போது: **'எங்களுடைய மூதாதையர்கள் எதை வணங்கினார்களோ, அதை வணங்குவதை விட்டும் எங்களை விலக்குகின்றீரா?'.** (அல்ஹூத்:62).

நபி இப்றாஹீம்(அலை) அவர்களுக்கு, அவர்களின் சமூகத்தினர்: **'இல்லை! எங்கள் மூதாதையர்கள், இவ்வாறே (வழிபாடு) செய்ய நாங்கள் கண்டோம்'.**

என்றனர். (அஷ்ஷுஅறா:74).

நபி மூஸா(அலை) அவர்களுக்கு, பிர்அவ்ன் சொன்ன வார்த்தை: **'அப்படியென்றால், முன் சென்ற தலைமுறைகளின் நிலமை என்ன? என்று கேட்டான்'.**

(தாஹா:51).

'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவதற்குத் தகுதி யானவன் யாருமே இல்லை' என்று நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என, நபி(ஸல்) அவர்கள் மக்கா வைச் சேர்ந்த அறபு முஷ்ரிக்குகளிடம் கூறிய போது, அவர்கள் சொல்லிய வார்த்தை: **'வேறு (எந்த) சமுதாயத்திலும் நாம், இது (போன்று) கேள் விப்பட்டதில்லை, இது (இவருடைய) கற்பனையே யன்றி வேறில்லை (என்றனர்)'.** (ஸாத்:7).

✸ இரண்டாவது: இன்றைய சமாதி வணங்கிகளின் இன்னுமொரு சந்தேகம்தான்: 'வெறுமனே ஒருவன் கலிமாவை மொழிந்துவிட்டால், அவன் என்னதான் செய்தாலும், இக்கலிமாவினால் அவன் சுவர்க்கம் சென்றுவிடலாம் எனும்

எண்ணமாகும். ஏனெனில் அவன் ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ எனும் கலிமா வை மொழிந்திருக்கிறான் எனக்கூறி, கலிமாவை மொழிந்தவனுக்கு நரகம் ஹராமாகும் எனக்கூறும் ஹதீஸ்களின், வெளிப்படையான கருத்தைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளனர்.

இந்தச் சந்தேகத்துக்குரிய பதில்: இந்த ஹதீஸ்கள், அதன் பொதுவான கருத்துக்களில் அணுகப்படக் கூடாது. ஏனெனில், பொதுவான இந்த ஹதீஸ்களை மட்டுப்படுத்தக்கூடிய, கலிமாவை மொழிவது மட்டு மல்ல, அதன் கருத்துக்களையும் மனதால் ஏற்றுக் கொண்டு, அது வேண்டிநிற்கும் விடயங்களை செயல்படுத்துவதும், அல்லாஹ் அல்லாது வணங்கப் படக்கூடிய அனைத்தையும் நிராகரிப்பதுவுமாகும்.

உத்பான்(றழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் இடம்பெறும் விடயம்: **‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்று, எவர் அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் சொல் கிறாரோ அவருக்கு, அல்லாஹ் நரகத்தை ஹறாமாக் கிவிடுகிறான்’.** (புகாரி,முஸ்லிம்).

இது, இவ்வாறில்லையென்றால், நயவஞ்சக முனாபிக் குகள் அவர்களின் நாவினால் ‘லாஇலாஹ இல்லல் லாஹ்’ எனும் கலிமாவை மொழிந்திருந்தார்கள்தான். ஆனாலும் அவர்கள், நரகக் குழியின் அடிக்கே வீசப்படுவார்கள். அவர்கள் வாயினால் மொழிந்த கலிமா, அவர்களுக்குப் பிரயோசனம் அழிக்க வில்லை!.

அல்லாஹ் கூறுகிறான்: **‘நிச்சயமாக இந்நயவஞ்சகர் கள், நரகத்தின் மிகவும் கீழான அடித் தலத்தில்தான் இருப்பார்கள். அவர்களுக்கு உதவியாளராக எவரை யும் நீர் காணமாட்டீர்’.** (அந்நிஸா:145).

ஏனெனில் அவர்கள், அந்தக் கலிமா வேண்டி நிற்கும் விடயத்தை நம்பிக்கைகொள்ளவில்லை.

நபியவர்கள் சொன்னார்கள்: **‘யார் ‘லாஇலாஹ இல் லல்லாஹ்’ என்று சொல்லி, அல்லாஹ் அல்லாது வணங்கப்படுபவற்றை நிராகரிக்கிறானோ, அவனது பொருளும் இரத்தமும்**

**கண்ணியப்படுத்தப்படும், அவனு டைய விசாரணை அல்லாஹ்விடம் உள்ளதாகும்'.**

(முஸ்லிம்).

நபி(ஸல்) அவர்கள், முஷ்ரிக்குகளின் பொருள் மற்றும் இரத்தத்தின் கண்ணியம் இரண்டு விடயங்க ளில் தங்கியிருப்பதாகக் கூறினார்கள்:

ஒன்று: 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனும் சொல்லி லும்..

இரண்டாவது: 'அல்லாஹ் அல்லாது வணங்கப்படக் கூடிய அனைத்தையும் நிராகரிப்பதிலுமாகும்' என் றார்கள்.

தனியாக 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனும் கலிமா வை மொழிவது என்பதோடு மட்டும், போதுமாக்க வில்லை என்பது, இங்கு விளங்கப்படவேண்டிய விடயம். யார் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனும் கலிமாவை மொழிந்து, சமாதி வணக்கத்திலும், சிலை வணக்கத்திலும் தொடர்ந்திருக்கிறாரோ அவ ருடைய பொருளும் இரத்தமும் கண்ணியப்படுத்தப் படாது என்பதாகும்.

✹ மூன்றாவது: அவர்கள் கிளறிவிடும் இன்னு மொரு சந்தேகம்தான்: 'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் றஸூலுல்லாஹ்' எனும் கலிமாவை, முஹம்மது(ஸல்) அவர்களின் சமூகம், சொல்லும் காலமெல்லாம் அவர்களிடம் ஷிர்க் நிகழாது என்ப தாகும். அவர்கள் சமாதிகளில் செய்கின்ற காரியங்க ளும், அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் பிரார்த் திக்கும் பிரார்த்தனைகளும் ஷிர்க் என்று அவர்கள் சொல்லமாட்டார்கள்.

இந்த சந்தேகத்திற்குரிய பதில்: இந்த சமூகத்தில் யூத, கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாகும் நிகழ்வுகள் நடைபெறும் என்பது நபி(ஸல்) அவர்கள் சொன்ன விடயமாகும், அவர்களுக்கு ஒப்பாகும் விடயம்தான், அல்லாஹ்வை விட்டுவிட்டு தங்களது பாதிரிமார்க ளையும் மதப் பெரியார்களையும் கடவுள்களாக எடுத்துக்கொள்ளும் விடயமாகும். நபியவர்கள் சொன்னார்கள்: **'இணைவைப்பாளர்களுடன் எனது சமூகத்தில் ஒரு குழுவினர் சேரும் வரைக்கும், சிலை களை இச்சமூகத்தில் சிலர் வணங்கும் வரை மறுமை நாள் ஏற்படாது'.** (இப்னுஹிப்பான்).

உண்மையில் இச்சமூகத்தில் இணைவைப்பு, மோசமான அடிப்படைகள், வழிகெட்ட கொள்கைகள் போன்றன நிகழ்ந்தன. ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ எனும் கலிமாவை சொல்லிக்கொண்டே அதிகமான மக்கள் இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் வெளியேறினர்.

✸ நான்காவது: சிபாரிசு(ஷபாஅத்) செய்யும் விடயம் சம்மந்தமான அவர்களுடைய சந்தேகம்:
‘நாங்கள் அவ்லியாக்களிடமோ, நல்லடியார்களிடமோ எமது தேவைகளைக் கேட்பதில்லை, ஆனாலும் அவர்கள், அல்லாஹ்விடம் எமக்காக சிபாரிசு செய்யவேண்டும் என வேண்டுகிறோம்’, ஏனெனில் அவர்கள் நல்லவர்களும், அல்லாஹ்விடம் கண்ணியத்துக்குரியவர்களும்கூட. எனவே நாம் அவர்களின் சிபாரிசையும் ஆதரவையும் வேண்டுகிறோம் எனக் கூறுகின்றனர்.

இந்தச் சந்தேகத்திற்குரிய பதில்: இதே கதையைத் தான் இவர்களுக்கு முன்பிருந்த முஷ்ரிக்குகள், அவர்களின் செயலை நியாயப்படுத்தக் கூறினார்கள். உறுதியாக, அல்லாஹ் அவர்களை நிராகரிப்பாளர்கள் எனக் கூறியதோடு, அவர்களை முஷ்ரிக்குகள் எனவும் பெயரிட்டான். அல்லாஹ் கூறுகிறான்: **‘தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்யமுடியாத, அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள். இன்னும் அவர்கள், ‘இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் சிபாரிசு செய்பவை’ என்றும் கூறுகின்றனர்’.** (யூனுஸ்:18).

ஷிபாரிசு உண்மைதான், ஆனாலும் அது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும். அல்லாஹ் கூறுகிறான்: **‘பரிந்து பேசுதல் எல்லாம், அல்லாஹ்வுக்கே உரியது’.** (அஸ்ஸுமர்:44).

அது அல்லாஹ்விடம்தான் கேட்கப்படவேண்டுமே தவிர, மரணித்தவர்களிடம் வேண்டப்படாது. ஏனெனில் அல்லாஹ், சிபாரிசை யாரிடத்திலும் வேண்டுவதற்கு யாருக்கும்

அனுமதியளிக்கவில்லை. (சிபா ரிசு வேண்டப்படுபவர்) மலக்குகளானாலும், நபிமார் களானாலும், அல்லது அவர்களல்லாத எவர்களா னாலும் சரியே!. ஏனெனில் அது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும். வேண்டுமானால், சிபாரிசு செய்ய யாருக்கும் அனுமதி கொடுக்குமாறு அவனி டம் கேட்கலாமே தவிர, படைப்பினங்களிடம் செய் வதுபோல், முன் அனுமதியில்லாமல் சிபாரிசு செய்ய யாரையும் முற்படுத்தக்கூடாது. (உலகிலிருப்பவர்கள்), சிபாரிசு செய்யப்படுபவர் தனக்கு விருப்பமில்லாதவராக இருந்தாலும், சிபாரிசு செய்பவர் தனக்கு வேண்டியவர் என்பதற்காக அவ ரின் சிபாரிசை ஏற்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார் கள். ஏனெனில் அவர்கள் தமக்கு உதவியாளர்கள், வேண்டப்பட்டவர்களின் பால், தேவையுடையவர்க ளாய் இருக்கின்றனர் என்பதனாலாகும்.

சிபாரிசு யாருக்கு வேண்டப்படுகிறதோ அவரை, அல்லாஹ் பொருந்தியிருப்பதோடு, யார் சிபாரிசு வேண்டுகிறாரோ அவர், அவனுடைய அனுமதியையும் எடுத்திருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

**'அன்றியும் வானங்களில் எத்தனை மலக்குகள் இருக் கின்றனர், எனினும், அல்லாஹ் விரும்பி, எவரைப் பற்றித் திருப்தியடைந்து, அவன் அனுமதி கொடுக்கின் றானோ அவரைத் தவிர, வேறெவரின் பரிந்துரையும் எந்தப் பயனுமளிக்காது'.** (அந்நஜ்ம்:26).

✸ **ஐந்தாவது:** இவர்களுடைய மற்றுமொரு சந்தேகம் தான்: 'அவ்லியாக்களுக்கும் நல்லடியார்களுக் கும் அல்லாஹ்விடம் தனிமதிப்பு, கண்ணியம் இருக்கிறது. அதனால் நாங்கள் அவர்களின் மதிப் பையும், கண்ணியத்தையும் கொண்டு அல்லாஹ் விடம் எமது தேவைகளை தேடுகிறோம்'.

இந்த சந்தேகத்திற்குரிய பதில்: ஈமான் கொண்ட மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் அவ்லியாக்கள் தான். ஆனாலும் குறிப்பிட்ட ஒருவரை அல்லாஹ்வின் வலியென்று கூறுவதற்கு, குர்ஆனி லிருந்தோ ஹதீஸிலிருந்தோ ஆதாரம் தேவையாகும்.

குர்ஆன், ஹதீஸின்படி, ஒருவர் அல்லாஹ்வின் வலியென்று நிரூபிக்கப்பட்டாலும், அவருடைய விட யத்தில் அளவுகடப்பதும்,

அவரைக்கொண்டு பரக் கத்தை நாடுவதும், நமக்கு அனுமதிக்கப்படாத விட யமாகும். ஏனெனில் அது, ஷிர்க்கின் பக்கம் இட்டுச்செல்லும் காரியமாகும். எவ்வித இடைத்தர கர்களும் இன்றி, நேரடியாகத் தன்னிடம் பிரார்த் திக்குமாறு அல்லாஹ் நமக்கு சொல்லியிருக்கிறான். ஏனெனில் முந்திய முஷ்ரிக்குகளும், அல்லாஹ் வுக்கும் அவர்களுக்கும் இடையில், இடைத் தரகர் களை ஏற்படுத்தி, அவர்களின் கண்ணியத்தையும் மதிப்பையும் கொண்டு, அல்லாஹ்விடம் வேண்டிய விடயத்தை அல்லாஹ் நிராகரித்துக் கண்டிக்கிறான். அவர்களும் இக்காரணத்தைத்தான் சொன்னார்கள்.

## 3- தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்

முந்திய பகுதிகளில், 'தவ்ஹீதுர் றுபூபிய்யா', 'தவ்ஹீதுல் உலூஹிய்யா' ஆகிய, இரண்டு வகை யான தவ்ஹீத்களையும் நாம் பார்த்தோம். இந்தப் பகுதியில் மூன்றாவது வகையான தவ்ஹீதாகிய, 'தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்'தைப் பற்றிப் பார்ப்போம்.

'தவ்ஹீதுர் றுபூபிய்யாவை', 'தஹ்ரிய்யாக்கள்' என அழைக்கப்படும் நாஸ்திகர்களும், 'சுயூஇய்யாக்கள்' என தற்காலத்தில் அழைக்கப்படும் கம்யூனிஸ வாதி களும் வெளிப்படையாக மறுக்கின்றனர். ஆனாலும் உள்ரங்கமாக, அவர்களும் கடவுள் என்ற ஒருவன் தேவை என்பதை ஏற்றிருக்கின்றனர்.

'தவ்ஹீதுல் உலூஹிய்யாவை' அன்றிலிருந்து இன்று வரைக்குமுள்ள, அதிகமான இணைவைப்பாளர்கள் மறுக்கின்றனர். அதனால்தான் சிலைகளையும், மரங் களையும், மட்டைகளையும், கற்களையும், சமாதிக ளையும் அவர்கள் வணங்குகின்றனர்.

அவ்வாறே 'தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்'தை, ஜஹ்மிய்யாக்களும், அவர்களின் மாணவர்களான முஃதஸிலாக்களும், அஷ்அரிய்யாக்களும் மறுக்கின் றனர்.

‘தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்’ என்றால், அல்லாஹ்வுக்குரிய பெயர்களாகவும், பண்புகளாக வும், அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதர்(ஸல்) அவர்களும் எவற்றைச் சொல்லித்தந்தார்களோ அவைகளை, அப்படியே ஏற்றுக்கொள்வதும், அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்க ளும் எந்தப் பண்புகளை அல்லாஹ்வுக்கு இருக்க முடியாது என்று மறுத்தார்களோ, அவற்றை அப்ப டியே மறுப்பதுமாகும். அல்லாஹ் இது சம்மந்தமாகக் கூறியிருப்பதற்கு ஏற்ப, இந்த மறுப்பு அமையும். அல்லாஹ் கூறுகிறான்: **‘அவனைப் போன்று எதுவுமே இல்லை, அவன்தான் (யாவற்றையும்) செவியேற்ப வன், பார்ப்பவன்’.** (அஸ்ஸூறா:11).

முதன்முதலில் அல்லாஹ்வின் பண்புகளை நிராகரித் தவர்கள் குறைஷிக்குல அறபிகள்தான், அல்லாஹ் இவர்களின் விடயத்தில் கூறுகிறான்:

**‘நாம் உம்மை, இவ்வாறே ஒரு கூட்டத்தாரிடம் அனுப்பி வைத்தோம். இவர்களுக்கு முன்னரும் பல கூட்டத்தினர் நிச்சயமாகச் சென்றிருக்கிறார்கள். நாம் உம்மீது எதை வஹீயாக அறிவித்தோமோ அதை, இவர்களுக்கு ஓதிக் காண்பிப்பதற்காக (உம்மை அனுப்பினோம்). ஆனால் இவர்களோ, ‘அர்றஹ்மான்’ (அருள் மிக்கவன்) என்பதை நிராகரிக்கின்றனர்’.**

(அர்றஃது:30).

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், அல்லாஹ்வை, அவன் ‘அர்றஹ்மான்’ எனச் சொன்னபோது, குறைஷிகள் அதனை நிராகரித்தனர், அப்போது தான் இந்த வசனம் இறங்கியது.

இப்னு ஜரீர்(றஹி) இவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

‘இந்த விடயம், ஹுதைபிய்யாவில் நடைபெற்றது, ‘பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம்’ என்று உடன்ப டிக்கை எழுதியவர் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்த குறைஷிகள், ‘அர்றஹ்மான் என்பது யார்? என்று எமக்குத் தெரியாது’ என்று நிராகரித்தபோது இவ் வசனம் இறங்கியது’.

இப்னு அப்பாஸ்(றழி) அவர்களின் வழியாக வரும் செய்தியை, இப்னு ஜரீர்(றஹி) அவர்கள் பதிந்திருக் கிறார்கள்: **'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுஜூ தில் பிரார்த்திக்கும்போது, 'யா றஹ்மான், யா றஹீம்' எனக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற முஷ்ரிக்குகள், 'இவர் ஒருவனைத் மட்டும்தான் அழைப்பதாகச் சொல்லிக்கொண்டு, இரண்டுபேரை அழைக்கிறாரே!' எனக் கூறினார்கள். அப்போது அல்லாஹ் பின்வரும் வசனத்தை அருளினான்: 'நீங்கள் (அவனை), அல்லாஹ் என்று அழையுங்கள் அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள், எப்பெய ரைக்கொண்டு அவனை நீங்கள் அழைத்தாலும், அவனுக்கு(ப் பல) அழகிய திருநாமங்கள் இருக்கின் றன'.** (அல் இஸ்றா:110).

அல்லாஹ் சூறதுல் புர்கானில் கூறும்போது:
**'இன்னும் அர்ரஹ்மானுக்கு நீங்கள் ஸஜ்தாச் செய் யுங்கள்' என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், 'அர்ரஹ்மான் என்பவன் யார்? என்று' (அவர்கள் கேட்கிறார்கள்).** (அல்புர் கான் :60).

இவர்கள்தான் அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் நிராகரிப்பதில், ஜஹ்மிய்யாக்களுக் கும் அஷ்அரிய்யாக்களுக்கும் முந்தியவர்கள். கெட்ட ஸலபுகளும் மிகக் கெட்ட கலபுகளும் இவர் களே!. அல்லாஹ் கூறுகிறான்: **'ஆகவே நீங்கள் என்னையன்றி, அவனையும் அவன் சந்ததியாரையும் (உங்களைப்) பாதுகாப்பவர்களாக எடுத்துக் கொள் வீர்களா?, அவர்களோ உங்களுக்குப் பகைவர்களாக இருக்கிறார்கள். அக்கிரமக்காரர்கள் (இவ்வாறு) மாற் றிக் கொண்டது மிகவும் கெட்டதாகும்'.**
(அல்கஹ்பு:50).

றஸூல்மார்களும் அவர்களைப் பின்பற்றியவர்க ளும், குறிப்பாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், அவர்களின் கண்ணியத்துக்குரிய தோழர்களும், அவர்களைத் தூய்மையுடன் பின்பற்றிய நல்லவர்க ளும் அல்லாஹ்வை, அவன் எவ்வாறு அவனைப் பற்றி வர்ணித்துள்ளானோ அவ்வாறே வர்ணிப்பர். அதேபோல் அவன் எந்தப் பண்புகள் தனக்கில்லை என நிராகரித்தானோ, அந்தப் பண்புகள் அவனுக் கில்லை என

நிராகரிப்பர். அத்தோடு இந்தப் போக் குக்கு, யார் மாறுபடுகிறார்களோ அவர்களையும் நிராகரிப்பர்.

அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றிச் சொல்லும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஹதீஸிக்கு ஒரு மனிதன் பயந்துபயந்து விளக்கம் சொன்னதைப் பார்த்த இப்னுஅப்பாஸ்(றழி) அவர்கள், அம்மனித ரைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினார்கள்:
'இவர்கள் ஏன் இவ்வாறு பயப்படுகிறார்கள்?, தெளிவான சட்ட திட்டங்களைச் சொல்லும்(முஹ்கமான) இடங்களில், விரைவாகச் சென்றுவிடுகிறார்கள். தெளிவில்லாமல் இருக்கும்(முதஷாபிஹாத்) இடங்க ளில், அளவுக்கதிகம் விளக்கம்சொல்லி தங்களை அழித்துக் கொள்கிறார்கள்'.

இப்னு அப்பாஸ்(றழி) அவர்களின், சபையில் இருந்த சில பொது மக்களைப் பற்றித்தான், இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ஏனெனில் அவர்கள், அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றிச் சொல்லப்பட்டால், ஒருவகையான அச்ச உணர்வு கொண்டவர்களாக, அவற்றை நிராகரிப்ப வர்கள் போல் அப்படியே விட்டுவிடுவார்கள். இவர் கள், அல்லாஹ் இவ்வசனத்தில் குறிப்பிடும் மக்க ளைப்போன்று செயல்பட்டார்கள். அல்லாஹ் கூறுகி றான்: **'எனினும் எவர்களுடைய உள்ளங்களில் வழி கேடு இருக்கிறதோ அவர்கள், குழப்பத்தை ஏற்படுத் துவதற்காக, முதஷாபிஹான வசனங்களின் விளக்கத் தைத் தேடி அதனைப் பின்பற்றுகின்றனர்'.**
(ஆலுஇம்றான்:7).
அதாவது இவைபோன்ற முஹ்கமான வசனங்களை விட்டுவிட்டு, முதஷாபிஹான வசனங்னங்களில் கவ னம் செலுத்துவார்கள். இவர்கள் இறை வேதத்தில் சிலதை ஏற்று, மற்றும் சிலதை நிராகரித்தவர்கள் போன்றாகும்.
அல்லாஹ்வின் பண்புகள் சம்மந்தமாக வந்திருக்கும் அனைத்து வசனங்களும், ஹதீஸ்களும், முஹ்கமான வையாகக் கொள்ளப்படுகின்றன. முஸ்லிம்கள் அவற்றைப் படிக்கிறார்கள். அவற்றின் கருத்துக்க ளைப் புரிந்துகொள்கிறார்கள், அவற்றில் எதனையும்
அவர்கள் நிராகரிக்கவில்லை.

வகீஃ என்ற அறிஞர் அவர்கள் கூறுகிறார்கள்:
'அஃமஷ், சுப்யான் போன்ற மிகப் பெரும் அறிஞர் களையெல்லாம் நாம் சந்தித்திருக்கிறோம், அவர்கள் யாரும் அல்லாஹ்வின் பண்புகளைச் சொல்லும் ஹதீஸ்களை நிராகரித்ததில்லை'.

'றஹ்மான்' என்ற அல்லாஹ்வின் பண்பை நிராக ரித்து, அவனுடைய பெயர்களில் மாற்றம் செய்த, குறைஷி முஷ்ரிக்குகளின் வழியைப் பின்பற்றும் ஜஹ்மிய்யா, முஃதஸிலா, அஷ்அரிய்யாக்களான பித்அத்வாதிகள்தான் இவற்றை நிராகரிக்கின்றனர்.

அல்லாஹ் கூறுகிறான்: **'அல்லாஹ்வுக்கு அழகிய திரு நாமங்கள் இருக்கின்றன, அவற்றைக் கொண்டு நீங் கள் அவனைப் பிரார்த்தியுங்கள். அவனுடைய திருநா மங்களைத் தவறாகப் பயன்படுத்துவோர்களைப் (புறக் கணித்து) விட்டுவிடுங்கள் - அவர்களுடைய செயல்க ளுக்காக அவர்கள், (தக்க) கூலி கொடுக்கப்படுவார் கள்'.**
(அல் அஃறாப்:180).
அல்லாஹ்வே, தனக்கு மிக அழகிய திருநாமங்கள் இருக்கின்றன எனவும், அவற்றைக் கொண்டு தன்னை அழைக்குமாறு கூறியிருக்கும்போது, இவர் கள் கருதுவதைப்போன்று, 'அவனே அவனுக்கு பெயர் சூட்டவில்லை, அந்தப் பெயர்களின் கருத் துக்களை விளங்கமுடியாது என்றால், எவ்வாறு அவனை அழைப்பது?!.
இவ்வாறு அல்லாஹ்வின் பெயர்களை நிராகரிப்ப வர்கள், அல்லது அவற்றுக்கு வேறு கருத்துக்களைக் கொடுப்பவர்கள், இவர்களுக்கு அல்லாஹ் வேதனை யையும் தண்டனையையும் வைத்திருப்பதாக வாக்க ளிக்கிறான்.

அதேபோன்று இவ்வாறானவர்களை நிராகரிப்பாளர் கள் எனவும் வர்ணிக்கிறான்: **'இவர்களோ அர்றஹ் மான் (அருள் மிக்கவன்) என்பதை நிராகரிக்கின்ற னர்'.**
(அர்றஃது:30).

இதனால்தான் ஜஹ்மிய்யாக்களை, அதிகமான அஹ்லுஸ்ஸுன்னா உலமாக்கள், காபிகள் எனக் கூறுகின்றனர். இமாம் லாலகாயி(றஹி) அவர்களும் அவர்களுக்கு முன்பு, இமாம் தபறாணி(றஹி) அவர்களும் இந்தச் செய்தியைக் குறிப்பிடுகின்றனர்.

## அல்லாஹ்வின் பெயர்களை கண்ணியப் படுத்துவது அவசியமாகும்

அல்லாஹ் கூறுகிறான்: **'அல்லாஹ்வுக்கு அழகிய திரு நாமங்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள். அவனுடைய திரு நாமங்களைத் தவறாகப் பயன்படுத்துவோர்களைப் (புறக்கணித்து) விட்டுவிடுங்கள் - அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள் (தக்க) கூலி கொடுக்கப் படுவார்கள்'.** (அல் அஃறாப்:180).

வேறோரிடத்தில் அல்லாஹ் கூறும்போது:
**'அல்லாஹ் - அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறில்லை, அவனுக்கு அழகிய திருநாமங் கள் இருக்கின்றன'.** (தாஹா:8).

இவ்வசனங்களின் மூலம் அல்லாஹ் கூறும் செய்தி: அவனுடைய பெயர்கள் மிக மிக மிக அழகானவை, அவற்றை விட உலகில் வேறு எந்தப் பெயர்களும் அழகானவையல்ல, மேலும் அவை பூரணத்துவமான கருத்துக்களையும் அறிவிக்கக் கூடியனவாகும்.

அல்லாஹ்வின் பெயர்கள், அவனால் வைக்கப்பட் டவையாகும். எனவே அவனும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களும் சொல்லாத, வேறு பெயர்களைக் கொண்டு அவனை அழைப்பது கூடாது.
அல்லாஹ்வின் கூற்றாகிய: **'அவற்றைக் கொண்டு நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்'.**

(அல் அஃறாப்:180).

இதன் கருத்து: அவற்றைக்கொண்டு அவனிடம் நீங்கள் கேளுங்கள். அவற்றின் மூலம் நீங்கள் அவ னிடம் நெருங்குங்கள் என்பதாகும்.

உதாரணமாக: 'யா அல்லாஹ் எனது பாவங்களை நீ மன்னிப்பாயாக!, எனக்கு நீ அருள்புரிவாயாக!, நிச்ச யமாக நீ பாவங்களை மன்னிப்பவனாகவும், மிகவும் இரக்கமுள்ளவனாகவும் இருக்கிறாய்' என்று கேட்ப தைப்போல!.

அல்லாஹ்வின் பெயர்கள் மிக மிக அதிகமாகவே உள்ளன. அவற்றை எண்ணவோ, மட்டிடவோ முடி யாது. அவற்றில் சிலதை அல்லாஹ், மறைத்து வைத்திருக்கிறான். அவ்வாறு மறைத்து வைத்திருப் பவற்றை மிக நெருக்கமான மலக்கோ அல்லது அவ னுடைய தூதரோ அறிய மாட்டார்கள். நபியவர்கள் சொன்னார்கள்:

**'அல்லாஹ்வே!, நீயே உனக்கு வைத்துக்கொண்ட, அல்லது நீ உன்னுடைய வேதத்தில் கூறியிருக்கின்ற, அல்லது உன்னுடைய படைப்புகளில் யாருக்கும் நீ சொல்லிக்கொடுத்த, அல்லது நீ உன்னிடத்தில் மறைத்து வைத்துக்கொண்ட உன்னுடைய அனைத்துப் பெயர்களைக் கொண்டும் நான் உன்னி டம் வேண்டுகிறேன்'.** (புகாரி).

இமாம் இப்னுல் கையிம்(றஹி) அவர்கள் கூறுகிறார் கள்: 'அல்லாஹ்வின் பெயர்கள் இங்கு மூன்று வித மாகப் பிரிக்கப்படுகின்றன:

ஒன்று: அவன் தனது பெயர்களை, தான் விரும்பிய மலக்குமார்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ கற்றுக் கொடுத்திருப்பான். ஆனாலும் தனது வேதத் தில் அவற்றைக் கூறியிருக்கமாட்டான்.

இரண்டாவது: தனது வேதத்தில் அவைகளைக் குறிப்பிட்டதோடு, தன்னுடைய அடியார்களுக்கும் கற்றுக்கொடுத்திருப்பான்.

மூன்றாவது: அவைகளைத் தன்னிடத்திலே மறைத்து வைத்திருப்பான், படைப்புகளில் யாருக்கும் அவை தெரிந்திருக்காது'.

**'அவனுடைய திருநாமங்களைத் தவறாகப் பயன்படுத் துவோர்களைப் (புறக்கணித்து) விட்டு விடுங்கள்'.**
(அல் அஃறாப்:180).

என்பதன் கருத்து: அவர்களைப் புறக்கணியுங்கள். விட்டுவிடுங்கள். அவர்கள் கூறுவதைச் செவியுறா தீர்கள். ஏனெனில் அல்லாஹ் அவர்களின் நிராக ரிப்புக்குக் கூலி கொடுப்பான் என்பதாகும்.

'அவனுடைய திருநாமங்களைத் தவறாகப் பயன் படுத்துவோர்' என்றால், அவற்றின் உண்மையான கருத்துக்களை விட்டுவிட்டு, வேறு கருத்துக்களைக் கொடுப்பதாகும்.

## அல்லாஹ்வின் பெயர்களை, தவறாகப் பயன்படுத்துவதின் வகைகள்

1- அந்தப் பெயர்களைச் சிலைகளுக்குச் சூட்டுதல். 'இலாஹ்' என்பதிலிருந்து, 'லாத்' எனப் பெயர் வைக்கப்பட்டதையும், 'அஸீஸ்' என்பதிலிருந்து, 'உஸ்ஸா' எனப் பெயர் சூட்டப்பட்டதையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

2- அல்லாஹ்வுக்குத் தகுதியில்லாத பெயர்களை அவனுக்குச் சூட்டல், கிறிஸ்தவர்கள் அவனைத் தந்தை என அழைப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

3- மிக மோசமான, அல்லாஹ்வுக்கு இருக்கமுடியாத பண்புகளைக்கொண்டு அவனை வர்ணிப்பது, யூதர் கள் அல்லாஹ்வை வறுமையானவன் எனவும், அவன் வானங்களையும் பூமியையும் படைத்துவிட்டு சனிக்கிழமை ஓய்வு பெற்றான் எனவும், அல்லாஹ் வின் கை, பொத்தப்பட்டுள்ளது எனவும் வர்ணிப் பதை இதற்கு உதாரணமாக் கூறலாம்.

4- அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை அவற் றுக்குரிய, உண்மையான கருத்துக்களைக் கொடுக் காமல், வேறு கருத்துக்கள் கொடுப்பதும், அவற்றில் உண்மையான தன்மைகளை மறுப்பதுமாகும். ஜஹ் மிய்யாக்களும், அவர்களைப் பின்பற்றுபவர்களும் அல்லாஹ்வின் பெயர்களை வெறும் சொற்கள் எனவும், அவைகளுக்குப் பண்புகளோ, கருத்துக்க ளோ கிடையாது எனவும் நிராகரித்து, 'ஸமீஉ' எனும் 'கேட்கக்

கூடியவன்’ என்பதையும், ‘பஸீர்’ எனும் ‘பார்க்கக் கூடியவன்’ என்பதையும் நிராகரித்து, அவனுக்குக் கேள்வியோ பார்வையோ கிடையாது என நிராகரிப்பதை இதற்கு உதாரணமா கக் கூறமுடியும்.
மார்க்க ரீதியாகவும், புத்தி ரீதியாகும் கூட நாம் நோக்கினால், இது மிகப் பெரும் நிராகரிப்பாக இருப்பதைக் காணலாம். இது முஷ்ரிகீன்களின் நிரா கரிப்பைவிட மோசமானதாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள், அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புக ளையும், தங்களின் சிலைகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால் இவர்களோ, அல்லாஹ்வின் பரிபூரணத் தன்மையை இல்லாமலாக்கி, அவனுடைய பெயர்க ளையும் பண்புகளையும் நிராகரித்தனர்.

அல்லாஹ்வின் அழகிய பெயர்களையும் பண்புக ளையும் அப்படியே ஏற்றுக்கொள்வதுபோல், அவை சொல்லும் கருத்துக்களையும், அப்படியே ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும். அவற்றில் எவ்வித, கருத்து ரீதியான மற்றமோ, அல்லது சொல் ரீதியான மாற்றமோ, அல்லது அவற்றுக்கு எதனையும் ஒப் பாக்கவோ, அல்லது அவை இப்படித்தான் இருக்கும் என்று வடிவம் சொல்லவோ கூடாது. ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: **‘அவனைப் போன்று எந்தப் பொருளும் இல்லை, அவன்தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்’.** (அஷ் ஷூறா:11).

- அல்லாஹ்வின் பெயர்களை மற்றவர்களுக்குச் சூட்டாது, அப்பெயர்களைக் கண்ணியப் படுத்துவது கட்டாயம். அதில்தான் தவ்ஹீது உறுதிப்படுத்தப்படும்.

**அபூஷு ரைஹ் என்ற ஸஹாபியவர்கள், அபுல்ஹகம் (தீர்ப்பளிப்பவரின் தந்தை) என அழைக்கப்பட்டார், அதற்கு நபியவர்கள்: ‘அல்லாஹ்தான் தீர்ப்பளிப்பவன், அவனிடத்தில்தான் தீர்ப்புகளெல்லாம் மீளும்’ எனக் கூறியபோது, அந்த ஸஹாபியவர்கள்: எனது கூட்டத் தினர் ஏதாவதொரு விடயத்தில் கருத்து வேறுபாடு பட்டால் என்னிடம் தான் வருவார்கள், அவர்களுக்கு மத்தியில் நான் தீர்ப்பளித்தால், இரண்டு தரப்பாரும் அந்தத் தீர்ப்பைப் பொருந்திக்கொள்வர். (அதனால் தான் எனக்கு**

**இந்தப் பெயர் வந்தது) என்று கூறி னார். அப்போது நபியவர்கள்: 'நல்லதொரு விடய மாச்சே!' என்று சொல்லிவிட்டு, 'உனது பிள்ளைக ளின் பெயரென்ன' எனக் கேட்க, அந்த ஸஹாபி: ஷு ரைஹ், முஸ்லிம், அப்துல்லாஹ் என்றார். அப்போது நபியவர்கள்: 'அவர்களில் பெரியவர் யார்'? எனக்கேட்டார்கள். ஷு ரைஹ் என்று அவர் பதில் கூறினார். அப்போது நபியவர்கள்: 'அப்படியானால் நீ அபூஷு ரைஹ் (ஷு ரைஹின் தந்தை) என்று கூறி அவருக்குப் பெயர்மாற்றினார்கள்'.** (அபூதாவூத்).

அல்லாஹ்வின் பெயர்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே நபியவர்கள், அந்த ஸஹாபியுடைய அழைப்புப் பெயரை மாற்றினார்கள். ஏனெனில் பொதுவாக அல்லாஹ்தான் தீர்ப்பாளனாக இருக்கிறான். அல்லாஹ் கூறுகிறான்: **'மேலும், அல்லாஹ்வே தீர்ப்பளிப்பவன், அவன் தீர்ப்பை மாற்று பவன் எவனுமில்லை'.** (அர்றஃது:41).
அவன்தான் உலகிலும் மறுமையிலும் தீர்ப்பாளன். உலகில், படைப்புகளுக்கிடையில், நபிமார்களுக்கு வஹீ அறிவிப்பதன் மூலம் தீர்ப்பளிக்கிறான். மறுமையில், அவர்கள் கொண்டிருந்த கருத்துமுரண் பாடுகளுக்கு, அவனுடைய அறிவைக் கொண்டு தீர்ப்பளிக்கிறான்.

- அல்லாஹ்வின் பெயர்களுக்கு கண்ணியம் கொடுக்கும் வகைகளில் உள்ளதுதான், ஒரு எஜமான் தனது அடிமைக்கு 'அடிமை' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் இருப்பது.

நபியவர்கள் சொன்னார்கள்: **'நீங்கள் யாரும், 'உங்கள் எஜமானுக்கு உணவூட்டிவிடு', அல்லது 'உனது எஜமானைக் குளிப்பாட்டிவிடு', எனக் கூறா தீர்கள். மாறாக எனது தலைவர், எனக்குப் பொறுப் பானவர் என்றே கூறுங்கள். அதேபோல், 'எனது அடிமை', 'அடிமைப் பெண்' என்று நீங்கள் கூறாதீர் கள். மாறாக எனது பையன், எனது சிறுவன், எனது சிறுமி என்றே நீங்கள் கூறுங்கள்'.** (புகாரி).

இணைவைத்தலின் சாயல் கூட இருக்கக்கூடாது என்பதற்காக, அதன் பக்கமாகக் கொண்டுசெல்லக் கூடியவைகள் அனைத்தை

விட்டும், நபியவர்கள் தடைசெய்தார்கள். அவைகளில் உள்ளவைதான், 'றப்புக'(உனது எஜமான்), 'அப்தீ'(எனது அடிமை) என்ற வார்த்தைகளாகும். இவைகளைப் பாவிப்பதை விட்டும் தடைசெய்தார்கள்.
அத்தோடு 'றப்பு' என்பது அல்லாஹ்வின் திருநா மங்களில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

- அல்லாஹ்வின் பெயர்களைக் கண்ணியப் படுத்துவதில் உள்ளதுதான், அவனுடைய பெயர்சொல்லிக் கேட்கப்படும்போது, அதைக் கொடுத்துவிடுவது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னதாக இப்னு உமர்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **'யார் அல்லாஹ்வைக் கொண்டு உதவி தேடுகிறாரோ, அவருக்கு நீங்கள் உதவிசெய்யுங்கள். மேலும் யார் அல்லாஹ்வைக் கொண்டு உங்களிடம் கேட்கிறாரோ, அவருக்கும் நீங்கள் கொடுங்கள்'.**

(அபூதாவூத், இப்னு ஹிப்பான்).

ஏனெனில் அல்லாஹ்வைக் கொண்டு உதவிதேடியும் யார் உதவி செய்யவில்லையோ, அவர் அல்லாஹ் வின் பெயரை கண்ணியப்படுத்தவில்லை என்பதை அது குறிக்கும். அவருக்குக் கொடுக்கும்போது, அல்லாஹ்வின் பெயரை, கொடுத்தவர் கண்ணியப் படுத்தினார் என்பதை அது குறிக்கும்.

- அல்லாஹ்வின் பெயரைக் கண்ணியப்படுத் துவதில் உள்ளதுதான், அல்லாஹ்விடம் கேட்கும்போது சுவர்க்கத்தைக்கேட்பது.

நபியவர்கள் சொன்னதாக ஜாபிர்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **'அல்லாஹ்விடம் நேரடியாக, சுவர்க்கத்தைத்தவிர வேறெதுவும் கேட்கப்படாது'.**

(அபூதாவூத்).

அதாவது அல்லாஹ்விடம் கேட்கும்போது, எமது வாழ்வின் குறிக்கோளும், மிக உயர்ந்த நாட்டமு மாகிய

சுவர்க்கத்தைத்தான் கேட்கவேண்டும், அல் லது அதற்கு இட்டுச்சொல்லும் பாதைகளையும் நாம் கேட்கலாம்.

- அல்லாஹ்வின் பெயர்களுக்குக் கொடுக்கும் கண்ணியத்தில் உள்ளதுதான், அவற்றைக் கொண்டு அதிகமாக சத்தியம் செய்யாமல் இருப்பதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: **'உங்கள் சத்தியங்களை (முறித்துவிடாமல்) பேணிக்காத்துக் கொள்ளுங்கள'.**

(அல்மாஇதா:89).

இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள், இந்த வசனத்துக்கு விளக்கம் சொல்லும்போது: 'நீங்கள் சத்தியம் செய்யாதீர்கள்' என்று சொல்ல அல்லாஹ் விரும் புகிறான். ஏனெனில் அதிகமாக சத்தியம் செய்வது அல்லாஹ்வை இலகுவாகக் கணிப்பிடும் அளவுக் குக் கொண்டுசெல்வதோடு, அவனுக்குள்ள கண்ணி யத்தையும் இழக்கச்செய்துவிடும். இது தவ்ஹீதின் பூரணத்துவத்தை இல்லாமல் செய்யும் ஒரு விடய மாகும்'.

ஸல்மான் பாரிஸி(றழி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதாக அறிவிக்கிறார்கள்:

**'மூன்று மனிதர்களுடன் அல்லாஹ் (மறுமையில்) பேச வோ, அவர்களின் பாவங்களை மன்னிக்கவோ மாட்டான். மேலும் அவர்களுக்குக் கடுமையான வேத னையும் உண்டு. அவர்கள்தான்: 'வயது முதிர்ந்த பின்பும் விபச்சாரம் செய்தவர்', 'பெருமையடிக்கும் ஏழை', 'அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வதை வியாபாரமாக்கிக் கொண்டவர்', வாங்கும்போதும், விற்கும்போதும் அவர், சத்தியம் செய்துதான் வாங்குவார், விற்பார்'.** (தபறாணி).

இதிலிருந்து விளங்கும் விடயம்: அதிகமாகச் சத்தி யம் செய்வதற்குள்ள எச்சரிக்கை. ஏனெனில் அதிக மாகச் சத்தியம் செய்வது, அல்லாஹ்வை சிறுமைப் படுத்தும் ஒரு செயலும், அவனுடைய பெயர்களை கண்ணியப்படுத்தாத ஒரு நிலையுமாகும்.

## அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விடயத்தில் அஹ்லுஸ்ஸு ன்னா வல்ஜமாஅத்தினரின் நிலைப்பாடு

அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னா அல்ஜமாஆ - வெற்றி பெற்ற கூட்டம் - இவர்களின் நிலைப்பாடு, அல்லாஹ்வின் பெயர்களும் பண்புகளும் அல்குர்ஆனிலும் ஹதீஸி லும் எப்படி வந்தனவோ, அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதோடு, அவை தெரிவிக்கும் கருத்துக் களையும் அப்படியே ஏற்றுக்கொள்ளல். அத்தோடு அவைகள் சொல்லும் வெளிப்படையான கருத்துக்க ளையே அவைகளுக்குக் கொடுத்தல்.

இவ்வாறு ஏற்றுக்கொள்வதால், அல்லாஹ்வை அவ னுடைய படைப்புகளுக்கு ஒப்பாக்கியதாக நினைப் பது, புத்திசாலித்தனமல்ல. ஏனெனில் படைத்தவ னின் பண்புகள் அவனுக்கே குறிப்பானவையாக வும், சொந்தமானவையாகவும், அவனுடைய கண்ணி யத்துக்கு ஏற்றவாறும் இருக்கின்றன. படைப்பினங்க ளின் பண்புகள், அவைகளுக்குத் தகுதியான அமைப்பிலும், அவைகளுக்குக் குறிப்பானவையாக வும் இருக்கின்றன. இவ்விரண்டு பண்புகளுக்கும் இடையில் ஒப்புக்கிடையாது. அதேபோல் அல்லாஹ் வின் அமைப்புக்கும், படைப்புகளின் அமைப்புக ளுக்கும் ஒப்புக்கிடையாது.

இந்த விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கை, சில ஆரோக்கியமான, ஆணித்தரமான, ஆதாரபூர்வமான அடிப்படைகளின் மீதும், சீரிய விதிகளின் மீதும் அமைக்கப்பட்டிருக்கிறது.
அவை:

**முதலாவது:** அல்லாஹ்வின் பெயர்களும் பண்புக ளும், அவனுக்கே அவன் வைத்துக்கொண்டவை யாகும். அதாவது, எந்தப் பெயர்களையும் பண்புக ளையும் அல்லாஹ்வும், அல்லாஹ்வுடைய தூதரும், அல்லாஹ்வுக்கு இருப்பதாகச் சொன்னார்களோ, அவைகளைத் தவிர, வேறு எந்தப் பெயர்களையும் அவர்கள், அல்லாஹ்வின் பெயர்களாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்களின் சிந்தனைகளி லும்,

புத்திகளிலும், உருவாகும் பெயர்களையெல் லாம் அவர்கள், அல்லாஹ்வுக்குச் சூட்டமாட்டார் கள். அதேபோல், அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதரும், அல்லாஹ்வுக்கு இருக்க முடியாத விடயங் கள் என எவைகளை நிராகரித்தார்களோ, அவைக ளைத்தான் இவர்களும் நிராகரிப்பார்கள். மாறாக அவர்களின் சிந்தனைகளில் படும் விடயங்களை யெல்லாம் அவர்கள் நிராகரிக்கமாட்டார்கள்.
அல்லாஹ்வுடைய விடயத்தில், ஒன்றை உறுதிப் படுத்துவதிலும், நிராகரிப்பதிலும், அல்குர்ஆனை யும், ஹதீஸையும் அவர்கள் தாண்டமாட்டார்கள்.
அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் எவை, விபரிக்கப் படாமல் வந்தனவோ – அவனுடைய உருவம், அவன் இறங்கும் முறை போன்றவைகள் - அவை களில் எந்தக் கருத்தும் சொல்லமாட்டார்கள். ஏனெனில் அல்லாஹ்வோ அல்லாஹ்வுடைய தூத ரோ அவற்றில் எந்த விபரிப்பும் செய்யவில்லை என்பதாலாகும்.

இரண்டாவது: அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் சம்மந்தமாக, அல்லாஹ்வோ, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதோ, யாருக்கும் விளங்காத விடுகதையோ, அல்லது மந்திரமோ அல்ல. மாறாக ஒருவர் கதைக்கும்போது எப்படி அவருடைய எண் ணம் அறியப்படுகிறதோ, அவ்வாறுதான் இந்த வசனங்களுக்கும் கருத்துக்கள் இருக்கின்றன. ஏனெ னில் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் முஹ்க மான(கருத்துக்களை விளங்கிக்கொள்ள முடியுமான) வசனங்களாக இருக்கின்றன.

அஹ்லுஸ்ஸுன்னாக்கள், அப்பெயர்களின் கருத்துக் களையும், பண்புகளின் கருத்துக்களையும், அவற்றி லுள்ளவாறே சொல்வார்கள். ஏனெனில் அவைகள், அல்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் சொல்லப்பட்டி ருக்கின்றன. அல்லாஹ், அல்குர்ஆனை ஆய்வு செய்யுமாறும், நன்றாக விளங்குமாறும் கூறுகிறான். எனவே, இவைகளை விளங்கமுடியாது என்று சொன் னால், அல்லாஹ் இவைகளை ஆய்வு செய்யுமாறு கூறியதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

எனவே அல்லாஹ்வுடைய பண்புகளின் கருத்துக் கள் தெரிந்தவைகளே!. ஆனாலும், எப்படி என்ற அவற்றின் அமைப்புக்கள்தான் தெரியாதவையாகவும் அறிவிக்கப்படாதவையாகவும் உள்ளன. அல்லாஹ் வைத் தவிர வேறு யாருக்கும் அது தெரியாது.

அதனால்தான், இமாம் மாலிக்(றஹி) அவர்களிடம்: **'அர்றஹ்மான், அர்ஷின் மீது அமைந்தான்'.**

(தாஹா:5).

என்ற வசனத்தில், இவ்வாறு கேள்விகேட்கப்பட் டது: 'எப்படி அவன் அர்ஷில் அமைந்தான்?', அப்போது, இமாம் மாலிக்(றஹி) அவர்கள்: 'அமை தல்' என்பது தெரிந்த விடயம். ஆனால் அது எப்படி என்பதுதான் தெரியாத விடயம். ஆனாலும் அதனை ஈமான்கொள்வது கடமை. அது எப்படி யெனக் கேள்விகேட்பது பித்அத்' எனப் பதிலளித் தார்கள்.

இமாம் மாலிக்(றஹி) அவர்கள், 'அல்லாஹ்வின் அமைவு' பற்றிச் சொன்ன இந்த விடயம், பொது வாக அனைத்து அல்லாஹ்வின் பண்புகளுக்கும் உரிய விதியாகும். இதுதான், அஹ்லுஸ்ஸுன்னா அல்ஜமாஅத்தினரின் உறுதியான கொள்கையுமாகும். எனவே, யார் இதற்கு மாற்றமாக, ஸலபுகள் அல்லாஹ்வின் பண்புகளில், அறவே கருத்துச் சொல்லவில்லை என்று கூறுகிறாரோ அவர், அந்த ஸலபுகள் மீது பொய்யுரைத்துவிட்டார். ஏனெனில் அவர்களின் கருத்துக்கள், இந்தப் பொய்யனின் கருத்துக்கு மாற்றமாவே உள்ளன.

மூன்றாவது: ஸலபுகள், அல்லாஹ்வின் பண்புகளை உறுதிப்படுத்தும்போது, அவைகளுக்கு எவ்வித உதா ரணமும் காட்டமாட்டார்கள். படைப்பினங்களின் பண்புகளோடு, படைப்பாளனின் பண்புகளை ஒப்பிட மாட்டார்கள். ஏனெனில், அல்லாஹ்வைப் போன்று எதுவுமேயில்லை. அவனுக்கு நிகர், பொருத்தம், நேர்பாடு எதுவுமே படைப்பினங்களில் இல்லை. அல்லாஹ்வின் பண்புகளுக்கு, படைப்பினங்களின் பண்புகளை உதாரணம் காட்டினால், அல்லாஹ்வு டைய பண்புகளின் அமைப்பை, அறிந்ததைப் போன்ற வாதாட்டமாக அது

மாறிவிடும். அவனு டைய அமைப்பு, தோற்றம் எப்படி என்று எமக்குத் தெரியாதோ, அதேபோன்றுதான், அவனுடைய பண்பு களின் அமைப்பு, எப்படி என்று எமக்குத் தெரியாது. அவனின் பண்புகளின் அமைப்பு எப்படி என்று தெரிந்தால், அவனுடைய அமைப்பையே (தோற்றத்தையே) நாம், தெரிந்தவர்களாவோம். அல்லாஹ்வின் தோற்றத்தை அவனைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. அல்லாஹ்வின் பண்புகள் தொடர்பான பேச்சு, அவனுடைய அமைப்பு, தோற் றம் தொடர்பான பேச்சின் ஒரு பகுதியாகும். எப்படி அவனுடைய தோற்றம், அமைப்பு படைப்புகளின் அமைப்புகளைப் போன்றதாக இல்லையோ, அதே போல், அவனுடைய பண்புகள் படைப்புகளின் பண்புகளைப்போன்று கிடையாது. அல்லாஹ் கூறுகி றான்: **‘அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன்தான், (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்ப வன்’.** (அஷ்ஷூறா:11).

அதாவது, அவனுடைய அமைப்பிலோ, அவனுடைய பண்புகளிலோ, அவனுடைய செயற்பாடுகளிலோ அவனைப் போன்று யாருமேயில்லை.

அல்லாஹ், அவனை எப்படி வர்ணித்தானோ, அப்ப டியே நாம் அவனை வர்ணிப்பது கடமையாகும். ஏனென்றால், அல்லாஹ்வைத் தவிர, அவனை மிக அறிந்தவன் யாருமேயில்லை.

அல்லாஹ் கேட்கிறான்: **‘உங்களுக்கு நன்றாகத் தெரியுமா? (அவனைப் பற்றி), அல்லது அல்லாஹ் வுக்கா?’.** (அல்பகறா:140).

அவன், அவனைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றி யும், மிக மிக அறிந்தவன். அதேபோல் நபியவர் கள், அவனைப் பற்றி என்ன சொன்னார்களோ, அவற்றை நாம் அப்படியே ஈமான்கொள்வது கடமை யாகும். ஏனெனில், அல்லாஹ்வுக்குப் பிறகு, அல்லாஹ்வைப் பற்றி மிக அறிந்தவர் நபியவர்கள் தான். அல்லாஹ் நபியவர்கள் சம்மந்தமாக: **‘அவர், தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது (பேசுவது), அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப் பட்டதேயன்றி வேறில்லை’.** (அந்நஜ்ம்:3-4).

எனவே ஒவ்வொரு முஸ்லிமும், அல்லாஹ்வும், அல்லாஹ்வுடைய தூதரும், அல்லாஹ்வைப் பற்றி எப்படி வர்ணித்துள்ளார்களோ அவற்றை, அப்ப டியே ஈமான்கொள்வதும், படைப்புகளின் பண்புக ளுக்கு, அல்லாஹ்வுடைய பண்புகளை ஒப்பிடாமல் இருப்பதும் கடமையாகும்.

யார் தன்னை, அல்லாஹ்வை விடவும், அல்லாஹ்வு டைய தூதரை விடவும் முற்படுத்தி, அல்லாஹ்வின் மீதே அடர்ந்தேற முயல்கிறாரோ அவர்தான், அல்லாஹ் தனக்கு இருப்பதாக உறுதிப்படுத்திய, அல்லாஹ்வின் தூதர் அல்லாஹ்வுக்கு இருப்பதாக உறுதிப்படுத்திய, அவனுடைய பண்புகளை நிராகரிப் பார். அவர் சொல்கிறார்: ‘நீ உன்னைப் பற்றியும், உன்னுடைய தூதர் உன்னைப் பற்றியும், வர்ணித்த வைகள் பொருத்தமாயில்லை!. அவற்றில் இன்ன யின்ன குறைபாடுகள் இருக்கின்றன!. எனவே நான், அவற்றில் சிலதை மாற்றுகிறேன், வேறு சிலதை இல்லாமலாக்கி, அவற்றுக்குப் பதிலாக நான் சிலதை உருவாக்கியிருக்கிறேன்’ என்கிறார். ‘இந்த விடயத் திற்காக, நான் உனது வேதத்திடமோ, உனது நபி யின் வழியிடமோ செல்லவில்லை. ஏனென்றால், அவற்றில் ஒப்புவமைகள் இருக்கின்றன. அதனால் நான், பெலோஸபி பேசுபவர்களிடமும், (வழிகெட்ட) ஜஹ்மிய்யாக்களிடமும், முஃதஸிலாக்களிடமும், அஷ்அரிய்யாக்களிடமும், மாதுரிதிய்யாக்களிடமும் சென்று தீர்ப்புத் தேடியிருக்கிறேன்’! என்று அவர் கூறுகிறார். இவர், எப்படி அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் தூதருடைய வழியையும் ஈமான் கொண்ட ஒரு முஃமினாக இருப்பார்?!
அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவராக இவர் எப்படி மாறுவாரா?.

நான்காவது: அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர், அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புகளையும், அல்லாஹ்வுக்குத் தகுதியானவாறும், படைப்புகளுக்கு அவனை ஒப்பிடாமலும் உறுதிப்படுத்துவர். குறைபா டுகள், மற்றும் அவனுக்குத் தகுதியில்லாத விடயங் களை விட்டும், அவனைத்

தூய்மைப்படுத்துவர். இவ்வாறு அவனைத் தூய்மைப்படுத்துவது, அவனு டைய பெயர்களையோ, பண்புகளின் கருத்துக்களை யோ, அல்லது அதன் சொற்களையோ வீணாக்கி விடாமலும், அவைகளின் உண்மையான கருத்துக் களை மாற்றிவிட்டு, பிழையான கருத்துக்களைக் கொடுக்காமலும் பார்த்துக்கொள்வர்!.
ஆகவே அஹ்லுஸ்ஸுன்னாக்களின் வழி, நடுநிலை யான வழியாகும். அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்து கிறோம் எனும் பெயரில், அவனுடைய பெயர்களை யும், பண்புகளையும் நிராகரிக்காமலும், அல்லாஹ் வின் பெயர்களையும், பண்புகளையும் உறுதிப்படுத் துகிறோம் எனும் பெயரில், அவனைப் படைப்புக ளுக்கு ஒப்பாக்காமலும் இருப்பார்கள்.

ஐந்தாவது: அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர், அல்லாஹ்வின் பண்புகளை உறுதிப்படுத்துவதிலும், அவனிடம் இருக்கமுடியாத பண்புகளை நிராகரிப்ப திலும், அல்குர்ஆனின் வழிமுறையைக் கையாளு கின்றனர். அதாவது: நிராகரிப்பதில், சுருக்கமாகவும் (மொத்தமாகவும்), உறுதிப்படுத்துவதில் விரிவாகவும் இருத்தல். அல்லாஹ் கூறுவதைப்போல்: **'அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன்தான், (யாவற் றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்'.**

(அஷ்ஷூறா:11).

இவ்வசனத்தில்: 'அவனைப் போன்று எப்பொருளும் இல்லை' என்று, மொத்தமாக நிராகரித்துவிட்டு, 'அவன்தான் யாவற்றையும் செவியேற்பவன், பார்ப் பவன்' என்று, தனது பண்புகளை விரிவாக நிலை நிறுத்துகிறான்.
இந்த வழியைத்தான் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் கடைப்பிடிப்பர்.
அல்லாஹ், தனக்குக் கிடையாது என்று நிராகரிக் கின்ற பண்புகள் எல்லாமே, அதற்கு மாற்றமான பண்புகளின் பூரணத்துவத்தை நிலைநிறுத்தவே!. அல்லாஹ் கூறுகிறான்: **'உம்முடைய இறைவன், ஒரு வருக்கும் அநியாயம் செய்யமாட்டான்'.**

(அல்கஹ்ப்:49).

இவ்வசனத்தில்: 'அநியாயம்' எனும் பண்பை நிராக ரிப்பது, தனது முழுமையான நீதியையும் நேர்மை யையும் நிலைநிறுத்தவே.

வேறோரிடத்தில்: **'அவனை சிறுதூக்கமோ, உறக்க மோ பீடிக்காது'.** (அல்பகறா:255).
தனது நிலையான தன்மையையும் நீடித்த வாழ்வை யும் நிலைநிறுத்த, தூக்கம் என்கின்ற பண்பை நிரா கரிக்கிறான்.

எனவே இவ்வாறான அடிப்படைகளை வைத்துத் தான், அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர் சீரான கொள்கையை அமைத்திருக்கின்றனர்.

## அல்லாஹ்வின் அழகிய பெயர்கள், பண்புகள் விடயத்தில், ஜஹ்மிய்யாக்கள் மற்றும் அவர்களின் மாணவர்களின் போக்கு

அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விடயத்தில் அல்குர்ஆனும், ஹதீஸ்களும் சொல்வதைப் போல், அவனுக்குத் தகுதியானதும், பொருத்தமானதுமான அமைப்பில், அவைகளை உறுதிப்படுத்தவேண்டும். ஏனென்றால், இவ்விடயம் அல்லாஹ்வை ஈமான் கொள்ளல் எனும் அடிப்படையிலுள்ளதாகும். இது தான், அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் கொள்கையாகும்.
ஆனால் ஜஹ்மிய்யாக்களும், அவர்களின் மாணவர் களான முஃதஸிலாக்களும், அஷ்அரிய்யாக்களும் இதற்கு முரணாகவே இருக்கின்றனர். இவர்கள், அல்லாஹ் தனக்கிருப்பதாக உறுதிப்படுத்திய பெயர் களையும், பண்புகளையும் நிராகரிக்கின்றனர். அல்லது அவற்றில் சிலதை ஏற்று, சிலதை நிராக ரிக்கின்றனர். இவ்வாறான ஏற்புக்கும், நிராகரிப்புக் கும், அவர்களுக்கு அளவு கோலாக இருப்பது, அவர்களின் குறுகிய சிந்தனை, அல்லது வழி கெட்ட அவர்களின் அறிஞர்கள்தான்.
குர்ஆனையும், ஹதீஸையும், ஆதாரமாக எடுத்தவர் களுக்கும், பின்தங்கிய சிந்தனைகளையும், கழிவான யோசனைகளையும் ஆதாரமாக எடுத்தவர்களுக்கும் இடையில், தெளிவான பெரும் வேறுபாடு இருக்கி றது.
அவர்களில் ஒருவன் சொல்கிறான்: 'எந்த வசனங்க ளெல்லாம் ஒப்பு, உவமைகளைக் காட்டுகிறதோ அவைகளுக்கெல்லாம்,

மாற்றுக் கருத்தைக் கொடுத்து விடு!. அல்லது, அவைகளுக்குக் கருத்தேயில்லை என்று சொல்லிவிடு'!!.

இதுதான், குர்ஆனிலும், சுன்னாவிலும் அல்லாஹ் வின் பெயர்கள், பண்புகள் சம்மந்தமாக வந்த வச னங்களுடன், அவர்கள் நடந்துகொள்ளும் நடை முறைகள்.

அல்லாஹ்வின் வசனங்களுக்கு இருக்கும் முக்கியத் துவத்தை விட, இவர்களின் சிந்தனைகளுக்கும், புத்தியில் எழும், கருத்துக்களுக்கும் இவர்கள் முக் கியத்துவம் கொடுத்து, அவனுடைய பூரணத்துவம் மிக்க பண்புகளையும், கண்ணியத்துக்குரிய வர்ணிப் புகளையும் நிராகரிக்கிறார்கள் என்றால், இவர்களை யாரென்று சொல்வது?!.

இவர்களைப் பற்றி, இமாம் இப்னுல் கையிம்(றஹி) அவர்கள் கூறுகிறார்கள்: 'அல்லாஹ் தன்னைப் பற்றி விபரித்த விபரிப்புகளும், செயல்களும், வெளிப்படையாகப் பார்க்கும்போது, வீணானதும், படைப்புகளுக்கு ஒப்பானதும், மற்றப் படைப்புகளின் பண்புகளைப் போலவுமாகும். அவன், அவனைப் பற்றிய உண்மையான செய்திகளைத் தெரிவிக்காமல் விட்டுவிட்டு, வெறும், தூரமான அடையாளங்களைத் தான் காட்டியிருக்கிறானே தவிர, தெளிவாக, விபர மாக அவனைப் பற்றிச் சொல்லவில்லை. அவனைப் பற்றி, அவன் சொல்லியிருக்கும் விடயங்கள், படைப்புகளுக்கு அவனை ஒப்பாக்கும் செய்திகள் தான்.

இவ்வாறு செய்ததன் மூலம், அவனுடைய படைப்பு கள், அவர்களின் சிந்தனைகள் சொல்வதுபோன்று, அவர்களாக விதிகளை உருவாக்கி, அவற்றின் மூலம் அந்தச் செய்திகளில் மாற்றங்களையும், உரிய இடங்களுக்கு வேறு கருத்துக்களையும் கொடுக்க வேண்டும் என விரும்பினான். அதனால்தான் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளில், சரியான கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக, அவனால் சொல்ல முடியுமாக இருந்தும், அவன் சரியான கருத்துக்களைச் சொல்லாமல், மனிதர்களின் சிந்த னைப் பிரகாரம், அவைகளுக்குக் கருத்துக்கொடுக் கட்டும் என விட்டுரக்கிறான் என்று, யார் எண்ணு கிறானோ அவன் அல்லாஹ்வைப் பற்றி கெட்ட எண்ணம் கொள்கிறான்.

அப்படியின்றி, அல்லாஹ் அவனைப் பற்றிய உண்மையான வர்ணிப்புகளை, தெளிவாக வர்ணிக்க முடியாமல்தான் விட்டுவிட்டான் என, எவன் கூறுகி றானோ அவன், அல்லாஹ்வுக்கு, 'முடியாது' என்ற பண்பை, அவனுக்கு இருப்பதாகச் சொல்லிவிட்டான். அல்லாஹ் இதனை விட்டும் மிகப் பரிசுத்தமான வன்.

அவ்வாறே, அல்லாஹ்வின் வேதத்திலும், அல்லாஹ் வின் தூதருடைய பொன் மொழிகளிலும், அல்லாஹ் வின் பெயர்கள், பண்புகள் சம்மந்தமாக வந்திருப்ப தைவிட, எமது சிந்தனைகளில் எழுந்த கருத்துக்க ளிலும், விளக்கங்களிலும்தான் நேரான பாதையும், உண்மையான விளக்கமும் இருக்கிறது என்று யார் சொன்னாரோ அவரை விட, அல்லாஹ்வின் மேல் மோசமான, கெட்ட எண்ணம் கொண்டவர் வேறு யாரும் கிடையாது.

அதேபோன்று, அல்லாஹ்வுக்குப் பார்வைப் புலனோ, கேள்விப் புலனோ, அறிவோ, நாட்டமோ, பேச்சோ கிடையாது, மேலும் அவன், படைப்புகளில் யாருட னும் பேசவுமில்லை, அறவே அவன் யாருடனும் பேசவும் மாட்டான்... என்று யார் எண்ணுகிறாரோ, அவர் அல்லாஹ்வைப் பற்றி கெட்ட எண்ணம் கொண்டு விட்டார்'.

இப்னுல் கையிம்(றஹி) அவர்கள், இந்த வார்த்தை களின் மூலம் சொல்லும் விடயம், யாரெல்லாம் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விடயத்தில், அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கருத்தை, போக்கை ஏற் றுக்கொள்ளவில்லையோ அவர்கள், மேலே கூறப் பட்டிருக்கும் கருத்துக்களில், ஏதாவதொரு கருத்தில் இருந்துதான் தீரவேண்டும். அக்கருத்துக்களில் அவர்கள் இருந்தால், அவர் ளைவ ிட வழிகெட்ட வர்களும் மோசமானவர்களும் யாருமே இருக்க முடியாது.

மேலும், இவர்கள் கூறும் இந்தக் கூற்று, அல்லாஹ் வைவிட இவர்கள் அறிந்தவர்கள் எனச் சொல்கி றது. ஏனெனில் இவர்கள்: 'இந்தப் பண்புகள் அல்லாஹ்வுக்குப் பொருத்தமில்லாதவை' என்கின்ற னர். இவ்வளவுக்கும்

அல்லாஹ்தான் இந்தப் பண்பு கள், தனக்கு இருப்பதாகச் சொன்னான். எனவே இதனை விடவும் வழிகேடு உலகில் வேறுண்டோ?!.

அத்தோடு, அவர்களின் இந்தக் கொள்கையின் மூலம், 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை விடவும், நாம் அல்லாஹ்வைப் பற்றி நன்கு அறிந்திருக்கி றோம்' என்கிறார்கள். இவர்கள் எவ்வளவு பெரிய தொரு பாரிய வழிகேட்டில் இருக்கின்றனர்.

இவர்கள் எப்படி அல்லாஹ்வை, அவனை விட அறிந்தவர்களாக இருக்கமுடியும்?. அல்லாஹ் கூறுகி றான்: **'அவர்களுக்கு முன்னிருப்பதையும், அவர்களுக் குப் பின்னால் இருப்பதையும் அவன் நன்கறிவான். ஆனால் அவர்கள், அதை(த் தங்கள்) கல்வியறிவின் மூலம் அறிய மாட்டார்கள்'.** (தாஹா:110).

ஜஹ்மிய்யாக்களையும், அவர்களைப் பின்பற்றியவர் களையும் இப்படி, அல்லாஹ்வின் பண்புகளை நிரா கரிக்கவைத்தது எது என்றால், அல்லாஹ்வைப் பற்றிய அவர்களின் அறியாமையும், அவனைப் பற்றிய பிழையான விளக்கமும்தான். அவர்கள் கருதியதெல்லாம், 'அல்லாஹ்வுக்கு இந்தப் பண்பு கள் இருக்கின்றன என்று நாம் ஏற்றுக் கொண்டால், படைப்புகளுடன் அல்லாஹ்வை ஒப்பிட்டவர்களாக மாறிவிடுவோம்'. ஏனென்றால், இந்தப் பண்புகள் அனைத்தும், படைப்புகளுக்கும் இருக்கின்றன. எனவே இந்தப் பண்புகளை நிராகரித்தால்தான், நாம் அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தியவர்களாக மாறு வோம்! என்பதுதான்.

இவர்கள், படைப்பாளனின் பண்புகளையும், படைப் பினங்களின் பண்புகளையும் ஒன்றாகக் கருதினர். படைப்பினங்களின் பண்புகளை வைத்துத்தான், படைத்தவனின் பெயர்களையும், பண்புகளையும் விளங்கினர். அதனால்தான் இவர்கள் படைப்பாள னின் பண்புகளை நிராகரித்தனர்.

'ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்றதுபோல், அவற்றின் அமைப்புகள் இருக்கும்' என்ற, இந்த ஏழ்மையான உண்மையைக் கூட இவர்களால் புரிந்து கொள்ள முடிவில்லை. படைப்பாளனின் பண்புகள், அவனுக் கு எப்படித் தகுதியோ அப்படி, அவனுக்கு

மட்டுமே அவை குறிப்பானவையாக இருக்கும். படைப்பினங்க ளின் பண்புகள், அவைகளுக்கு எப்படித் தகுதியோ, அப்படியிருக்கும் என இவர்கள் விளங்கவில்லை.

உலகிருக்கும் பொருள்களிலேயே இவ்வித்தியாசங் கள் பல வெளிப்படுவதை நாம் அவதானிக்கலாம். 'செவிப் புலன்' என்ற இந்தக் காது, மனிதர்களுக்கு இருப்பதைப் போன்று, யானைக்குக் கிடையாது. ஆனாலும் இரண்டுமே 'காது' அல்லது 'செவி' என்றுதான் அழைக்கப்படுகிறது.
எனவே ஒரே பெயர்கொண்டு அழைக்கப்படும் இவ் வுறுப்பு, மனிதனுக்கு வேறமைப்பு, யானைக்கு வேறமைப்பு எனும் போது, இவைகளையெல்லாம் படைத்த, அந்த றப்புல் ஆலமீனான, அல்லாஹ் வுடைய பெயர்களும், பண்புகளும் எப்படி படைப்பு களின் பெயர்களுக்கும், பண்புகளுக்கும் ஒப்பாயி ருக்கமுடியும்?!. அப்படி ஒப்பாயிருக்கவே முடியாது என்று அல்லாஹ்வே கூறுகிறான்: **'அவனைப்போன்று எப்பொருளும் இல்லை. அவன்தான், (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்'.** (அஷ் ஷூறா:11).

மேலும் ஓரிடத்தில்: **'அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை'.** (அல்இக்லாஸ்:4).

எனவே, இவைகளெல்லாம் அறிவிக்கும் செய்தி: அல்லாஹ்வின் பண்புகளை, அப்படியே உறுதிப்ப டுத்துவது, எந்த வகையிலும், படைப்புகளுடன் அல்லாஹ்வை ஒப்பாக்கியதாக மாறாது என்பதையே!.

இதுதான், அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் அடிப்படையாகும். அவர்கள், தங்கள் கொள்கையை குர்ஆன், ஹதீஸை அடிப்படையாக வைத்து அமைத்துக்கொண்டனர்.
ஆனால் ஜஹ்மிய்யாக்களும், அவர்களின் மாணவர் களான முஃதஸிலாக்களும், அஷ்அரிய்யாக்களும், தங்களின் சிந்தனையை அடிப்படையாக வைத்து, அவர்களின் கொள்கையை அமைத்துக்கொண்டனர். அதனால் அவர்கள், அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும், ஒன்றில் அவற்றுக்குரிய உண்மை

யான கருத்துக்களை மாற்றி, வேறு கருத்துக்கள் கொடுப்பர். அல்லது அவற்றுக்குக் கருத்தேயில்லை என்று சொல்லிவிடுவர். இது, அவர்களின் சிந்தனையின் அடிப்படையிலும், பேத புத்தியின் அடிப்படையிலும், அவர்கள் கொடுக்கும் விளக்கமாகும். இந்தப் பேத புத்தி, குர் ஆனுடனும், ஹதீஸுடனும் ஒப்பிடத் தகுதியானதா?.

அல்லாஹ்தான் இவர்களுக்கு நேர்வழி காட்டப் போதுமானவன்.

## ஸலபுகளின் போக்கிலிருந்து வழிதவறி, அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புகளையும் நிராகரித்தவர்களுக்கான மறுப்பு

அல்லாஹ்வுடைய பெயர்கள், பண்புகளில், ஸலபுக ளின் கொள்கையிலிருந்து வழிதவறிய மக்கள், இரு பிரிவினராகும்:
1- ‘அல்முஷப்பிஹஹ்’ என்றழைக்கப்படும், அல்லாஹ்வின் பண்புகளை, படைப்புகளின் பண்புக ளுடன் ஒப்பிடுபவர்கள்.

2- ‘அல்முஅத்திலஹ்’ என்றழைக்கடும், அல்லாஹ் வின் பண்புகளை மறுத்தவர்கள்.

- ‘முஷப்பிஹஹ்’ என்று அழைக்கப்படுபவர்கள், அல்லாஹ்வின் பண்புகளைப், படைப்புகளின் பண்பு களுக்கு முழுமையாக ஒப்பிட்டவர்கள். இதனால் தான் இவர்களுக்கு ‘ஒப்புவமைக்காறர்கள்’ எனப் பெயர் வந்தது.

இந்தக் கருத்தை, முதலில் அறிமுகப்படுத்தியவர், ஷீயாக்களில், ‘றாபிழா’ எனும் பிரிவைச் சேர்ந்த ‘ஹிஷாம் பின் ஹகம்’ என்று அழைக்கப்பட்டவ ரும், தமீமாக் கோத்திரத்தைச் சேர்ந்த, ‘பயான் பின் ஸம்ஆன்’ எனும் ஷீயாவுமாகும்.
அல்லாஹ்வின் பண்புகளை உறுதிப்படுத்துவதில் இவர்கள், அளவுகடந்து சென்றனர். எதுவரை யெனில், அல்லாஹ்வுக்கு இருக்கமுடியாத, குறைபா டுள்ள பண்புகளைக்கூட, அல்லாஹ்வுக்கு இருப்ப தாக இவர்கள் கூறினர். இவர்களில் முக்கியமாவர் கள்தான், ‘ஹிஷாம் பின் ஸாலிம் அல்ஜவாலீகி’, ‘தாவூத் அல்ஜவாரிபி’ எனப்படுபவர்கள்.

இவர்களின் வர்ணிப்பை விட்டும், அல்லாஹ் மிகத் தூயவன். அவன் இவ்வாறு தன்னை வர்ணிப்பதைத் தடுத்திருக்கிறான். அல்லாஹ் கூறுகிறான்:

**‘அவனைப் போன்று எப்பொருளும் இல்லை’.**

(அஷ்ஷூறா:11).

**‘(பெயர்களில், வல்லமைகளில் மற்றும் தன்மைகளில் அல்லாஹ்வுக்கு) நிகரானவனை நீர் அறிவீரா?’.**

(மர்யம்:65).

**‘அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை’.**

(அல்இக்லாஸ்:4).

**‘ஆகவே நீங்கள், அல்லாஹ்வுக்கு உதாரணங்களைக் கூறாதீர்கள்’.** (அந்நஹ்ல்).

யார், அல்லாஹ்வின் பண்புகளை, படைப்புகளின் பண்புகளுக்கு ஒப்பிடுகிறாரோ அவர், யதார்த்தத் தில் அல்லாஹ்வை வணங்கவில்லை. மாறாக அவர், தனது சிந்தனையில் கற்பனை செய்திருக்கும் சிலை யை, செதுக்கி வைத்திருக்கும் உருவத்தை வணங்கு கிறார். அவர் சிலை வணக்கம் செய்தவராவார்.

இப்னுல் கையும்(றஹி) அவர்கள் கூறுகிறார்கள்:
‘நாங்கள், எங்களின் பண்புகளைக் கொண்டு, அல்லாஹ்வின் பண்புகளை வர்ணிக்கமாட்டோம். ஏனெனில், யார் இவ்வாறு வர்ணிக்கிறாரோ, அவர் சிலை வணக்கம் செய்தவராவார்’.

படைத்தவனின் பண்புகளை, படைப்பினத்தின் பண்புகளுடன் ஒப்பிட்டவன், கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாகிவிட்டான். அவர்கள்தான் ஈஸா(அலை) அவர்களைக் கடவுள் என்று சொல்லி, அவரை வணங்குபவர்கள்.

இமாம் புகாரி(றஹி) அவர்களின் ஆசிரியரான, நுஅய்ம் பின் ஹம்மாத் எனும் அறிஞர் அவர்கள் சொல்கிறார்கள்: ‘யார் அல்லாஹ்வை, படைப்புக ளுக்கு ஒப்பிட்டாரோ, அவர் காபிராகிவிட்டார். அவ்வாறே, யார் அல்லாஹ், தனக்கு இருப்பதாகச் சொன்ன பண்புகளை நிராகரிக்கிறாரோ, அவரும்

காபிராகிவிட்டார். அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களும், அல்லாஹ்வுக்கு இருப்ப தாக உறுதிப்படுத்திய பண்புகளுக்கு ஒப்புவமை கிடையாது'.

- 'முஅத்திலாக்கள்' என்றழைக்கப்படுபவர்கள், அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்க ளும், அல்லாஹ்வுக்கு இருப்பதாகச் சொல்லிய பண்புகளை நிராகரித்தவர்கள். இவர்களின் வாதம்: 'இந்தப் பண்புகளை, அல்லாஹ்வுக்கு இருப்பதாக உறுதிப்படுத்தினால், அவனைப் படைப்புகளுக்கு ஒப்பாக்கியவர்களாக நாம் ஆகிவிடுவோம்' என்பது தான்.

இந்தக் கொள்கை, யூதர்களின் சீடர்களிடமிருந் தும், முஷ்ரிகீன்களிடமிருந்தும், வழிகெட்ட ஸாபி ஈன்களிடமிருந்தும் எடுக்கப்பட்டதாகும். இந்தக் கொள்கையை, இஸ்லாத்துக்குள் ஆரம்பித்தவன், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த, 'ஜஃத் பின் திர்ஹம்' என்பவனாகும். இவனிடமிருந்து இதனைக் கற்று, இதனைப் பிரச்சாரம் செய்தவன், 'ஜஹ்ம் பின் ஸப்வான்' என்பவனாகும். இதனால்தான் இவனுடைய பெயரைத் தொடர்புபடுத்தி, இந்த அமைப்பு, 'ஜஹ்மிய்யா' என அழைக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, முஃதஸிலாக்கள், அஷ் அரிய்யாக்கள் என, இதில் இணைந்து கொண்டனர்.
இந்தக் கொள்கையின் அடிப்படை, யூதர்களின் பக்கமும் ஸாபிஈன்கள், முஷ்ரிகீன்கள், பெலோஸிப வாதிகள் ஆகியோரின் பக்கமும் மீள்கிறது.

இப்படி அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புக ளையும் நிராகரிக்கும் இவர்களுக்கு மத்தியில், அந் நிராகரிப்பில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு.

ஜஹ்மிய்யாக்கள், பொதுவாக அல்லாஹ்வின் பெயர் கள், பண்புகள் அனைத்தையும் நிராகரிப்பர். முஃத ஸிலாக்கள், அல்லாஹ்வின் பண்புகளை மட்டும் நிராகரிப்பர். பெயர்களின் கருத்துக்களை நிராகரித்து விட்டு, அப்பெயர்களை மட்டும் ஏற்றுக்கொள்வர்.

அஷ்அரிய்யாக்கள், அல்லாஹ்வின் பெயர்கள் அனைத்தையும், பண்புகளில், (7) ஏழு பண்புகளை மட்டும் ஏற்றுக்கொள்வர்.
இவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஏழு பண்புகளாவன:
அறிவு, வாழ்வு, சக்தி, நாட்டம், கேள்வி, பார்வை, பேச்சு ஆகியனவாகும். ஏனைய பண்புகள் அனைத் தையும் இவர்கள் நிராகரிக்கின்றனர்.

அல்லாஹ்வின் பண்புகளை நிராகரிக்கும், இவர்கள் எல்லோருடைய சந்தேகமும், வாதமும் என்ன வென் றால்: 'அந்தப் பண்புகளை அல்லாஹ்வுக்கு உறுதிப் படுத்தினால், அல்லாஹ்வைப் படைப்புகளுடன் ஒப்பாக்கி, அவனுக்கு உருவம் கற்பித்தவர்களாக ஆகிவிடுவோம் எனும் தப்பெண்ணம்தான்.

இந்த அடிப்படையில், அல்லாஹ்வின் பண்புகள் சம்மந்தமாக வந்திருக்கும் வசனங்கள், ஹதீஸ்களை, இவர்கள் இரண்டுவிதமாக அணுகுவர்:

1- அந்தச் சொற்களை மட்டும் ஈமான்கொண்டு, அவற்றின் கருத்துக்களைக் கூறாமல் அப்படியே விட்டுவிடுதல். அவற்றின் கருத்துக்களை, அல்லாஹ் மட்டுமே அறிந்தவன் எனவும், அந்தச் சொற்கள், வெளிப்படையான எந்தப் பண்புகளையும் அறிவிக்க வில்லை எனவும் நிராகரித்தல். இந்தப் போக்கை, இவர்கள், 'ஸலபுகளின் போக்கு' எனப் பெயரிடுவ தோடு, 'இதுதான் ஈடேற்றமான போக்கு' எனவும் கூறுவர்.

2- அந்தச் சொற்களின் அடிப்படையான கருத்துக்ளை விட்டுவிட்டு, இவர்கள் உருவாக்கிய, புதிய கருத்துக்களை, அவற்றுக்குக் கொடுப்பது. இதனைத் தான், 'தஃவீல்' என்று சொல்வார்கள். இந்தப் போக்கை 'பிந்தியவர்களின் போக்கு' எனவும், இது தான், 'மிகவும் புத்திசாலித்தனமானதும், மிகவும் ஏற்புடையதும்' என்றும் கூறுவர்.

## இவர்களின் சந்தேகங்களுக்குரிய பதில்கள்

படைத்தவனின் பண்புகளை, படைப்பினங்களுக்கு ஒப்பிடுவதை, அல்குர்ஆன் தடைசெய்கிறது என்ப தில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அல்லாஹ் பல இடங்களில் இதனைத் தெளிவுபடுத்துகிறான்:

**'அவனைப் போன்று எப்பொருளும் இல்லை'.**

(அஷ்ஷூறா:11).

**'(பெயர்களில், வல்லமைகளில், மற்றும் தன்மைகளில் அல்லாஹ்வுக்கு) நிகரானவனை நீர் அறிவீரா?'.**

(மர்யம்:65).

**'அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை'.**

(அல்இக்லாஸ்:4).

**'ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு உதாரணங்களைக் கூறாதீர்கள்'.** (அந்நஹ்ல்).

**'அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்'.**

(அல்பகறா:22).

ஆனாலும், அல்லாஹ், தன்னைப் படைப்புகளுக்கு ஒப்பிடுவதைத் தடைசெய்யும் ஆதெநேரம், தனக்கு பூரணத்துவம் மிக்க பண்புகள் இருப்பதாக உறுதிப் படுத்துகிறான். அல்லாஹ் கூறுகிறான்: **'அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன்தான், (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்'.**

(அஷ்ஷூறா:11).

இந்த வசனத்தில் அல்லாஹ், தன்னைப் படைப்புக ளுடன் ஒப்பிடுவதைத் தடைசெய்யும் அதேநேரம், தனக்கு கேள்வி, பார்வை என்ற பண்புகள் இருப்ப தை உறுதிப்படுத்துகிறான். எனவே அல்லாஹ்வுக்கு இருக்கும் பண்புகளை உறுதிப்படுத்துவது, அவற் றைப் படைப்புகளுடன் ஒப்பிடுவதாக ஆகாது.

இதேபோன்று, பல அல்குர்ஆன் வசனங்களில் அல்லாஹ், தனக்கிருக்கும் பண்புகளை உறுதிப் படுத்திவிட்டு, அதற்குப் பக்கத்திலேயே, தனக்கு ஒப்புவமை கிடையாது என நிராகரிக்கிறான். இது தான், ஸலபுகளின் வழியுமாகும். அவர்கள்,

அல்லாஹ்வின் பண்புகளை அப்படியே உறுதிப்படுத் துவர். படைப்புகளுடன் அப்பண்புகளை ஒப்பிடாம லிருப்பர்.

அல்லாஹ்வின் பண்புகளை, அவனுக்கு இருப்பதாக உறுதிப்படுத்துவது, அவனுக்குப் பொருத்தமில்லாத ஒரு காரியமாகும். ஏனென்றால், அது படைப்புகளு டன் அவனை ஒப்பிடுவதாக அமைகிறது என யார் கருதுகிறாரோ, அவருடைய பிழையான சிந்தனை தான் அவரை இவ்வாறு நினைக்கவைத்தது.

இவ்வாறு இவர் கருதியதால், இரண்டு வகையான பிழைகளையும் இவர் செய்கிறார். ஆரம்பமாக அல்லாஹ்வின் பண்புகளை, படைப்பினங்களின் பண்புகளுடன் ஒப்பிடுகிறார். பின்னர் அந்தப் பண் புகளையே நிராகரிக்கிறார். இந்த இரண்டு விடயங்க ளுமே, அல்லாஹ்வின் விடயத்தில் செய்யக்கூடாத விடயங்களாகும். இவர் ஆரம்பத்தில், அல்லாஹ் வைப் பற்றியும், அவனுடைய பண்புகள் பற்றியும், தூய்மையான, அவைகள் படைப்புகளின் பெயர்க ளுக்கும், பண்புகளுக்கும் ஒப்பில்லாதவை என, இவருடைய உள்ளத்தினால் நம்பிக்கை கொண்டிருந் தால், இவ்வாறு நிராகரித்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. மாறாக உடனடியாக அந்தப் பண்பு களை அவர் ஏற்று, உறுதிப்படுத்தியிருப்பார்.

எனவே அல்லாஹ்வுக்கு இருப்பதாகச் சொல்லப்பட் டிருக்கும் பண்புகளை உறுதிப்படுத்திய, நல்ல மக்களைப் பார்த்து, ‘இவர்கள் அல்லாஹ்வைப் படைப்புகளுடன் ஒப்பிட்டவர்கள்’ எனவும், ‘அவ னுக்கு உருவம் கற்பிப்பவர்கள்’ எனவும், விமர்சிக் கும் இவர்கள்தான், உண்மையில் அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புகளையும், படைப்புகளின் பெயர்களுக்கும் பண்புகளுக்கும் ஒப்பிட்டவர்கள். அதனால்தான் அவர்கள், அந்தப் பண்புகளை நிராக ரித்தனர். இவர்கள் அந்தப் பண்புகளை நிராகரித் ததே, படைப்புகளின் பண்புகளோடு, அல்லாஹ்வின் பண்புகளை முதலில் ஒப்பிட்டதால்தான்.

இமாம் இப்னு குஸைமா(றஹி) அவர்கள், இந்த ஜஹ்மிய்யாக்களுக்கு பதிலளிக்கும்போது, பின்வரும்

கருத்துக்களை முன்வைத்தார்கள்: அல்லாஹ்வின் சாபக்கேட்டுக்குரிய ஜஹ்மிய்யாக்கள், அல்குர் ஆனையும், நபியவர்களின் சுன்னாவையும், பின்பற் றுகின்ற அஹ்லுஸ் ஸுன்னாக்களைப் பார்த்து, இவர்கள், அல்லாஹ்வுக்கு, படைப்புகளை ஒப்பிடுப வர்கள் எனவும், அவனுக்கு உருவம் கற்பிப்பவர் கள் எனவும், அவர்களின் அறிவீனத்தினால் உளறு கின்றனர்.

இது அவர்களின் அறிவீனத்தையும், குர்ஆனை யும், சுன்னாவையும், அவர்கள் விளங்காத தன்மை யையும்தான் காட்டுகிறது.
நாங்களும், உலகின் அனைத்துப் பகுதிகளில் இருக் கும் எமது உலமாக்களும், அல்லாஹ், அவனுடைய வேதத்தில் கூறியதுபோல், அல்லாஹ்வுக்கு முகம் இருக்கிறது என்றும், அது கண்ணியத்துக்குரியது, சங்கைமிக்கது எனவும், அது அழிவில்லாமல் நிலைத்திருக்கக்கூடியது எனவும், அந்த முகம் ஒளி மிக்கது, பிரகாசமானது எனவும், அது வெளிப்பட் டால், அவனுடைய பார்வையின் ஒளியினால், அந்தப் பார்வை பட்ட இடங்களெல்லாம் கருகி விடும் எனவும் கூறுகிறோம்.
அதேநேரம் மனிதனுக்கும் முகம் இருக்கிறது, அது அழியக்கூடியது, அத்தோடு மனிதனுடைய அந்த முகம், புதிதாகப் படைக்கப்பட்டது, ஆரம்பத்தில் இல்லாமலிருந்த அதனை, அல்லாஹ் படைத்தான். அத்தோடு, மனிதர்கள் எல்லோருடைய முகங்களும் அழியக்கூடியவை. அவை அனைத்தும் மரணத்தை அனுபவிக்கும். பின்னர் மண்ணோடு மண்ணாக ஆகிவிடும். பின்பு, அல்லாஹ் அவற்றை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்புவான். இறுதியில், ஒன்று சுவர்க்கம், அல்லது நரகம் என்றாகிவிடும்.

இவ்வாறு கூறுவதை, எந்த ஒரு நல்ல சிந்தனை, புத்தியுள்ள மனிதனாவது, அல்லாஹ்வின் முகத்தை மனிதர்களுடைய முகங்களுடன் ஒப்பிட்டு விட்டீர் கள் என்று கூறுவானா?, அல்லாஹ்வுடைய முகமாக வர்ணிக்கப்பட்டது, மனிதர்களுடைய முகங்களுடன் எந்த வகையிலாகுதல் ஒப்பிடப்படமுடியுமா??. நிச்ச யமாக இல்லை.

இதனை ஒப்பீடு என்றால், மனிதனுக்கும் முகம் இருக்கிறது, பன்றி, குரங்கு, ஐவாய் மிருகங்கள், கழுதை, பாம்பு, பூரான், தேள், பருந்து, பல்லி, நாய் போன்றவற்றுக்கும் முகங்கள் இருக்கின்றன, என்று ஒருவர் சொன்னால், அவர் மனிதனுடைய முகத்தை,

பன்றி, குரங்கு, ஐவாய் மிருகங்கள், கழுதை, பாம்பு, பூரான், தேள், பருந்து, பல்லி, நாய் போன்ற மிருகங்களின் முகங்களுக்கு ஒப்பாக்கிவிட்டார் என்று கூற முடியுமா?, நல்ல புத்தியுள்ள, எந்த ஒரு மனிதரும் இவ்வாறு கூறமாட்டார். ஏனெனில் ஒவ்வொரு படைப்புகளுக்கும், அதற்குரிய அமைப் பில் முகங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன.

படைப்புகளுக்குள்ளேயே ஒரே பெயருள்ள உறுப்பு, பல தரப்பட்டவையாக இருக்கும்போது, படைத்த றப்புல் ஆலமீனுடைய பெயர்கள், பண்புகள் எப்படி இவைகளுக்கு ஒப்பாயிருக்கும்?, அவை படைப்பி னங்களின் பண்புகளுக்கு முழக்கமுழுக்க வித்தியா சம் என்றுதானே அல்லாஹ் கூறுகிறான்:

**‘அவனைப் போன்று, எப்பொருளும் இல்லை. அவன்தான் (யாவற் றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்’.**

(அஷ்ஷூறா:11).

எனவே, அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதர்(ஸல்) அவர் களும் சொல்லிய பிரகாரம் உறுதிப்படுத்துவது, என்றுமே அல்லாஹ்வை, அவனுடைய படைப்புக ளுக்கு ஒப்பிட்டதாக முடியாது!.

அல்லாஹ், அவனுடைய வேதத்தில், பல இடங்க ளில் அவனைப் பற்றி வர்ணிக்கிறான். அவனுடைய அடியார்களுக்கு, அவன் பார்க்கக்கூடியவன், கேட் கக்கூடியவன் எனச் சொல்லிக்கொடுக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான்: **‘அவன்தான், (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்’.** (அஷ்ஷூறா:11).

அதேபோல் மனிதனைப் பற்றிச் சொல்லும்போது:

**‘அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கி னோம்’.** (அல்இன்ஸான்:2).

அல்லாஹ் தன்னை அவதானிக்கக்கூடியவன் என, அறிமுகப்படுத்துகிறான்: **‘(நபியே) நீர் கூறும்! ‘நற் செயல்களைச் செய்யுங்கள். திடனாக உங்கள் செயல்களை, அல்லாஹ்வும் அவன் தூதரும், முஃமின் களும் அவதானித்துக் கொண்டுதானிருப்பார்கள்’.**

(தவ்பா:105).

நபி மூஸா (அலை), ஹாறூன்(அலை) அவர்களிடம், அல்லாஹ் பின்வருமாறு கூறினான்: **‘நீங்களிருவரும் அஞ்சவேண்டாம். நிச்சயமாக நான், (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், பார்ப்பவனாகவும், உங்களிரு வருடனும் இருக்கிறேன்’.** (தாஹா:46).

இந்த வசனங்களில் அல்லாஹ், தன்னைக் கண்கா ணிப்பவன் என்று வர்ணிக்கும் அதேநேரம், அவ னுடைய றஸூல்மார்களையும், முஃமின்களையும் கூட கண்காணிக்கக்கூடியவர்கள் என்று வர்ணிக்கி றான்.

மேலும் ஓரிடத்தில்: **‘நம் பார்வையில், கப்பலைக் கட்டும் (என்று நாம் கூறினோம்)’.** (ஹூத்:37).

இவ்வசத்தில் அல்லாஹ், தனக்குக் கண்கள் இருப்ப தாக உறுதிப்படுத்துகிறான்.

மனிதர்களுக்கும் கண்கள் இருப்பதாகச் சொல்கி றான்: **‘அவர்களின் கண்கள், கண்ணீர் வடிப்பதை நீர் காண்பீர்’.** (மாஇதா:83).

இப்லீஸுக்கு அல்லாஹ் கூறினான்: **‘இப்லீஸே! நான் என்னுடைய கைகளால் படைத்தவருக்கு, ஸூ ஜூ து செய்வதை விட்டும் உன்னைத் தடுத்தது எது?’.** (ஸாத்:75).

இன்னுமொரிடத்தில்: **‘அல்லாஹ்வின் இரு கரங்களும் விரிக்கப்பட்டே இருக்கின்றன’.** (மாஇதா:64).

இவ்வசனங்களில் அல்லாஹ், தனக்கு இரு கைகள் இருப்பதாக உறுதிப்படுத்தும் அதேநேரம், மனிதர்க ளுக்கும், கைகள் இருப்பதாகக் கூறுகிறான்.

இந்த வசனங்களிலெல்லாம் அல்லாஹ், தனக்கு இந்தப் பண்புகள் எல்லாம் இருப்பதை உறுதிப் படுத்துவது, படைப்புகளுக்கு அவனை, அவனே ஒப்பிடுவதாக மாறுமா?!. முடியாது. முடியவே முடியாது. இது அறிவீனர்களின் கூற்றும், போக்கும் தவிர வேறில்லை.

மேலும், பெரும்பெரும் இமாம்களெல்லாம், இந்த வழிகெட்ட ஜஹ்மிய்யாக்களுக்கும், அவர்களைப் பின்பற்றியோருக்கும் மறுக்கமுடியாத பதில்களும் மறுப்புக்களும் கொடுத்திருக்கின்றனர்.

இந்த வசனங்களுக்குரிய கருத்துக்களை, அல்லாஹ் மட்டும்தான் தெரிந்தவன். வேறு யாரும் அவற்றை அறியமாட்டார்கள். ஏனென்றால், அவைகளுக்கு வெளிரங்கமான கருத்துக்களைக் கொடுக்க முடியாத, முதஷாபிஹத்தான வசனங்கள் என்றும், ஸலபுகள் இப்படித்தான் செய்தார்கள் என்றும், இவர்கள் கூறு கின்றனர்.

இவர்களின், இந்தப் பொய்யான கூற்றுக்கு, ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா(றஹி) அவர்கள், விளக் கமளிக்கும்போது: ‘அல்லாஹ்வின் பண்புகளை நிரா கரிக்கும் இவர்களின் கூற்றான: ‘இவைகளின் கருத் துக்களை, அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். எனவே அவற்றின் வெளிப்ப டையான கருத்துக் ளைவ ிட்டும், வேறு கருத்துக்க ளுக்குத் திருப்பவேண்டும்’ என்ற இந்த வாதம், எதனைக் குறிக்கிறது என்றால், நபிமார்கள், மலக்கு மார்கள் உட்பட, யாருமே இவற்றின் கருத்துக்களை அறியமாட்டார்கள். அந்த றஸூல்மார்கள், தாங்கள் அறியாத விடயங்களை மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தனர். அல்லாஹ்வும், அவர்களுக்கு விளங் காத அமைப்பிலேயே, அவற்றை இறக்கி வைத்தான் என்பதையாகும்.

இந்த வாதம், குர்ஆனை, நபிமார்களையெல்லாம் குறைகூறும் வாதமாகும். அல்லாஹ் அல்குர்ஆனை, நேர் வழிகாட்டியாகவும், மனிதர்களுக்கு தெளிவைக் கொடுக்கக்கூடியதாகவும் ஆக்கி, தூதரை, அவருக்கு இறக்கிவைக்கப்பட்டவற்றை பகிரங்கமாக

எத்திவைக் குமாறும் கூறுகிறான். அத்தோடு அல்குர்ஆனை ஆராய்ந்து, படிப்பினை பெறுமாறும் கட்டளையிடு கிறான். அத்துடன் அவனுடைய பெயர்களையும், பண்புகளையும் அறிவிக்கிறான். அவன் அனைத்தை யும் படைப்பவன் என்றும், அவனே அனைத்தை யும் அறிந்தவன் எனவும் விபரிக்கிறான். அத்துடன் அந்த அல்குர்ஆனில், தன்னுடைய கட்டளைகள், விலக்கல்கள், வாக்களிப்புகள், எச்சரிக்கைகள், மற்றும் மறுமைநாள் தொடர்பான செய்திகள் எல்லா வற்றையும் அவன் கூறுகிறான். இவைகள் எதையு மே விளங்கவோ, ஆய்வு செய்யவோ முடியாது. தூதரும் இதனைத் தெளிவு படுத்தவில்லை என்று, சொல்லுகின்ற வாதமாகத்தான் இது இருக்கிறது.

அல்லாஹ்வுடைய பெயர்கள், பண்புகளுக்கு, ஸலபு கள் அர்த்தம் கொடுக்காமல், அல்லாஹ்வுக்குத்தான் அவற்றின் கருத்துக்கள் தெரியும் எனவும், அவை கள் முதஷாபிஹத்தான வகைகளில் உள்ளவை என வும், அவர்கள் கூறினார்கள் எனச்சொல்வது ஆதா ரமில்லாத ஒரு கூற்றாகும். அவர்கள் இவ்வாறு கூறியதற்கு எங்கே ஆதாரம் இருக்கிறது?.

ஸலபுகளில் எந்த அறிஞர்களும், அல்லது எந்த இமாம்களும், அல்லாஹ்வுடைய பெயர்கள், பண்பு கள் விடயத்தை, முதஷாபிஹத்தான வகையில் சேர்த்ததாகத் தெரியவில்லை. இமாம் அஹ்மது(றஹி) அவர்களும் இவ்வாறு கூறவில்லை. மாறாக, இவர் கள் அனைவரும் இவ்விடயத்தில் சொன்னதெல் லாம்: 'அவைகள் எப்படி வந்திருக்கின்றனவோ அப்படியே எடுக்கவேண்டும்' என்பதுதான்.

ஜஹ்மிய்யாக்கள், அல்லாஹ்வின் பெயர்கள், பண்பு களுக்குக் கொடுத்த, மாற்றுக் கருத்துக்களுக்கெல் லாம் பதிலடி கொடுத்து, அவர்களின் வாதங்களைத் தவிடு பொடியாக்கியவர்கள் இந்த ஸலபுகள்தான், அத்தோடு அவைகளுக்குரிய வெளிப்படையான கருத்துக்களையும் கொடுத்து, அவற்றை மக்களுக்கு தெளிவும் படுத்தினர்.

இந்த வரிசையில்தான், இமாம் மாலிக்(றஹி) அவர்க ளின் கூற்றையும் நாம் காணலாம்: **'அர்றஹ்மான், அர்ஷின் மீது அமைந்தான்'.** (தாஹா:5).
என்ற வசனத்தில், இவ்வாறு கேள்விகேட்கப்பட்டது: 'அர்ஷில் அவன் எப்படி அமைந்தான்?':
அப்போது இமாம் மாலிக்(றஹி) அவர்கள்: 'அமை தல் என்பது தெரிந்த விடயம். ஆனால் அது எப்படி என்பதுதான் தெரியாத விடயம். இருந்தாலும் அதனை ஈமான்கொள்வது கடமையாகும். அது எப்படியெனக் கேள்விகேட்பது பித்அத்' எனப் பதிலளித்தார்கள்.

எனவே, ஸலபுகள் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளுக்குக் கருத்துக்கொடுக்காமல், அப்படியே விட்டுவிட்டார்கள் என்ற கருத்து, அவர்கள் மீது இட்டுக்கட்டப்பட்ட பொய்யாகும்.

இமாம் இப்னு கதீர்(றஹி) அவர்கள், **'நிச்சயமாக, உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான், ஆறு நாட்க ளில் வானங்களையும், பூமியையும் படைத்து, பின்னர் அர்ஷின் மீது தன் ஆட்சியை அமைத்தான்'.**
(அஃறாப்:54, யூனுஸ்:3).
என்ற வசனத்துக்கு விளக்கம் சொல்லும்போது:
'இந்த இடத்தில், மக்கள் பல கருத்துக்களையும் கூறுகின்றனர்... ஆனால் நாம், ஸலபுஸ் ஸாலிஹீன் களான, மாலிக், அவ்ஸாயி, தவ்ரீ, லைத் பின் ஸஃத், ஷாபிஈ, அஹ்மத், இஸ்ஹாக் பின் றாஹவைஹி மற்றும் பல இஸ்லாமிய அறிஞர்களின் போக்கைப் பார்ப்போம். அவர்கள் அனைவரும், 'அவை எப்படி வந்திருக்கின்றனவோ அப்படியே எடுக்கவேண்டும். மற்றும் அவற்றுக்கு எதனையும் ஒப்பாக்கக்கூடாது. மேலும், அவற்றில் எதனையும் நிராகரிக்கவும் கூடாது. அது இப்படித்தான் இருக்கும் என்றும் உதாரணம் காட்டக்கூடாது' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்'.

'அல்லாஹ், அர்ஷில் ஆட்சியை அமைத்துக் கொண்டான்' என்று சொன்னால், அப்படியே அதற் குக் கருத்துக்

கொடுக்கவேண்டுமே தவிர, அவன் அர்ஷில் அமர்ந்திருக்கிறான், உட்கார்ந்திருக்கி றான், சாய்ந்திருக்கிறான், படுத்திருக்கிறான் என் றெல்லாம் கருத்துக்கொடுக்கக் கூடாது. அப்படிக் கருத்துக்கொடுப்பது, படைப்புகளுடன் படைப்பாள னான அல்லாஹ்வை ஒப்பாக்குவதாக அமையும். ஏனென்றால், 'இஸ்தவா' எனும் சொல்லுக்கு இந்தக் கருத்துக்கள் இல்லையென்பதையும், அதன் வெளிப் படையான கருத்தாகிய, 'அமைந்தான்' 'உயர்ந்தான்' என்ற கருத்துக்களைத்தான் நாம் கொடுக்கவேண்டும்.

அவ்வாறே, 'இஸ்தவா' எனும் சொல்லுக்குச் சிலர், 'இஸ்தவ்லா' என்ற, 'ஆக்கிரமித்தான்' எனும் கருத் தைக் கொடுக்கும் சொல்லைப் பயன்படுத்துகின்ற னர். இதனை, ஒரு முஸ்லிம் சொல்வது எப்படிப் போனாலும், கடவுள் நம்பிக்கையுள்ள ஒரு காபிர் கூட, அவனுடைய கடவுகளுக்கு இவ்வாறு சொல்ல மாட்டான். ஏனெனில் இது, கடவுளுக்கே இருக்க முடியாத, ஒரு பண்பைக் குறிக்கிறது. 'ஆக்கிரமித் தல்' என்பது, ஏற்கனவே வேறு யாரிடத்திலோ இருந்த 'அர்ஷை', பின்பு அல்லாஹ் அவரிடத்தில் இருந்து அபகரித்துக் கொண்டான் எனும் கருத்தை இது குறிக்கிறது.

அல்லாஹ் இவர்களின் வர்ணிப்புகளில் இருந்து மிகவும் உயர்வானவன்.

இமாம் புகாரி(றஹி) அவர்களின் ஆசிரியரான, நுஅய்ம் பின் ஹம்மாத் எனும் அறிஞர் அவர்கள் சொல்கிறார்கள்: 'யார் அல்லாஹ்வை, படைப்புக ளுக்கு ஒப்பிட்டானோ, அவன் காபிராகிவிட்டான். அவ்வாறே, யார் அல்லாஹ், தனக்கு இருப்பதாகச் சொன்ன பண்புகளை நிராகரிக்கிறானோ, அவனும் காபிராகிவிட்டான். அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களும், அல்லாஹ்வுக்கு இருப்ப தாக, உறுதிப்படுத்திய பண்புகளுக்கு ஒப்புவமை கிடையாது'.

எனவே அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் கொள்கை, 'அவைகளுக்குக்

கருத்துக்கள் உண்டு. அவற்றுக்குரிய கருத்துக்களைக் கொடுக்கவேண்டும். அவைகளைப் படைப்பினங்களின் பெயர்களுக்கோ, பண்புகளுக்கோ ஒப்பிடக்கூடாது. அவைகளை நிராக ரிக்கவோ அல்லது கருத்தில்லை என்று மறுக்கவோ கூடாது' என்பதாகும்.

ஆகவே, நேர் வழியில் சென்ற, அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் கொள்கையைப் பற்றிப் பிடித்து வெற்றிபெற்ற, நல்ல மக்களாக, அல்லாஹ் எம் அனைவரையும் ஆக்கியருள்வானாக!. ஆமீன்!!.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே!.

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**

1- சமர்ப்பணம்.................................01

2- முன்னுரை.................................02

3- இஸ்லாமியக் கொள்கை.........................04

4- கொள்கையை அறிவதன் அவசியம்.............11

5- கொள்கைக்கு மக்களை அழைத்தல்...........17

6- தொடக்கவுரை.................................24

7- அல்லாஹ்வை நம்புதல்.........................26

8- தவ்ஹீதுர் றுபூபிய்யாஹ்.........................27

9- தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ்....................32

10- றுபூபிய்யாவுக்கும் உலூஹிய்யாவுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்..............................40

11- உலூஹிய்யாவின் பக்கம் அழைப்பதில் குர்ஆனின் அணுகுமுறைகள்.................................49

12- உலூஹிய்யாவில் ஷிர்க் நிகழ்தல்..............58

13- இணைவைப்பை விட்டும் தவிர்ந்திருத்தல்......65

14- இணைவைத்தலின் பக்கம் கொண்டுசெல்லும் செயற்பாடுகள்.......................................68

15- உலூஹிய்யாவில் எழுப்பப்படும் சந்தேகங்களும் அவற்றுக்கான தெளிவுகளும்......................91

16- தவ்ஹீதுல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்..............99

17- அல்லாஹ்வின் பெயர்களை கண்ணியப்படுத்தல்..104

18- அல்லாஹ்வின் பெயர்களை தவறாகப் பயன்படுத் துவதன் வகைகள்............................106

19- இந்த விடயத்தில் ஸலபுகளின் நிலைப்பாடு....111

20- இந்த விடயத்தில் வழிகெட்டவர்கள் போக்கு..117

21- வழிகெட்டவர்களுக்கான மறுப்பு...............122

22- உள்ளடக்கம்..................................136

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالجبيل
JUBAIL DA'WAH & GUIDANCE CENTER

| எமது பணி | حَتَّى يَكُونَ الدِّينُ كُلُّهُ لِلَّهِ<br>மார்க்கம் முழுமையாக அல்லாஹ்வுக்கே ஆகும் வரை | رسالتنا |
|---|---|---|

## أهدافنا

١ –دعوة غير المسلمين للدخول في الإسلام والاستقامة عليه.

٢ –تفقيه المسلمين في الدين وفق الكتاب والسنة وتأهيلهم للدعوة إليه.

٣ –المساهمة في تطوير الدعوة إلى الله تعالى.

## எமது நோக்கம்

1~ முஸ்லிமல்லாத மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதும் அதில் அவர்களை நிலைத்திருக்க வைப்பதும்.

2~ அல்குர்ஆன், அல்ஹதீஸ் அடிப்படையில் முஸ்லிம்களுக்கிடையில் மார்க்க விளக்கத்தை ஏற்படுத்துவதும், அழைப்பாளர்களாக அவர்களை தரப்படுத்துவதும்.

3~ நவீன வழி முறைகளை பயன்படுத்தி அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியை முன்னெடுத்தல்.

| اسم البنك | كفالة الدعاة | العام | الكتب والأشرطة | الزكاة | صدقة جارية | المباني الوقفية |
|---|---|---|---|---|---|---|
| الراجحي | ١٤٦٦٠٨٠١٠٠٠٠٢٣٤ | ١٤٦٦٠٨٠١٠٠٠٠٢١٩ | ١٤٦٦٠٨٠١٠٠٠٠٢٦٨ | ١٤٦٦٠٨٠١٠٠٠٠٢٢٧ | | ١٤٦٦٠٨٠١٠٠٠٠٢٣٥ |
| الرياض | | ٣٠٨١٥٤٧٣٣٩٩٤٠ | | ٣٠٨١٥٤٧٤٥٩٩٤٠ | ٣٠٨١٥٤٧٥٧٩٩٤٠ | |
| الأهلي | | ٠٦٠٥٣٥٠١٠٠٠١١٠ | | ٠٦٠٥٣٥٠١٠٠٠٢٠٨ | ٠٦٠٥٣٥٠١٠٠٠٣٠٦ | |
| البريطاني | | ٠٤٩١٤٦٤٠٠٠٠١ | | | | |
| الهولندي | | ٠١٧١٤٦٨٤٤٠٠٤ | | | | |

هاتف: ٣٦٢٥٥٠٠ (٠٣) فاكس: ٣٦٢٦٦٠٠ (٠٣) ص. ب.: ١٥٨٠ الجبيل ٣١٩٥١
Telp. (03) 3625500 Fax. (03) 3626600 P.O. Box 1580 JUBAIL 31951
Website : www.jdcnet.org e-mail : info@jdcnet.org

புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி. கொடிக்கால் செல்லப்பா.

தீண்டாமை ஒழிப்பு. டாக்டர் சேப்பன்.

இஸ்லாம் உங்கள் இதயத்துடன் பேசுகிறது. எஸ். எம். மன்ஸூர்

இஸ்லாமிய வழி காட்டுதல்கள்.

தமிழில்: அப்துல் மஜீத் உமரி.

ஹிந்துக்களே விழுமின் எழுமின். டாக்டர் சட்டர்ஜி.

சுன்னத் வல்ஜமாஅத்தினரின் அடிப்படைக் கொள்கை. அஷ்ஷைக்: ஸாலிஹ் அல் உஸைமின் (ரஹ்).

இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்).

வஸீலா தேடுவதின் தெளிவான சட்டங்கள். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்).

தௌஹீதின் எதிர்ப்புக்குத் தக்க பதில்கள். அஷ்ஷைக்: முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்).

அலட்ச்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள். அஷ்ஷைக்: ஸாலிஹ் அல் முனஜ்ஜித்.

நபிகள் நாயகம் பற்றி பைபிள். அஹ்மத் தீதாத்.

பெரும் பாவங்கள். இமாம் தஹபி (ரஹ்).

முஹம்மத் (ஸல்) அவர்களின் நேர்முக வர்ணனை. தமிழில்: எம். ஐ. சுலைமான்.

இயேசுவின் மார்க்கம் இஸ்லாமா? கிறிஸ்தவமா? அபூ ஆசியா.

விடுதலை பெற இஸ்லாம் மார்க்கமே. டாக்டர் சேப்பன்.

இஸ்லாம் அழைக்கிறது. அப்துல்லாஹ் அடியார்.

முஹம்மத் இறைத்தூதர் ஏன்? அப்துல் காதிர் உமரி.

அண்ணலார் (ஸல்) அவர்களின் நபித்துவம் ஒரு பகுப்பாய்வு. டாக்டர் ஜமால் யு. பதாவி.
முறிந்த சிலுவை. ரியாஸ் பீட்டர்.
இஸ்லாம் தந்த மனித உரிமைகள். ரூஹுல் ஹக்.
திருமணம். அஷ்ஷைக்: ஸாலிஹ் அல் உஸைமின் (ரஹ்).
திருக்குர்ஆன் மீதான குற்றச்சாட்டுகளும் பதில்களும். எம். எம். அக்பர்.
இஸ்லாத்தின் மூன்று அடிப்படைக் கொள்கை ஒரு விளக்கம். அஷ்ஷைக்: முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்).
மோட்சத்திற்குரிய மார்க்கம். எம். எம். அக்பர்.
ஏனைய மதங்களின் கடவுட் கொள்கை. டாக்டர்: ஸாகிர் நாயக்.

## இந்த நூலிலிருந்து உங்கள் சிந்தனைக்காக சில கேள்விகள்:

1- தவ்ஹீத் மூன்று வகைப்படும், அந்த மூன்று வகைகளும் என்ன?

....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

2- நபி நூஹ் (அலை) அவர்களின் சமூகத்தில் ஷிர்க் தோன்றுவதற்கு காரணமாக இருந்தவைகள் யாவை?

....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

3- ஓரிறைக்கொள்கையின் பால் அழைப்பதில் அல்குர்ஆனின் அணுகுமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக!

....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

4- ஷிர்கின் பால் இட்டுச்செல்பவைகளை நபியவர்கள் தடுத்துள்ளார்கள். அவற்றில் மூன்றைக் குறிப்பிடுக!

....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

5- அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை ஒருவன் எவ்வாறு நம்ப வேண்டும்?

..................................................................................
..................................................................................
..................................................................................
..................................................................................

6~ அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் தொடர்பில் முஃதஸிலாக்கள், அஷாஇராக்களின் தவறான கொள்கைகள் என்ன?

.................................................................
.................................................................
.................................................................
..................................................................

7~ ஓரிறைக் கொள்கையின் அவசியத்தை உணர்த்தும் மூன்று ஆதாரங்களை குறிப்பிடுக!

.................................................................
.................................................................
.................................................................
..................................................................

8~ அல்லாஹ்வின் பெயர்களை ஒருவன் எவ்வாறு கண்ணியப்படுத்துவான்?

.................................................................
.................................................................
.................................................................
..................................................................

9~ 'அந்நாளில் செல்வமும், பிள்ளைகளும் (யாதொரு) பயனுமளிக்க மாட்டாது, எவரொருவர் பரிசுத்த உள்ளத்துடன் அல்லாஹ்விடம் வருகிறாரோ அவரைத் தவிர (அவர் கண்ணியம் அடைவார்)' இதன் வசன எண்ணையும், இது இடம் பெற்ற அத்தியாயத்தையும் குறிப்பிடுக!

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

10~ அல்லாஹ்வின் பெயர்கள் பண்புகள் தொடர்பில் தவறான கொள்கையுடவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் மறுப்பு யாது?

.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................